# தமிழரசு

திங்கள் இருமுறை நவ. 1, 1970 • 35 காசு



உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2

SANKAR IC CEMENT



மலிவு விலை
நகர்ப்புற வீடு

உறுதியானது, நிலையானது ஆனாலும் மலிவானது

# சங்கர் சிமெண்ட்

IS:269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1444TM



மலர் 1    1970 நவம்பர் 1    இதழ் 9

நாவலர் தாயகம் வந்தடைந்தார்
அகர முதல எழுத்தெல்லாம்
தொழிலே துணை
பல்லைப் பாதுகாப்போம்
பட்டுப் பூச்சி பார், பார்!
பரிசுக்குப் பரிசு
ஏரிக்காடு
கூடித் தொழில் செய்தால்
கோடி நலம் பெறலாம்
பிச்சைக்காரர் மறுவாழ்வு
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்போம்
பூவேதான் பூவை
வெண்பாப் போட்டி
முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

அடுத்த இதழ்?




லண்டன் வானொலியில் நாவலர் பேட்டி

வெளிநாட்டு அரசுகளின் அழைப்பின் பேரில் மேலை நாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட தமிழகக் கல்வி, பொதுநல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு பம்பாய் சென்று ஜெர்மனி வழியாக செப்டம்பர் 22-ஆம் நாள் பாரிஸ் போய்ச் சேர்ந்தார். அமைச்சருடன் அவரது துணைவியார் டாக்டர் (திருமதி) விசாலாட்சி நெடுஞ்செழியன், பள்ளிக்கல்வி இயக்குநர் திரு எஸ். வி. சிட்டிபாபு ஆகியோரும் சென்றனர்.

பாரிஸ் நகரில் ''யுனெஸ்கோ''வின் கல்விப்பிரிவினரால் நடத்தப் பட்ட சிறப்புக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். யுனெஸ்கோவின் துணை இயக்குநர் டாக்டர் மால்கம் ஆதிசேசையாவுடன் பேச்சு நடத்தினர். தமிழகத்தில் யுனெஸ்கோவின் நிதியுதவியுடன் துவக்க விருக்கும் அனைத்துலகத் தமிழ்க் கல்வி நிலையத்தினை 1971 ஜூலைத் திங்களுக்குள் நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த நிறுவனத்திற்கு 'யுனெஸ்கோ' சுமார் 3 லட்சம் ரூபாய் (40,000 டாலர்) நிதியுதவி தரவிருக்கிறது.

அங்கிருந்து 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ஆம் நாள் அன்று அவர்கள் லண்டன் மாநகர் வந்தடைந்தார்கள். விமான தளத்தில் இங்கிலாந்து நாட்டுத் தகவல் நிலையம், வெளிநாடு

காமன்வெல்த் உறவு அலுவலகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும், லண்டன் வாழ் தமிழ்மக்களும் அவர்களை மன மகிழ்வுடன் வரவேற்றனர்.

அங்கு அவர், இங்கிலாந்து நாட்டின், பொதுநல-சமூகப்பாதுகாப்பிற்கான மாநில அமைச்சர் அபெர்டேர் பிரபுவைச் சந்தித்தார். கல்வி இலாகா அதிகாரிகளையும் சந்தித்து உரையாடினர். அங்குள்ள சில பள்ளிகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றைப்பார்வையிட்டார். லண்டன் தமிழ்ச் சங்கத்தினர் அமைச்சருக்கு ஒரு வரவேற்பு விழா ஏற்பாடு செய்தனர். பாராட்டுகளுக்குப் பதிலளிக்கையில் இத்துணைத் தொலைவில் தமிழ்ச் சங்கம் அமைத்து நடத்தி வருவது பாராட்டுக்குரியது என்றும், தமிழ்ச் சங்கத்திற்கு உதவத் தமிழக அரசும், கல்வி நிறுவனங்களும் முன் வரும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அங்கு பி. பி. சி.க்கும் பத்திரிகையாளர்களுக்கும் அவர்பேட்டி தந்தார்.

லண்டனிலிருந்து விமானம் மூலம் அமைச்சர், குழுவினருடன் அமெரிக்க நாட்டிற்கு 25-ஆம் நாள் செப்டம்பர் 1970 அன்று பயணமாயினர். அந்நாட்டில் அமெரிக்க அரசு அவருக்காக 20 நாள் சுற்றுப்பயணத்திற்கான சிறப்பான சில ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

நியூயார்க் நகரிலுள்ள தமிழன்பர்களும், மாணவர்களும், பாரதி சங்கத்தினைச் சேர்ந்தவர்களும், கென்னடி விமான நிலையத்திற்குத் திரளாக வந்திருந்து அமைச்சரின்குழுவினரை வரவேற்றனர்.

நியூயார்க்கில் அமைச்சர் அவர்கள் 'கேர்' நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தைப் பார்வையிட்டார். அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். தஞ்சாவூரில் பள்ளிக்கூடங்களுக்காக வெற்றிகரமாக நடைபெறும் நடமாடும் ஆய்வுக் கூடத் திட்டத்தை (Mobile Laboratory Project) மற்றப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் படிக் கல்வி அமைச்சர் கேட்டுக் கொண்டார். அதனைப் பரிசீலனை செய்வதாக அதிகாரி உறுதி கூறினர். ''யுனிசெஃப்'' அலுவலகத்தையும் அமைச்சரின் குழுவினர் பார்வையிட்டனர். கிராமங்களில் பொதுநலத் திட்டம் பற்றி அங்கு பேசப்பட்டது.

அங்கிருந்து செப்டம்பர் 29-ம் நாள் அவர்கள் வாஷிங்டன் நகருக்குச் சென்றனர். அங்கு அவர்கள், தேசீயக் கல்விக் கழகம், அமெரிக்கக் கல்வி அலுவலகம், தேசீயப் பொது நல நிலையம் மற்றும் பல கல்வி-பொது நலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைப் பார்வையிட்டார்கள்.

கொலம்பியா பல்கலைக் கழக வானொலி நிலையத்தினர் அமைச்சரைப் பேட்டி கண்டு அதனை ஒலி பரப்பினர்.

அமெரிக்காவில், பஃபலோ என்ற பகுதியிலுள்ள குடியிருப்புகள் அமைக்கும் திட்டத்தினைக் கல்வி அமைச்சர் பார்வையிட்டார்.

சிக்காகோவிலுள்ள பாரதி கலாச்சாரக் கழகத்தினர் ஏற்பாடு செய்த, திரளான மக்கள் கூட்டத்தில் அமைச்சர் சிறப்பாக உரையாற்றினர்.

அங்கிருந்து அக்டோபர் திங்கள் 14ஆம் நாள் புறப்பட்டு, டோக்கியோ, ஆங்காங், பாங்காக், கோலாலம்பூர், சிங்கப்பூர் ஆகிய நகர்களுக்குச் சென்று விட்டு அக்டோபர் 28-ம் நாள் தாயகம் வந்தடைந்தார்.



பிரிட்டனின் உடல் நலத்துறை அமைச்சர் லார்டு அபர்டேருடன் நமது கல்வியமைச்சர் நாவலர், அவர்தம் துணைவியார், தமிழகக்கல்வி இயக்குநர் சிட்டிபாபு ஆகியோர்,


முதல்வர்
எழுதும்
இனியவை
இருபது
பயணக்
கட்டுரை

# 7. ரோமாபுரியின் பொற்காலம்

திவோலித் தோட்டத்தில் தானேஇயங்கும்புகைப்படக்கருவியில் எடுத்துக் கொண்ட படங்களைரசித்தவாறே ரோமாபுரிக்குக் காரில் திரும்பினோம். என் மனம் என்னும் கேமரா, ரோம் நாட்டு வரலாற்று நாயகர்களின் படங்கள் சிலவற்றை என் முன் விரித்து வைத்தது.

''என்றும் அழியாத நகரம்'' ( Eternal City ) என்று ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்பட்ட அந்த மண்ணின் கதைதான் எவ்வளவு விசித்திரமானது—எவ்வளவு சுவையானது!

ஜூலியஸ் சீசர், அந்தோணி, புரூட்டஸ், பாம்பே, கிளியோபாத்ரா, அகஸ்டஸ், கிளாடியஸ், நீரோ, மார்கஸ் அரிலியஸ் போன்ற பண்டைய ரோமானியர்களின் வரலாறும்; கரிபால்டி, மாஜினி, முசோலினி ஆகியோர்களின்வாழ்க்கையும்; ரோம்நாட்டு அரசவையில் பாண்டிய மன்னனின் தூதுவர் இடம் பெற்றிருந்த காட்சியும், அந்நாட்டிற்கும் தமிழகத்திற்கும் ஏற்பட்டிருந்த தொன்மையான உறவும்; வியாபாரத் தொடர்பும் என் மனத் திரையில் தோன்றி மறைந்தன.

''நீரின்வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கைவாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத்துஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு''

என்ற பட்டினப் பாலையின் பாடலில் வரும் பண்டையத் தமிழகத்தின் வாணிகச் சிறப்புகளும் என் நினைவிற்கு வந்தன.

''அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும்
விரித்து விளக்கினன் வீரமா முனியே''

என்று இன்றும் போற்றப்படும் பெஸ்கி அடிகளார் தைரியநாதர் என்ற பெயர் தாங்கி,

''ஈரறமும், முச்சீரும், சுகமோர் ஏழும்
நிமிர் இத்தாலிய நாட்டிலிருந்து''

போந்த வீரமாமுனிவரும், அவருக்கு முன்னரே தமிழ்நாடு வந்த, தத்துவபோதகர் என்று தம்மைக் கூறிக்கொண்ட, ''ராபர்ட் டி நோபிலி'' என்ற பெரியாரும், இத்தாலி நாடு தமிழகத்துக்கு அளித்த நன்முத்துக்கள் ஆவர். கொற்கை முத்தை நாம் முன்பு அனுப்பியதற்குப் பதில் காணிக்கையாக இவர்களை இத்தாலிய அன்னை, தமிழன்னையின் தொண்டுக்கு அனுப்பினள் போலும்!

நன்றி மறவாத தமிழகம் ''சதுரகராதி'' ஆசிரியரின் தொண்டுக்கு வணக்கம் செய்யுமுகத்தான், அன்னாரது உருவச்சிலையை இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழகக் கடற்கரையில் அமைத்த காட்சியும் என் மனக்கண் முன் தோன்றி மறைந்தது.

கிரேக்கமும் ரோமும் ஜனநாயகத்தின் தொட்டில்கள் என்று போற்றப்படுகின்றன. கிரேக்கத்தில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் பேரறிஞன் கூறிய கருத்தொன்று என் நினைவுக்குவந்தது.

''மக்களாட்சியை ஏற்ற ஒரு நாடு, சுழன்றடிக்கும் அலைகளுக்கிடையேமிதந்திடும் ஓர் அழகான கப்பல். அலைகளின் அசைவிற்கேற்பக் கப்பல் ஆடுவதுபோல மாறுகின்ற மக்களின் கருத்துக்களுக்கேற்ப ஆட்சியும் மாறிக் கொண்டிருக்கும்.''

பிளேட்டோவின் இந்தக் கூற்றிற்கு ரோம் நாட்டின் வரலாறு ஓர் அரிய விளக்கப் பாடமாக அமைந்தது. ரோமானியர்கள் கி.மு. 509-ல் குடியரசை நிறுவினர்.

அதுமுதல் செனேட் சபையின் செல்வாக்கு வலுத்தது. செனேட்டில் பிரபுக்களின் ஆதிக்கமே இருந்தது. எனவே பொதுமக்கள் கூடிக் கான்சிலியம் பிளிபஸ் என்னும் மக்கள் மன்றத்தை நிறுவினர்.

செனேட்டின் சார்பில் இரு ''கான்சல்கள்'' நாட்டை நிர்வகித்தனர்.

மக்கள் சபையின் சார்பில் ''டிரிப்யூன்கள்'' நியமனம் செய்யப்பட்டன.

முதலில் பெயரளவில் அமைந்திருந்த மக்கள் அவை, டிரிப்யூன்களின் வீரத்தாலும் விவேகத்தாலும் வளர்ச்சி பெற்று, செனேட்டுக்குச் சமமான செல்வாக்கினைப் பெற்று விளங்கியது.

கான்சல்களும் டிரிப்யூன்களும் ரோமாபுரிக்கு வெளிநாடுகளில் வெற்றியை ஈட்டித் தந்தனர்.

வெற்றி பெருகப் பெருக செனேட்டின் தரம் குறையலாயிற்று. செனேட் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சுயநலமிகளின் கூடாரமாயிற்று. மக்கள் அவையும், வேலையற்றவரின் இருப்பிடமோ என எண்ணிடும் அளவுக்கு மாறலாயிற்று.



கி.மு. இரண்டாம் நூற்றாண்டில்—"ஆட்சிச் சக்கரத்தை யார் இயக்குவது?" என்பதில் அதிகாரப் போட்டிகள் இரண்டு சபைகளுக்குமிடையே வலுத்தன. கிராக்கஸ் என்பவன், பிறப்பால் ஓர் பிரபு தான் என்றாலும், நசுக்கப்பட்ட ஏழைமக்களுக்காகக் கொதித்தெழுந்தான். மக்கள் அவை அவனுக்கு ஆதரவு அளித்தது. நில உச்ச வரம்புச்சட்டம் ஒன்று இயற்றி, உபரி நிலங்களை, ஏழையருக்கு அளித்திட எண்ணினான்.

பிரபுக்கள் இவன் உயிரைக் குடித்தனர்.

நாடெங்கும் கலகங்கள்—உட்பூசல்கள் தோன்றின.

மாரியஸ் என்றொரு வீரன் மக்கள் அவையின் சார்பாக எழுந்தான்.

சல்லா என்னும் ஒரு காளை செனேட்டுக்காகப் போராடினான்.

சமஆற்றலுடைய வீரர்களால் நாடு ரணகளமாகி இரத்தவாடை வீசிக்கொண்டிருந்த காலத்தில், ரோமாபுரியின் அரசியல் வானில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓர் மாமறவன் உதயமானான்.

அவன் பெயர் தான் ஜூலியஸ் சீசர்!



மாவீரன் ஜூலியஸ் சீசர்

கிரேக்கம் என்றவுடன் நம் கண்முன்னால் எப்படி அலெக்சாண்டர் தோன்றுகிறானோ, அது போல 'ரோம்' என்றவுடன் நம் நினைவுத் திரையில் வந்து நிற்பவன் ஜூலியஸ்சீசர்!

சீசரின் அரசியல் வாழ்க்கை வரலாற்றுத் தொடக்கம் பதினேழாவது வயதில் அவனுக்கு நிகழ்ந்த திருமணத்தின் போது ஏற்பட்டது. சின்னாவின் மகள் கார்னீலியாவை மணந்தபொழுது சீசர் சல்லாவின் சீற்றத்திற்கு ஆளானான். சின்னா, சல்லாவின் எதிரியான மாரியசின் முகாமில் இருந்தவன்.

"மணத்தை முறித்துக் கொண்டு சின்னாவின் மகளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிடு" என்றான் சல்லா. மனம் ஒப்பவில்லை சீசருக்கு. அதற்காக அவன் நாட்டை விட்டே வெளியேற வேண்டியிருந்தது.

கிரேக்கம் போனான் சீசர். அங்கே தத்துவம் பயின்றான். 'கேட்டார்ப் பிணித்துக் கேளாரும் வேட்பமொழிந்திடும்" சொல்லாற்றலையும் பெற்றிட்டான். அழகாகப் பேசுவதை அருங்கலையாகப் பயின்று வந்தகாலம் அது.

சின்னாட்களுக்குப் பின்னர், சல்லா மன்னித்துவிடவே, தாயகம் திரும்பிய சீசர் அரசியலில் ஈடுபடலானான்.

அரசின் பொதுப்பணிகளுக்கும், பொழுதுபோக்கான வீர விளையாட்டுப் போட்டிகளுக்கும் நிர்வாகியாக நியமிக்கப்பட்ட சீசரின் புகழ் ஓங்கி வளர்ந்தது. கான்சலுக்கு அடுத்ததான பரீட்டர் என்ற உயர்பதவியைப் பெற்றான் சீசர்.

அப்பொழுது ரோமாபுரியில் மற்றுமிருவரின் ஆதிக்கமும் வளர்ந்து வந்தது.

ஒருவன், பொன்னும், மணியும், பொருளும் மிகப்படைத்த கிராசஸ். மற்றவன், ஆசியா மைனர் போர்க்களத்தில் பெரும்புகழ் பெற்ற பாம்பே என்னும் வீரன். இருவருடனும் இணைந்து செயல்பட்டு மூவர் அணி (First Triumvirate) அமைத்தான் சீசர். வெகுவிரைவில் செனேட்டின் அதிகாரத்தை மூவர் அணி வளைத்தது.

சீசரைக் கான்சலாக ஏற்கும் அளவுக்கு செனேட்டின் குரல்வளை நெரிக்கப்பட்டது.

அடுத்த பத்து ஆண்டுகளில் பிரிட்டனிலும் பிரான்சிலும் வெற்றிப் பவனி வந்தான் சீசர். அட்லாண்டிக் கடற்கரைக்கும் ரைன் நதிக்கும் இடையே எட்டு ஆண்டுகள் சீசர் காட்டுமிராண்டிகளை எதிர்த்துக் கடுமையாகப் போரிட்டு வென்றான்.

அடுக்கடுக்காக அவன் பெற்ற வெற்றிகள் கிராசசுக்கும் பாம்பேக்கும் அதிர்ச்சியைத் தந்தன. சீசர் வளர்ந்தால் தங்கள் வாழ்வுக்கு ஆபத்து என்று அச்சம் கொள்ளலாயினர். தன்னுடைய சதித்திட்டம் செயலாவதற்கு முன்னால் கிராசஸ் மாண்டு போனான். ஆனால் பாம்பேயோ, சீசரைக் கவிழ்க்கும் தருணத்தை எண்ணிக் காத்திருந்தான்.

இடையறாத போர்க்களங்களில் ஈட்டிய பெரும் வெற்றிகளுடன் கி.மு. 49-ல் தாயகம் திரும்பிக் கொண்டிருக்கிறான் சீசர்.

வேறு நாட்டு மக்களாக இருந்திருந்தால் என்னென்ன செய்திருப்பர்?

வழியெல்லாம் வண்ண மலர்களைத் தூவியிருப்பர்.

தோரணங்கள் கட்டித்—

தெருக்களைத் தூய்மையாக்கிக்—

கோலமிட்டு, மங்கல ஒலிகள் எழுப்பி,

மக்கள் மகிழ்ந்திருப்பர்.

பாவையர் ஆரத்தி எடுத்திருப்பர்.

பாவலர் பரணிகள் பாடியிருப்பர்.

"பாரெல்லாம் வென்றவனே! உன்னை மன்னனாகப் பெற என்ன பேறு பெற்றோம்!" என்று பரவசமடைந்திருப்பர்.

ஆனால் ரோமாபுரியில் நடந்ததோ வேறு!

"மகத்தான வெற்றியோடு வருகிறானே!

மன்னனாகலாம் என்ற எண்ணம் எழுந்திருக்குமோ?



பேரழகி கிளியோபாத்ரா

எம்மை அசைப்பவர் எவருமிலர் என்கின்ற ஆணவம் துளிர்த்திருக்குமோ?"

என்று சிந்திக்கத் தொடங்கியது செனேட் சபை. மக்கள் அவையிலும் இத்தகு சிந்தனைகள் கொந்தளித்தன.

மக்களாட்சியின் மேல் அத்தனை பற்று அவர்களுக்கு! சந்தர்ப்பம் நோக்கிக் காத்துக் கொண்டிருந்த பாம்பே இந்தச் சந்தேகங்களைப் பயன்படுத்திக் கொண்டான். எனவே தான்—

ஆணை பறந்தது சீசருக்கு—

சேனையைக் கலைத்து விட்டுத் தாயகத்தின் எல்லையில் நுழையும்படி!

சீசரா பணிபவன்?

தலைநகரை நோக்கிப் படையுடன் நடந்தான்.

அறுபது நாட்கள் செனேட்டுடன் போர் நடத்திய பிறகு நாடு அவன் வசமாயிற்று. கோலாகலமாக வரவேற்கப்பட்டான் சிங்கம் நிகர் சீசர். செனேட் அவன் கைப்பாவை ஆயிற்று! அதனை ஆலோசனை மட்டும் கூறும்சபையாக மாற்றி, அனைத்து அதிகாரங்களையும் தானே ஏற்றான் சீசர். மக்கள் பிரதிநிதி என்ற போர்வையில் தான் ஓர் முடிசூடா மன்னனானான். ஐந்து ஆண்டுகள் தான் ஆண்டான் அவன். ஆனால் அதற்குள்ளே அழியாத புகழ் முத்திரைகளைப் பொறித்தான் சீசர். ஊழலையும் ஊதாரித்தனத்தையும் ஒழித்தான். உண்மை ஊழியம் புரிவோருக்குப் பதவிகள் தந்தான். "சென்றேன்— கண்டேன்— வென்றேன்" என்று செனேட்டுக்குச் சேதி அனுப்புமளவுக்கு மேலும் பல நாடுகளை வென்றான்.

உள்நாட்டுப் போரில் தோற்ற பாம்பே, நாடுவிட்டு நாடு புறமுதுகு காட்டி ஓடிக் கொண்டிருந்தான். அவனைப் பூண்டோடு ஒழித்திட விரும்பிய சீசர் பாம்பேயைத் தொடர்ந்து அலெக்சாண்டிரியா சென்றான். அங்கு ஒரு மாளிகையில் தங்கியிருந்த பொழுதுதான் கிளியோபாத்ரா அவனுக்கு அறிமுகப்படுத்தப் பட்டாள். விண்ணும் மண்ணும் அதிர வெறியாட்டம் ஆடிவரும் வீரர்களின் வாள் வீச்சுக்கும் அஞ்சாத வீரன், வேல் விழியாளின் முன்பு வீழ்ந்து விட்டதற்கு ரோம் நாட்டுச் சரித்திரத்தில் இது போன்ற ஆதாரங்கள் நிரம்ப உண்டு.

அரியணையை விட்டு விரட்டப்பட்ட கிளியோபாத்ராவுக்கு மணிமுடி தந்த சீசர், அவளுக்குத் தன் மனத்திலும் இடம் தந்தான். ரோமுக்கு அவளையும் அழைத்து வந்தான்.

சீசரின் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. "மக்களாட்சி முறைக்கு எதிரான ஓர் ஆட்சியா?" என்ற குமுறல்கள் ஒருபுறம்.

"அன்னை பூமியின் மானத்தை அழகி ஒருத்தியிடம் அடகு வைத்து விட்டானே?" என்ற பொருமல்கள் ஒருபுறம்.

அவனிடம் தோற்று, மன்னிப்புப் பெற்று, நண்பரைப் போன்று நடித்து வாழ்ந்த நயவஞ்சகர்களின் சதிகள் ஒருபுறம்.

இவற்றுக்கிடையே சற்றும் அஞ்சாமல் ஏறு நடைபோட்டு வந்தான் சீசர்.

ஒருநாள்-கி.மு. 44ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள்—தீய கனவு கண்டதாகத் தன் மனைவி தடுத்தும் கேளாமல், செனேட் சபைக்குச் சென்றான் சீசர்.

அங்கே—

'தொழுத கையுள்ளும் படையொடுக்கிய' பகைவர்கள் அவனைத் தாக்கினர்.

எதிர்த்துப் போராட எண்ணிய சீசர் தன்னைச் சுற்றிலும் நோக்கிய பொழுது திடுக்கிட்டான்.

அவன் வாளால் வெட்டப்படுவதைக் கண்டும் செனேட் உறுப்பினர்கள் வாளா நின்றிருந்தனர்.

அவன் கண்முன்னால் உருவிய கத்தியுடன் நண்பன் புருட்டஸ்—

"புருட்டஸ் நீயுமா? . . . அப்படியானால் சீசர்! நீ மடியலாம்" என்றான்! ஒன்றல்ல, இரண்டல்ல, இருபது இடங்களில் கத்திகள் பாய்ந்தன.

அந்தக் களம் கண்ட மாவீரனின் உடலே இப்பொழுது ஒரு போர்க்களம் போலக் காட்சியளித்தது.

சீசர் மாண்டான்.

ஆனால்....

சீசரின் சாவின்மூலம் எதனைச் சாதிக்கலாம் என்று புருட்டசும் அவனுடைய தோழர்களும் கூறி வந்தார்களோ, அது—இறுதிவரை நிறைவேறவேயில்லை. சீசரின் பிணத்தினை வைத்துக்கொண்டு நாவன்மை படைத்த அந்தோணி நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்புமிக்க சொற்பொழிவு, மக்களுக்கு சீசரின் மீது அனுதாபத்தைத் திரட்டியது. மக்களாட்சி என்ற மணி விளக்கு சீசரின் காலத்தில் மங்கலாக எரிந்தது என்பது உண்மைதான். ஆனால் அவனுக்குப் பிறகு அது அணைந்தே போயிற்று.

சீசருக்குப் பிறகு ரோமில் தோன்றியது முடியாட்சிதான்; அந்த முடியாட்சியின் முதல் மன்னனும் சீசரின் வாரிசுதான். ஆக்டேவியன் என்பது அவன் பெயர். அவன் சீசரின் சுவீகார மகனாவான். இங்ஙனம் சீசரின் நெடிய நிழல் அவன் மறைவுக்குப் பிறகும் ரோமாபுரி வரலாற்றில் தொடர்ந்து விழுந்து கொண்டிருந்தது.



இத்தாலி நாட்டு வீரமா முனிவர்

அந்தோணிக்குத் தன் தங்கை ஆக்டேவியாவை மணமுடித்துக் கொடுத்தான் ஆக்டேவியன். அந்தோணி அரசியலில் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தான். ஆனால் மணமான மூன்றாவது ஆண்டில்—எகிப்து நாட்டின் பெயர் பெற்ற எழிலரசியான கிளியோபாத்ராவுக்கு இரண்டாவது பலியானான் அந்தோணி.

கிளியோபாத்ராவுக்குச் சீசரின் அருகில் அமர்ந்து, ரோமாபுரியைத் தான் ஆளவேண்டும் என்ற ஓர் ஆசை இருந்தது. சீசரின் மறைவுக்குப் பின்னர் அந்த விருப்பம் ஒருவாறு நிறைவேற அந்தோணியைக் கருவியாக்கிக் கொண்டாள்.

கடமைகளை மறந்த அந்தோணிக்கு ரோமாபுரியில் ஆதரவு குன்றியது. அக்ரிப்பாவின் தலைமையில் ஆக்டேவியனின் படை ஆக்டியம் என்னும் இடத்தில், அந்தோணி-கிளியோபாத்ராவின் படைகளைப் புறங் கண்டது.

அந்தோணி தோற்று ஓடினான்.

"சில ஆண்டுகளுக்கு முன்னால் அரசியாக ரோமாபுரி சென்றேன். இப்பொழுது ஆக்டேவியன் அழைக்கிறான் அடிமையாக வருமாறு! அன்பரே; இந்த மடல் தங்களுக்குக் கிடைக்கும் பொழுது இந்தப் பாவியின் ஆவி பிரிந்திருக்கும்!" என்று அந்தோணிக்கு ஓலை ஒன்று அனுப்பினாள் கிளியோபாத்ரா. அந்தோணி தானும் இறக்க நினைத்துத் தன்னை வதைத்துக் கொண்டபிறகுதான் கிளியோபாத்ரா இன்னும் இறக்கவில்லை என்பது தெரிந்தது. அவளிடம் தன்னை எடுத்துச் செல்ல ஆணையிட்ட அந்தோணி இறுதியில் அவள் மடியில் படுத்தவாறே உயிரை விடுத்தான். பின்னர் கிளியோபாத்ராவும் தற்கொலை செய்துகொண்டதாக வரலாறும், இலக்கியமும், வழிவழி வரும் கதைகளும் பேசுகின்றன. இருவருடைய உடல்களையும் அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்ய உத்தரவிட்டு ஆக்டேவியன் ரோமுக்குத் திரும்பிய பொழுது அவனுக்கு 33 வயதுதான்! ரோமாபுரியின் செனேட் சபை மிக்க நன்றியுணர்வுடன் அவனை முதல் மன்னனாக ஏற்றுக் கொண்டு மணி மகுடம் சூட்டி அவனுக்கு அகஸ்டஸ் என்ற பெயரினையும் அளித்தது. ரோமாபுரி வரலாற்றில் இந்த அகஸ்டஸ் ஆண்ட காலம் பொற்காலம் என்று போற்றப்படுகிறது.

(தொடரும்)

# பொற்காலம் காணப் புதிய திட்டங்கள்!

## உணவு உற்பத்தியில் தமிழ்நாடு அரசின் சாதனைகளால்

## எங்கும் பசுமைப் புரட்சி! எண்ணற்ற புதிய முயற்சி!!

மதுரை மாவட்டத்தில்

பெரியாறு வளர்ச்சித் திட்டம் ரூ 425 இலட்சம்

மருதநதித் திட்டம் ...................... ரூ 62 இலட்சம்

திருநெல்வேலி மாவட்டத்தில்

கறுப்பநதித் திட்டம் ...................... ரூ 140 இலட்சம்

தருமபுரி மாவட்டத்தில்

தொட்டஹல்லித் திட்டம் ........ ரூ 100 இலட்சம்

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில்

பிளவுக்கால் திட்டம் ............ ரூ 75 இலட்சம்

மைய அரசு நீர்ப்பாசனக்குழு அனுமதி கிடைத்தவுடன் தொடங்க இருக்கும் இத்திட்டங்களால் பயனடையும் நிலத்தின் பரப்பளவு

**40,000** ஏக்கர்.

பற்றாக்குறை', 'பஞ்சம்' என்ற சொற்களைப் பறந்தோடச் செய்து புதிய சரித்திரத்தை உணவு உற்பத்தியில் உருவாக்கிக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசின் சாதனைப் பட்டியல் வளரப் பாடுபடுவோம்! பயனடைவோம்!!

குமார்—•




"அகர முதல எழுத்தெல்லாம்" என்று தொடங்கி, வையகம் வாழக் குறள் பாக்களைத் தந்தார், வள்ளுவப் பெருந்தகை.

இன்று, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பிற மாநிலங்களுக்கு வழி காட்டியாக அமையும் வகையில், பசுமைப்புரட்சியின் ஆணி வேராக, மிகச் சிறிய நிலக் கிழார்களும் பயன்பெறும் வண்ணம், நீர்ப்பாசனக்கூட்டுறவுக் கழகத்தைத் தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது, அகரம் கிராமத்திலே!

அகரம், செங்கை மாவட்டம் திருவள்ளூர் வட்டத்திலே உள்ள சிற்றூர். சுற்றிலும் பச்சை வர்ணம் பூசியது போன்ற நெற்பயிர் நிறைந்த பூமி. அங்கு அரசுக்குச் சொந்தமான 43 ஏக்கர் தரிசு நிலம்; இதுவரை வெறும் மேய்ச்சல் காடாகயிருந்த இடம். புதிய, புரட்சிகரமான திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அகரத்தைச் சேர்ந்த 26 சிறுநிலக் கிழார்கள் ஒன்று சேர்ந்து இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்தை ஏற்படுத்தியுள்ளனர். சிறுநிலக் கிழார் என்றால் ஒவ்வொருவரும் அரை ஏக்கர், ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்று மிகக் குறைந்த நில உடைமை உள்ளவர்கள். அவ்வூரைச் சேர்ந்த திரு டி. ராகவன் என்பவரைத் தலைவராகக் கொண்டு, இந்தக் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சேர்ந்துள்ள உறுப்பினர்களில் அலமேலு அம்மாள், பச்சை அம்மாள் என்ற இரு விதவைத் தாய்மார்களும் உள்ளனர்.

இக்கூட்டுறவின் பணி என்ன? பயன் என்ன?

தமிழகத்தில் பசுமைப்புரட்சியினை ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு பல திட்டங்களை முனைப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அதிலொன்று, பூமியின் கீழ் மட்டத்திலுள்ள நீரைப் பயன்படுத்திப் பாசன வசதியினைப் பெருக்குவது. அதற்காகத் தமிழகத்தில் உள்ள 173 ஆரம்ப நில வள வங்கிகளும், புதிய கிணறுகள் வெட்ட, பழைய கிணறுகளை ஆழப்படுத்த, இறைவைக் குழாய்களை அமைக்க, நிலக் கிழார்களுக்கு நீண்ட காலக் கடன் தருகின்றன. நிலக்கிழார்கள் தங்களது நிலங்களை அடமானம் வைத்து இக்கடன்களைப் பெறுகின்றனர்.

சிறுநிலக் கிழார்களுக்கென இது ஏற்பட்டிருந்த போதிலும், 50 செண்ட், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று நிலம் வைத்திருப்பவர்கள் இதன் மூலம் பயனடைவதில்லை; பெரும்பாலும் 5 ஏக்கர் நிலத்திற்கு மேலுள்ள நிலக்கிழார்களே இதன் மூலம் பயன் பெறுகின்றனர்.

ஆனால், 3 ஏக்கருக்கும் குறைவான சிறுநில உடைமைகள் தான் நம்நாட்டில் பெரும்பாலும் உள்ளன. எனவே, இத்தகைய உழவர் சமுதாயத்திற்கு உதவும் பொருட்டுத் தமிழ்நாடு அரசு ஒரு புதிய திட்டத்தினை உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின்படி, கூடிய வரை ஒரே இடத்தில் அமைந்திருக்கும் நிலங்களின் உரிமையாளர்களைக் கூட்டாகச் சேர்த்து ஒரு பொது நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம் அமைக்கப்படும்.

இவர்கள் புதுக் கிணறுகள் வெட்ட, குழாய்க் கிணறுகள் அமைக்க, விசை ஏற்றங்கள் (பம்பு செட்கள்) நிறுவிடத் தேவையான பணத்தினை ஆரம்ப நிலவள வங்கியிடமிருந்து நீண்ட காலக் கடனாக, இந்த நீர்ப் பாசனக் கூட்டுறவுக் கழகம் பெறும்.

ஒவ்வோர் உறுப்பினரும் தனது நிலத்தின் அளவிற்கேற்பக் கடன் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவற்றை ஆண்டு தோறும் இலகுவான தவணை முறையில் திருப்பித் தருவர்.

இதன் மூலம் மழை பொய்த் தாலும் பாசன வசதி நிச்சயமாக இருக்கும். இரு போகம் விளை விக்க முடியும். ஒரு போகம் மூலம் ஒரு ஏக்கர் நிலத்தில் நிகர வருமானம் ரூ. 200 கிடைக் கும். மறுபோகம் நெல் விளை விப்பதின் மூலம் ஆண்டுக்கு நிகர வருமானம் ரூ. 800 ஆக உயரும். எனவே இத்திட்டம் மூலம் ஆண்டுக்கு ரூ. 600 வருமானம் அதிகரிக்கும்.

இதன் முன்னோடித் திட்டம் அகரம் கிராமத்தில் தொடங்கப் பட்டது. அங்கு ஒரு குழாய்க் கிணறு அமைத்துத் தரப்பட்டுள் ளது. இந்தக் குழாய்க் கிணறு சுமார் 40 ஏக்கர் நிலத்தில் இரு போகம் விளைவிக்கத் தேவையான அளவு நீர்ப்பாசனம் வழங்கப் போதுமானது ஆகும்.

இதைத் தொடர்ந்து தமிழ கம் முழுவதும் இத்தகைய நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங் களையும் குழாய்க்கிணறுகளையும் ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் துவக்க விழா 14—10—1970 அன்று அகரத் தில் நடைபெற்றது. இதற்காக ஏற்படுத்தப்பட்ட குழாய்க் கிணறு அருகே துவக்க விழா மேடையும், பந்தலும் அமைக் கப்பட்டிருந்தன. சுமார் 3 பர்லாங் தூரத்திற்கு வயல் வெளியின் மத்தியில் புதிய சாலை அமைக்கப்பட்டிருந்தது. வழிநெடுகத் தோரணங்களும், பலவண்ணச் சுவரொட்டிகளும் அலங்கார வரவேற்புகளும் மட்டுமின்றித் தங்களுக்கு வர விருக்கும் புது வாழ்வினை எண்ணி மகிழும் அகரம் சுற்றுப் பகுதி உழவர் குடிப் பெரு



மக்கள் ஆயிரக்கணக்கில் வழி நெடுகக் கூடி நின்று, முதலமைச் சருக்கும், ஏனைய அமைச்சர் பெரு மக்களுக்கும் மகத்தான வரவேற் பளித்தனர். விழாவிற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து குழுமியிருந்தனர். இத் தகைய சிற்றூரில், இவ்விழா வினைக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சீதாராமதாஸின் திறமையை எடுத்துக் கூறுவதாகயிருந்தது இந்த விழா !

விழாவிற்குத் தமிழக முதல மைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்க, மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் இத்திட்டத்தினைத் துவக்கி வைத்தார்கள்.

ஆளுநர் அவர்கள் ஒரு பொத் தானை அமுக்கியதும் குழாய்க் கிணற்றிலிருந்து குற்றாலம் அருவி போல் தண்ணீர் கொட்டியது. கூடியிருந்த மக்களின் உள்ளமெல் லாம் மகிழ்ச்சியில் பொங்கி யதைப் பிரதிபலிப்பது போல் இது அமைந்திருந்தது.

விழாவிற்குத் தலைமை தாங்கிய முதல்வர் பேசியதாவது:—

“இந்த அரசு கிராம மக்க ளுடைய வாழ்வை மையமாக வைத்துத் திட்டங்கள் பல வற்றைத் தீட்ட வேண்டும் என்று எண்ணியுள்ள அரசு. ஒரு நாட்டின் செழிப்பைக், கொஞ்சம் பளபளப்பாக இருக் கிற நகரங்களைப் பார்த்து மாத்திரம் கணக்குப் போட



முடியாது. அந்தப் பளபளப்பிற்குக் காரணமாக இருக்கிற சிற்றூர், பேரூர்களில் வாழும் மக்களுடைய நிலையும் மேம்பாடு அடைய வேண்டும். அதற்காகத்தான் எங்களுடைய தலைவர் அண்ணா அவர்கள் ஏழை எளிய மக்கள் பயன் பெறத்தக்க வண்ணம் கூட்டுறவு இயக்கம் பணியாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார். பாசன வசதிகளை மேலும் பெருக்க, பூமிக்கடியில் இருக்கிற நீரை எடுத்து அதை ஏழை எளிய மக்கள் துய்க்கிற அளவிற்குச் செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கு அடையாளம் தான் நிலவள வங்கிகள் நாட்டில் பணியாற்றுகிற நிலை. நிலவள வங்கிகள் மூலம் ஏழை எளிய மக்கள் பயன்பெற முடியுமா ? சில வரைமுறைகளின் அடிப்படையில்தான் கடன்களைப் பெற முடியும். அதற்காக எடுக்கப்பட்டிருக்கும், அடுத்த முறை தான், இன்று தொடங்கும் நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம். அந்தக் கழகத்தின் மூலம் இன்று முதன் முதலாகப் பணியாற்றத் தொடங்கியிருக்கிற இந்த நீரேற்றக்குழாய்.

ஐந்து ஏக்கர் நிலம், அல்லது அதற்கு மேல் நிலம் படைத்தவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவு. மற்றவர்களெல்லாம் 1 ஏக்கர், 2 ஏக்கர் என்ற அளவில் உள்ளவர்கள். 80 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள், இப்படிப்பட்டவர்கள் தான்! அவர்கள் இந்த நீர்ப்பாசன வசதியைப் பெறுவது முடியாத காரியமாக இருந்தது. கிராமங்களில், சண்டை சச்சரவுகள், போராட்டங்கள், இல்லாமை, வறுமை இவைகளால் தாக்கப்பட்டுத் தங்கள் நிலங்களின் பயனை அடைய முடியாமல், இருக்கிற நிலத்தை அடமானம் வைத்து விட்டு, வட்டியைக் கட்ட வயல்வெளிகளில் வேலை செய்து கொண்டிருக்கும் நிலை, நாட்டில் இருக்கிறது. அதிலிருந்து சாதாரண ஏழை எளிய மக்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது தான் கூட்டுறவு இயக்கம். இதன் மூலம் நாட்டில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திப் பெரும் வெற்றியை ஈட்டிட வேண்டும் என்பது எண்ணமாகும்.

இதற்கான அவசரச் சட்டம் வெகு விரைவில் வரவிருக்கிறது. இதற்கிடையில் தமிழ் நாடு எங்கும் இது போன்ற கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களை ஆரம்பிக்க இருக்கிறோம், என்ற செய்தியை அறிவிக்க

அடையாளமாகத்தான் இந்த விழா இன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர் மாதவன் குறிப்பிட்டதைப் போல், கூட்டுறவுத் துறைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் எப்போது பார்த்தாலும் கூட்டுறவு—கூட்டுறவு என்று உச்சரித்துக் கொண்டே இருப்பவர்கள்.

சட்ட சபையில் அவர் பேரவைத் தலைவராக முதன் முதலாக வந்து நுழைந்ததும் ‘அகர முதல எழுத்தெல்லாம், ஆதி பகவன் முதற்றே உலகு’ என்ற திருக்குறளைச் சொல்லி நிகழ்ச்சியினைத் தொடங்கினார். அப்படிச் சட்டசபை நிகழ்ச்சியை ‘அகரம்’ என்ற திருக்குறளைச் சொல்லித் தொடங்கிவைத்ததைப்போலவே, இன்றும் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத்தை ‘அகரம்’ என்ற இந்த ஊரில் தொடங்கி வைத்துத், தான் பேரவைத் தலைவராக இருந்ததை நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்.

சிறு விவசாயிகள் பயன் பெறத்தக்க வகையில், 26 பேர்கள் கிட்டத்தட்ட 43 ஏக்கர் நிலத்தில் பாசன வசதியைப் பெறத்தக்க வகையில், உள்ளது. இதைப்போலவே இந்தப் பகுதியில் அரிசன மக்கள் நூற்றுக் கணக்கானோர் பாசன வசதியைப் பெறுகிற அளவிற்குக் கூட்டுறவுத் துறை, முயற்சியைத் தொடங்கி இருக்கிறது.

அரசு நல்ல திட்டங்களைத் தீட்டி வருகிறது. இங்கும் தொடர்ந்து அடுத்தபடியாக அரிசன மக்கள் பயனடையப் போகிறார்கள் என்பதை நான் கேள்விப்பட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அரிசன மக்களுக்கு வழங்கி இருக்கிற பல்வேறு சலுகைகளில் இதுவும் ஒரு சலுகையாகும்.

இந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் இரண்டரை லட்சம் ஏக்கர் நிலம், பட்டா செய்து தரப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வீட்டு மனை, பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள காட்டு நிலங்கள் பற்றி நமது ஆளுநர் அவர்கள்

குறிப்பிட்டது போல் 4 மாதங்களுக்கு முன் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். காடுகள் என்ற பெயரில் உள்ள இடங்கள் உண்மையிலேயே காடுகளாக இருந்தால் பரவாயில்லை. ஆனால், காடுகள் என்ற பெயரால் சில மேடுகள்; பயன் தரக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தத்தக்க வகையில் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அந்த வேலை இப்போது முடிவுறும் நிலையில் இருக்கிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் இந்த ஆட்சி, நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. நீர் தேவையா? நெல் பயிர் செய்யக் கடன் வேண்டுமா? ஆக இவை யாவும் செய்யத்தான் இன்று இந்தக் கூட்டுறவுத் துறை மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாடு முழுவதும் இன்று தொடங்குவது போல் திட்டங்கள் பல தொடங்கப்பட விருக்கின்றன. அதன் மூலம் சிறு சிறு விவசாயிகள் ஆயிரக்கணக்கானோர் பயன்பெற இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

இவ்வாறு கூறி, சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. வி. எம். அண்ணாமலையிடம் இந்தக் குழாய்க் கிணற்றுக்கான உரிமைச் சீட்டினை முதல்வர் வழங்கினார். விழாவினைத் தொடங்கி வைத்த ஆளுநர் அவர்கள் ''இந்தியத் துணைக்கண்டத்தில் 70 சதவீதம் மக்களுடைய நில உடைமை 5 ஏக்கருக்கும் குறைந்ததேயாகும். எனவே, சிறு நிலக்கிழார்கள் விசை ஏற்றம் அல்லது குழாய்க் கிணறு ஏற்படுத்துவது என்பது முடியாததாகும். அதற்குக் கூட்டுறவுதான் சரியான வழி. மக்களாட்சி நாட்டில், அதிலும் குறிப்பாக இந்தியாவில், கூட்டுறவு இன்றியமையாத வொன்றாகும். எனவே இத்துவக்க விழாவினைப் பல திட்டங்கள் தொடர்ந்துவரும் என நான் நம்புகிறேன்.

நான் சமீபத்தில் திருச்சிக்குச் செல்லும்போது பெரும்பகுதி நிலம் வெறும் தரிசாகக் கிடப்பதைக் கண்டேன். அரசாங்க நிலமானாலும், தனியார் நிலமானாலும், தரிசாக, காடாக எந்த விளைச்சலுமின்றி இருக்கும் நிலங்களை அரசாங்கம் கணக்கெடுத்து அதனைப் பயிரிடும் நிலமாக்க வேண்டும். அதில் 50 சதவீதம் நிலத்தினை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால் கூட அவர்கள் வேலை வாய்ப்புப் பெற வசதியளிக்கும்'' என்று குறிப்பிட்டார்.

கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் இத்திட்டத்தினை விளக்கிப் பேசினார்கள். அவர்கள் கூறும் போது :

''இந்த நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம், அரை ஏக்கர் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று உள்ள சிறு சிறு விவசாயிகளுக்கென்றே ஏற்பட்டது. முன்னோடியாக அகரத்தில் தொடங்கி யிருக்கிறோம். தமிழ் நாடு முழுவதும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தக் குழாய்க் கிணறுகள் தோண்ட முடிவு செய்துள்ளோம்.

முடியுமா? என்று கேட்டால் முடியும் என்று சொல்லுவேன்.

தற்போது நம்மிடம் குழாய்க் கிணறுகள் தோண்டும் பழைய இயந்திரங்கள் 50-ம், புதிய இயந்திரங்கள் 51-ம் உள்ளன. இவை மூலம் ஆண்டுக்குச் சுமார் 800 குழாய்க் கிணறுகள் தோண்ட முடியும். இன்னும் சில இயந்திரங்கள் வாங்க முடிவு செய்துள்ளோம். ஆக 200 இயந்திரங்கள் இருந்தால் தேவையான குழாய்க் கிணறுகளை வேகமாக அமைக்க முடியும்.

இதற்குத் தேவையான பணம் இருக்கிறதா?

பணம் நிலவள வங்கி மூலம் கொடுக்க முடியும். இந்த வங்கியிலிருந்து ஒரு கோடி ரூபாய் கடனாக நிலக்கிழார்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். பெரிய விவசாயிகளுக்குத்தான் இதுவரை கொடுத்திருக்கிறார்கள். அரை ஏக்கர், ஒரு ஏக்கர் உள்ள சிறிய விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்று நிலவள வங்கித் தலைவரிடம் கேட்டால், இல்லை என்று தலையசைத்து விட்டார். பணம் வாங்க ஆளில்லை என்கிறார்.

எனவே சிறு நிலக்கிழார்களை ஒன்று சேர்த்துக் கூட்டுறவு முறையில் விரைவாகச் செயல்படுத்திட முற்பட்டுள்ளோம்.





4

பேரறிஞர் அண்ணு அவர்கள் முன்பு சொன்ன திட்டமிது. அதை அணுவளவும் பிசகாமல் பின்பற்றுகிறேம். இந்த அரசு விரைந்து செயல்படும் திறன் உடைய அரசு என்பதை மற்ற மாநிலக்காரர்களும் சொல்லுகிறர்கள். நமது முதலமைச்சர் அவர்கள் பந்தயக் குதிரை மாதிரி ஓடுகிறவர்கள். அவர்களோடு சேர்ந்து நாமும் பின்னுல் ஓட வேண்டும்.

இதோ திட்டத்தைத் தந்து விட்டோம். இனி அதனை வெற்றியுடன், நடத்தித் தர வேண்டிய பொறுப்பு விவசாயிகளுடையது. நீங்கள் கூட்டுறவுக் கழகம் அமைத்து எங்களிடம் பணத்திற்கு வாருங்கள்; நாங்கள் உங்களுக்கு உதவுகிறேம்.

தரிசாகக் கிடப்பது விளை நிலமாக வேண்டும். ஒரு போகம் இரு போகமாகவும், இரு போகம் முப்போகமாகவும் மாற வேண்டும். உற்பத்தி பெருக வேண்டும். பசுமைப் புரட்சி ஓங்க வேண்டும்!''

இவ்வாறு அமைச்சர் ஆதித்தனுர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

உணவு அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகையில், 'இத் திட்டத்தின் நோக்கம், வருங்காலம் சிறுசிறு விவாயிகளுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அமைய வேண்டுமென்பது தான். இது விவசாயிகளுக்கு வரப்பிரசாதம் போன்ற ஒரு திட்டமாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த ஆண்டு உணவு உற்பத்தி அதிகமானதன் காரணமாக விவசாயிகளுக்குக் கொள் முதல் விலையில் ஒரு ரூபாய் அதிகம் தர முடிந்தது. இன்னும் உணவு உற்பத்தியைக் கூடுதலாகச் செய்வோமானுல் வெளி மாநிலங்களுக்கும் நமது உணவு தானியங்களை விற்க முடியும். அவ்வாறு விற்கும்போது வெளி மாநிலத்தாரிடம் கொஞ்சம் அதிக விலை கொடுங்கள் என்று சொல்லமுடியும்.

இந்த அரசிற்கு ஒரு பெரிய பொறுப்பு உள்ளது. ஒன்று விவசாயிகளுக்கு — அவர்களது உற்பத்திக்கு உரிய விலை தந்து பாதுகாக்க வேண்டியது. அடுத்தது உணவுப் பொருட்களை வாங்கும் மக்களும் அதிக விலை கொடுக்க நேரா வண்ணம் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை,'' என்று குறிப்பிட்டார்கள்.

நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்தினைத் தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அவர்கள் பேசும்போது ''சென்னையிலிருந்து அகரம் வரை வழியெல்லாம் மகிழ்ச்சி பொங்க நின்ற மக்கள் கூட்டத்தினைக் கண்டோம். அகரம் என்று துவங்குகிற காரணத்தால் ஈராயிரம் ஆண்டுக்கு முன் திருவள்ளுவர் அகரத்தில் தொடங்கிப் புகழ்மிக்க திருக்குறளைத் தந்தது போல் இத்திட்டமும் தமிழகமெங்கும் பரவும் என்பதில் சந்தேகமில்லை.

நிலத்தை நம்பியிருப்பவனுக்கு நிலம் கிடைக்கவேண்டும். தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான நிலம் 7 லட்சம் ஏக்கர் இருக்கிறது. இதுவரை இரண்டரை லட்சத்துக்கும் மேல் ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டோம். இன்னும் கைவசம் இருப்பது நாலரை லட்சம் ஏக்கர். ஆயினும் தமிழகத்தில் நிலத்தை நம்பி வாழ்வோர் 30 லட்சம் பேர். 30 லட்சம் எங்கே ? நாலரை லட்சம் எங்கே ?

அதிலும் பெரும்பாலான பகுதிகளில் பருவ மழையில்லாத காலத்தில் நிலங்களுக்கு எவ்வாறு நீர்ப் பாசனம் செய்யப் போகிறேம் ? இதில் போட்ட பணத்தைத் திரும்பப் பெற முடியுமா ? என்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இதுவரை நிலத்தை அடமானம் வைத்துத் தான் கடன் பெற முடியும். இந்த நிலை மாற அவசரச் சட்டம் கொண்டு வருகிறேம். (கூட்டுறவுச் சட்டம் பற்றிய இந்த அவசரச் சட்டத்தை 17-10-70 அன்று தமிழ் நாடு அரசு பிறப்பித்துள்ளது) அதன் மூலம் நிலத்தின் சொந்தக்காரர்கள் நிலத்தை அடமானம் வைக்காமலேயே கடன் பெற முடியும். விவசாயிகள் நலனுக்காக எத்தனை கிணறுகளுக்கு உதவி செய்ய இந்த அரசு தயாராக உள்ளது? புள்ளி விவரத்தோடு சொல்லுவதானுல் 1966-67-ல் இதற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த



# வெற்றிநடை போடும் கருணை

தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை-27 நெல்லின் சராசரி மகசூல் சென்ற ஆண்டில் ஏக்கருக்கு 1·3 டன் அளவில்தான் இருந்தது. இந்த ஆண்டில் ஆடுதுறை-27 நெல்லை விட அதிக மகசூல் அளிக்கும் 'கருணை' நெல்லை, தஞ்சை மாவட்டத்தில் சுமார் 15,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடத் திட்டமிடப் பட்டது. தஞ்சை மாவட்டத்தில் 'கருணை' நெல்லின் சராசரி மகசூலை ஏக்கருக்கு 1·75 டன் அளவிற்கு மேல் பெற முயற்சி செய்யப் பட்டது.

சுமார் 20,000 ஏக்கர் பரப்பில் 'கருணை' பயிரிடப்பட்டுள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளது. மாயவரம் வேளாண்மைப் பகுதியில் 'கருணை' நெல் சராசரியாக ஏக்கருக்கு 2 முதல் 2·4 டன் மகசூல் கொடுத்துள்ளது. (மாடு கட்டிப் பிணை அடித்தபின் கிடைக்கும் நெல் இந்தக் கணக்கில் சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

தஞ்சாவூருக்கு அருகில், ஒரு தேசீய செயல் விளக்கத் தளையில் 'கருணை' பயிரிடப்பட்டிருந்தது. அத்தளையில் 'கருணை' நெல்லிற்குப் பரிந்துரைக்கப் பட்ட எல்லா செய்நேர்த்தி முறைகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அந்தத் தேசீய செயல் விளக்கத் தளையில் ஏக்கருக்கு 3·5 டன்னுக்கு மேலும் மகசூல் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

இதையெல்லாம் நோக்கும் போது, 'கருணை' தமிழ்நாடெங்கும் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கப் போகிறது என்பது புலனாகிறது.



நிலமில்லா ஏழைகளுக்கு முதல்வர் நிலப்பட்டா வழங்குகிறார்.

ஆண்டு 18 கோடி ரூபாய் அளவில் கொடுக்க இந்த அரசு தயாராக உள்ளது.

முன்பு அரிசி கிடைக்காத நிலையிருந்தது. இன்று உணவு அமைச்சரைப் பார்த்து ''உணவு உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம். அதனை விற்றுத் தாருங்கள்'' என்று விவசாயிகள் கேட்கிற அளவிற்கு உணவுத் தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது.

இத்திட்டம் தண்ணீர்ப் பஞ்சமுள்ள மாவட்டங்களுக்கு மிகவும் தேவை.

ஒவ்வொரு ஏரியும் கூட்டுறவுச் சங்கத்தின் சொத்தாகவேண்டும். ஒவ்வொரு விவசாயியும் கூட்டுறவுக் கழக உறுப்பினராக வேண்டும்'' இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

இந்த விழாவினைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு நிலப்பட்டாவினை முதல்வர் வழங்கினார். நிலப்பட்டா பெற்றோர், 2,062 பேர்; வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 453 பேர்.

இந்தக் கூட்டுறவு நீர்ப் பாசனக் கழகத் தலைவர் திரு டி. ராகவன் ஒரு பட்டதாரி. சுமார் 20 ஆண்டுகளாக விவசாயத்தில் ஈடுபட்டுவருபவர். இத்திட்டம் பற்றி அவரைப் பேட்டி கண்டதில் அவர் கூறியதாவது : ''அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் இத்திட்டத்தை எனக்குக் கூறினார்கள். ஏன் உங்களூரில் தொடங்கக் கூடாது என்று கேட்டார்கள். நானும் ஒப்புக்கொண்டேன். இது வரை நாங்கள் எங்கள் பயிர் விளைச்சலுக்கு வானத்தைப் பார்த்து நின்றோம். சில சமயங்களில் பெரிய விவசாயிகளிடம் வாடகைக்கு நீர்பெற்றுப் பாசனம் செய்தோம். மழை பெய்யாவிட்டால் எங்கள் பயிர் தீய்ந்து விடும். இனி அந்தக் கவலையில்லை. மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் பாசனத்திற்கு நீர் உள்ளது. சிறு விவசாயிகளுக்கு வாழ்வளிக்கும் இத்திட்டத்தைக் கொண்டுவந்த தமிழ்நாடு அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும்'' என்று வாயார உளமார வாழ்த்தினர்.

'' மின்சாரம் வழங்குவதிலும், நவீன முறையைப் பரப்புவதிலும், கிராமங்களை முன்னேற்றமடையச் செய்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. நன்மை வசதியுடையவர்களுக்கே போய்ச் சேருகிறது. ஆனால் தமிழ்நாட்டில் புதிதாகத் தொடங்கப்படும் இத்திட்டம் எல்லாத் தரப்பு மக்களுக்கும் நல்வாய்ப்புகளை அளித்துத் துணை செய்வதாக உள்ளது.''—இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இந்த விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழக அரசு கொண்டுவந்துள்ள இத் திட்டம்தான் இவ்வகையில் முதல் திட்டமாகும். பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக உள்ள இத்திட்டம் வளரட்டும்!

# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் காட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருன்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் ~ வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

## கதர் கிராமத் தொழில் துறை

உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.



மாலை 6 மணி இருக்கும். அண்ணா சாலை, களை கட்டிக்கொண்டிருந்தது. பகல் ஆட்டம் விட்டு விட்டார்கள். சினிமா பார்த்த கூட்டம்; சினிமாவுக்குப் போகும் கூட்டம்; அலுவலகம் விட்டுச் செல்வோர்; அங்காடிகளை நோக்கிப் படை எடுப்போர்; பொழுது போக்குவதற்கென்றே வருவோர்; பல்வேறு மக்கள்; பல்வேறு உணர்ச்சிக் குவியல்கள்; அது ஒரு சிறு உலகம். புது நாகரிகம் என்பதன் பேரால் முகிழ்த்தெழும் பல்வேறு ஆசாபாச உணர்வுகள். அத்தனையும் பிய்த்து உதறிக்கொண்டு பிளாட்பாரங்களிலே—பேருந்துகள் நிற்கின்றன இடங்களிலே—கடைகளிலே—எங்கும் பொங்கி வழிந்துகொண்டிருந்த மாலை வேளை. மனித உணர்வுகளின் அடித் தளத்தைக் கிண்டிக் கிளறிக் கிறங்க வைக்கின்ற பெரிய பெரிய சினிமா போஸ்டர்கள். சிறிய சிறிய விஷயங்கள், பெரிய பெரிய படங்களில்! இன்றைய நகர வாழ்க்கையின் அடையாள முத்திரைகள்! மனிதனின் ஆசாபாசங்களுக்கு, உணர்வுகளின் நெளிவு சுளிவுகளுக்கு நல்ல வேட்டை! டீக்காக டிரஸ் செய்துகொண்டு நாலைந்து வாலிபர்கள்! எதிர்காலச் சிற்பிகள்—ஆபாசத்தின் எல்லையையே தொட்டுப் பார்க்கும் திரைப் படப்போஸ்டர் ஒன்றை விழுங்கி விடுவதுபோல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். படிப்பதில், நல்வாழ்வு வாழ்வதில், இல்லாத அக்கறை, துடிப்பு! உழைக்கும் கரங்கள், படிக்கும் சமுதாயம்—அக்குவேருக அலசிக்கொண்டிருந்தது அந்தப் போஸ்டரை! இன்றைய இளைஞர் உலகின் இதயத் துடிப்பே அத்தகைய போஸ்டர்களில்தான் அடங்கியுள்ளதோ என்ற பிரமையைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது!

"என்ன பார்க்கிறீர்கள்?"

யாரோ என் முதுகைத் தட்டியது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தேன். நண்பர் ஆறுமுகம் நின்றுகொண்டிருந்தார். இந்த ஆறுமுகம் ஒரு சிறு தொழிலதிபர். பலநாடுகள் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவர். நல்ல சிந்தனையாளர்; கலகலவென்று பேசுவார்; கருத்துச் செறிவு இருக்கும் அவரது பேச்சில்!

"ஒன்றுமில்லை; வணக்கம்! இந்தப் போஸ்டரைப் போய் இப்படி விழுந்தடித்துக் கொண்டு பார்க்கிறார்களே? அதுவும் போதாதென்று விமர்சனம் வேறு; பார்த்தீர்களா? இளைஞர்கள் இப்படிச் சுவர் மருங்கிலும், பிளாட்பாரங்களிலும், பஸ் ஸ்டாப்புகளிலும் நின்றுகொண்டு, நேரத்தைக் கெடுத்துக்கொண்டு, மனத்தைக் கெடுத்துக்கொண்டு, வெட்டி அரட்டை அடிக்கிற நிலை—இந்த நாட்டைப் பிடித்த சாபக்கேடோ என்னமோ தெரியவில்லை!"

"உங்கள் கவலை எனக்குப் புரிகிறது! என்ன செய்யச் சொல்கிறீர்கள்? தனி மனிதர் ஒவ்வொருவரும் இந்த மனச் சீரழிவைப் பற்றி உணர வேண்டும். நினைக்க வேண்டும். காலம் பொன் போன்றது. கடமை கண் போன்றது. இந்த மணிவாசகம் சிலருக்கு மட்டும் இருந்து பயன் இல்லை. ஒவ்வொருவர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் பதிந்து வாழ்வுக்கு வழி காட்ட வேண்டும். இப்படிப் படித்த இளைஞர்கள் வெட்டி நேரம் போக்குவது—எதிலும் ஒரு பிடிப்பில்லாமல் குதர்க்கவாதம் பேசிக்கொண்டு—குட்டை குழப்புகிற அவல நிலை—நம் நாட்டில் இன்று ஒரு பெரிய



பிரச்னையாகவே வளர்ந்துவிட்டிருக்கிறது......— அரசு எவ்வளவு நல்லகாரியம் செய்தும் என்ன பயன்? கோடி கோடியாக நாட்டின் நல்வாழ்வுக்காகச் செலவு செய்தும் என்ன பயன்? மக்களிடையே கடமை உணர்வு மங்கி வருகிறதே! ‘நமக்கென்ன’ என்ற சுயநல மனப்பாங்கு—பிடிப்பில்லாத ஒரு மெத்தனம்—சமுதாயத்தின் ஆணி வேரையே ஆட்டி வைக்கிறது. அதோ அந்த உத்தமர்—மௌண்ட் ரோடின் மையத்தில் சிலையாக நிற்கிறாரே-இந்த நாட்டின் நல்வாழ்வுக்காகத் தன் அறிவை, தன் உழைப்பை, தன் வாழ்நாளை, சகலத்தையும் பணயமாக வைத்து, இன்று இலக்கியமாகவே ஆகிவிட்ட இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் என்ன சொன்னார் தெரியுமா?''—நண்பர் ஆறுமுகத்தின் பேச்சில் சூடு பிடித்து விட்டது.

நான் புரிந்துகொண்டேன்.

நண்பர் சற்று நிறுத்திவிட்டு, மறுபடியும் ஆரம்பித்தார்.

‘‘ஜப்பான் நாட்டிற்கு நான் அண்மையில் சென்றிருந்தேன். சென்ற போரில் ஜப்பான் நாடு தரை மட்டமாக்கப்பட்டது தெரியுமல்லவா? போரின் கோரக்கரங்கள் அந்த நாட்டின் குரல்வளையையே பிடித்து நெருக்கி விட்டன...... நகரங்கள் அழிக்கப்பட்டன. எல்லாம் அழிந்தன. அழிக்கப்பட்டன. இத்தனை அழிவுகளுக்கிடையேயும் ஒன்று மட்டும் அசையாமல், ஆடாமல், அப்படியே உறுதியாக நின்றது. ஜப்பானிய மக்களின் உள்ள உறுதி மட்டும் அசையாமல் நிலைத்து நின்றது. அவர்கள் மீண்டும் உழைத்தார்கள். கடுமையாக உழைத்தார்கள். இந்தச் சில பல ஆண்டுகளில் தரை மட்டமாகிவிட்ட தங்கள் நாட்டை மீண்டும் சொர்க்கபுரியாக மாற்றியமைத்து விட்டார்கள். இன்று தொழில் வளர்ச்சியிலே ஜப்பான் உலக நாடுகளிடையே தலை நிமிர்ந்து நிற்கிறது. பொருளாதார நிபுணர்களுக்கு இன்று ஒரு புதிராகவே விளங்குகிறது ஜப்பான். உலகிலே கப்பல் கட்டும் துறையிலும், வானொலிப் பெட்டிகள் தயாரிப்புத் துறையிலும் முதன்மையிடம் பெற்று விளங்குகிறது. அமெரிக்காவிற்கு அடுத்தபடி கார்கள் தயாரிக்கும் நாடு ஜப்பான்தான். அதிகமான துணிகள் ஏற்றுமதி செய்யும் நாடு ஜப்பான். இரும்பு உருக்கு உற்பத்தியில் ஆசியாவில் முதல் இடம் வகிக்கும் நாடு ஜப்பான். சிறு தொழில் வளர்ச்சியில் ஜப்பான் நாடு தான் முதலிடம் வகிக்கிறது. வீட்டுக்கு ஒரு தொழிற்சாலை அமைத்து விட்டார்கள் அங்கே. நாம் நின்று பேசிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் ஜப்பான் நாட்டில் ஒரு டிரான்ஸிஸ்டர் செய்து நம்முன் கொண்டு வந்து வைத்து விடுவார்கள். இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால் இவை எதற்கும் ஜப்பான் நாட்டில் மூலப்பொருள்களே கிடையாது. இரும்புக் கனி, நிலக்கரி, ‘பஞ்சு, அலுமினியக் கனி அனைத்தையும் அந்த நாடு வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கிறது. மூலப்பொருள்களை இறக்குமதி செய்து, விற்பனைப் பொருள்களை உற்பத்தி செய்து, உலகில் முதன்மை பெற்று ஒரு நாடு விளங்குகிறது என்றால், அதற்கு ஒரே ஒரு விடை தான் உண்டு. அதுதான் அந்த நாட்டு மக்களின் உழைப்பு, உழைப்பு. இந்த நாட்டைப்போல் வேலை வெட்டி இன்றி மூலைக்கு மூலை மக்கள் கூடி நின்று அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் நிலைமையை அந்த நாட்டில் காணவே முடியாது. அவர்கள் உழைக்கிறார்கள்; கடுமையாக உழைக்கிறார்கள். ‘‘செய்யும் தொழிலே தெய்வம்’’ என்ற தாரக மந்திரத்தை நெஞ்சிலிறுத்திக் கடுமையாக உழைக்கிறார்கள். வீட்டுக்கு ஒரு தொழிற்சாலை ..................இது தான் அவர்களுடைய வெற்றியின் இரகசியம்.'' பேரறிஞர் அண்ணா இதைத்தான் சொன்னார். நம் தமிழகத்திலும் வீட்டுக்கு ஒரு தொழிற்சாலை உண்டு பண்ண வேண்டும் என்று அவர் கனவு கண்டார். செந்தமிழ் நாட்டில் என்ன இல்லை? மூலப்பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. மக்கள் சக்தி அதிகமாக இருக்கிறது. அறிவுத் திறனில் நாம் யாருக்கும் குறைந்தவர்களில்லை. பார்க்கப்போனால் நம் இந்திய நாட்டைவிட எட்டு மடங்கு சிறியது ஜப்பான். நம்மிடமிருக்கும் குறையெல்லாம், நம்மிடையே மன வளம் இல்லை; ஆர்வம் இல்லை; வீண் பொழுது போக்கி, இன்பம் காணபதிலேதான் நிறைவு அடைகிறோம்.






" நம் அரசு, சிறு தொழில் வளர்ச்சியில் தீவிரக் கவனம் செலுத்துகிறது. சிறு தொழில்கள் ஆரம்பிக்க, வேண்டிய உதவிகளைச் செய்கிறது. பண உதவி செய்கிறது; தொழில் நுட்ப ஆலோசனை கூறுகிறது; மற்ற எல்லா உதவிகளையும் தருகிறது. மக்கள் தான் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். படித்த இளைஞர்கள் சிறு தொழிலில் பெருவாரியாக ஈடுபட வேண்டும். படிப்பது வேலைக்குப் போகத்தான் என்ற தவருன எண்ணம் போக்கப்படல் வேண்டும். வாழ்க்கையை அனுபவிப்பது என்பது வேறு; வாழ்க்கையை வீணடிப்பது என்பது வேறு இல்லையா ? "

" சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு நம் தமிழக அரசு என்ன செய்கிறது? நான் கொஞ்சம் பணம் வைத்திருக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஏதாவது தொழில் செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் எனக்கு இருக்கிறது. மேற்கொண்டு அதைச் செயல்படுத்த நான் என்ன செய்ய வேண்டும்? யாரை அணுக வேண்டும் என்று தெரியவில்லை. விளக்கமாகச் சொன்னல் பயனுள்ளதாக இருக்குமல்லவா ?"

" அருமையான கேள்வி கேட்டீர்கள்; சொல்கிறேன். சிறு தொழில் துவங்க அரசு உதவி செய்கிறது என்று சொன்னேன். முதலில் சிறு தொழில் என்ருல் என்ன என்று சொல்கிறேன்.

ஒரு தொழிற்சாலையில் எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்தாலும், அதில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள், கருவிச் சாதனங்கள் (Machinery and equipment) இவைகளில், மொத்த மூலதன முதலீடு ரூ. 7.5 லட்சத்திற்கு மேற்படாதிருந்தால் அதனை ஒரு சிறு தொழில் எனலாம். நிலத்தின் மதிப்பு, கட்டடத்தின் மதிப்பு, மற்றும் தொழிலை நடத்த வேண்டிய நடைமுறை மூலதனம் இவையெல்லாம் முதலீட்டை நிர்ணயிக்கும்போது கணக்கில் சேர்க்கப்படுவதில்லை. இயந்திர சாதனங்களில் முதலீட்டில் உச்ச அளவான பாகங்களையும் துணைக் கருவிகளையும் தயாரித்து அளிக்கும் துணைத் தொழில்கள் (Ancillary Industries) எனப்படும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் ரூ. 10 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது இத்தகைய தொழில் நிறுவனங்களில் இயந்திர சாதனங்களின் மீதான மொத்த மூலதன முதலீடு ரூபாய் 10 லட்சத்திற்கு மேற்படாமலிருந்தால். அவையும் சிறுதொழில்களாகவே கொள்ளப்படும்

கைத்தறி, விசைத்தறி, கிராமக் கைத்தொழில்கள், கைத்திறத் தொழில் (Handicrafts), கயிறு, பட்டு போன்ற தனிப்பட்ட அங்கங்களின் நிர்வாகத்திற்குட்பட்ட தொழில்கள் சிறுதொழில் திட்டத்தில் சேர்க்கப்படுவதில்லை.

மத்திய அரசும், மாநில அரசும் சிறு தொழில்களின் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பல்வேறு உதவித் திட்டங்களைத் தொடங்கி, நடத்தி வருகின்றன.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், ஈரோடு, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் இதன் நிலையங்கள் (Extension Centres) உள்ளன. இவை அளித்து வரும் உதவிகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

தொழில் நுட்ப ஆலோசனை, பொது (தொழில் நுட்ப) வசதிகள் கிடைப்பதற்கான உதவி, தொழிற்பயிற்சி வசதிகள், பரிசோதனை வசதிகள், தயாரிக்கும் பொருளை விற்பதில் உதவி ஆகியவைகள்,

லாபகரமான சிறு தொழிலைத் தேர்ந்தெடுத்தல், பொருத்தமான இயந்திர சாதனங்களை நிறுவுதல், உற்பத்தி நுணுக்கங்கள், மூலப்பொருள்களைப் பக்குவப்படுத்துதல், தயாரிக்கப்படுகின்ற பொருள்கள் நல்ல தரமுள்ளவையாக உள்ளனவா எனப் பரிசீலிக்க, அங்கீகரிக்கப்பட்ட தரப் பரிசோதனை முறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு இந் நிலையத்திலிருந்து ஆலோசனை பெறலாம். சிறு தொழிலதிபர்களுக்குத் தேவையான திட்ட அறிக்கைகள் ( Project Reports), தொழில் நுட்ப விவரங்களடங்கிய அறிக்கைகள் ( Schemes and Technical Bulletins) இவைகளையும் இந் நிலையம் தயாரித்து வழங்குகிறது.

சாந்தியமானால், சிறு அளவில் உற்பத்தி முறைகளையும் செய்து காட்டுகிறது.

இயந்திரங்கள், பாகங்கள் இவற்றின் அமைப்புப் பற்றிய வரைவுகள் (Designs and Drawings) வழங்குதல், மற்றும் அச்சுகள் (Dies) கருவிகள், இயந்திர அமைப்புக்கான உபகரணங்கள் (Jigs and Fixtures) உள் உறுப்புகள் முதலியவற்றைத் தயாரிப்பதற்குரிய பட்டறை வசதிகளைச் செய்து கொடுப்பது இந்த உதவியில் அடங்கும். தேவைப்படும் பொழுது முடிந்த அளவுக்கு மூல முன் மாதிரிகளையும் (Proto—types) தயாரித்துக் கொடுக்கிறது. இந்த வசதிகளைச் சிறு தொழிலதிபர்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தின் பேரில் செய்து தருகிறது.



தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனை (Productivity) அதிகரிப்பதற்கான இந்நிலையத்திலும் மற்றும் இதன் கிளை நிலையங்களிலும் உள்ள பட்டறைகளில், அடிப்படைத் தொழில்களில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. மேலும், மின் முலாம் பூசுதல், தோல் பதனிடுதல், பாத ஆணிகள் செய்தல், ஒளி விளக்குகள் ( Neon and glow signs ) மற்றும் கண்ணாடியாலான ஆய்வுக்கூட உபகரணங்கள் ( Scientific glass Apparatus ) செய்வது போன்ற சில தொழில்களில் தனிப்பட்ட முறையில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இவையன்றி, சிறு தொழிலதிபர்களின் வசதிக்காகத் தொழில் வியாபாரம் முதலியவைகளை நிர்வகிப்பது பற்றியும் பயிற்சியளிக்கப்படுகிறது.

இந்நிலையத்தைச் சார்ந்த பரிசோதனைச் சாலைகளில் குறைந்த கட்டணத்தில் பரிசோதனைகள் செய்து கொள்ள வசதியளிக்கப்படுகிறது.

சிறு தொழிலதிபர், குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு மார்க்கெட்டில் உள்ள விற்பனை வாய்ப்புகளைப் பற்றித் தகவல் கோரினால், இந்நிலையம் தகவல்களைச் சேகரித்து வழங்குகிறது. ஒரு சிறு தொழிலதிபர், குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் தனது பொருள் விற்பனையை அதிகரிக்க விரும்பி, அதற்காக அப் பொருள் விற்பனைக்கு அப்பகுதியில் உள்ள வாய்ப்பினைப் பற்றி அறிய விரும்பி இந்நிலையத்தை அணுகினால், இந்நிலையம் ஆய்வு நடத்தி விற்பனைக்குள்ள வாய்ப்பினைத் தெரிவிக்கிறது. இந்த ஆய்வினை நடத்துவதற்கு ஒரு பொருளுக்கு ரூபாய் 250 எனக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மாநிலத்தின் சிறு தொழில் அபிவிருத்தியோடு நேரடியான தொடர்பு கொண்டிருப்பது மாநிலத் தொழில் வாணிகத் துறையேயாகும். சிறு தொழில்களைப் பொறுத்தவரை இதன் முக்கிய பணிகளாவன :

1. தொழிற்பேட்டைகளில், தொழிற்சாலைக் கட்டடங்களும், திருத்திய மனைகளும் ஒதுக்குதல்.

2. பொது (தொழில் நுட்ப) வசதிகள் அமைத்துக் கொடுப்பது.

3. மிகக் குறைந்த அளவில் கிடைக்கும் மூலப் பொருள்களைச் சிறு தொழில்களுக்குப் பகிர்ந்து அளிப்பது.

4. மாநில அரசுத் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ்க், கடனுதவி வழங்குவது.

மாநில அரசுத் தொழிலுதவிச் சட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்த சிறு தொழில்களுக்குக் கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காகக் கடனுதவி அளிக்கப்படுகிறது.

நிலம் வாங்குதல், தொழிற்சாலைக் கட்டடம் கட்டுதல், இயந்திரங்கள், தளவாடங்கள், கருவிகள் முதலியன வாங்குதல், ஏற்கனவே உள்ள கடனைத் தீர்ப்பது போன்றவற்றிற்கும் மற்றும் நடைமுறை மூலதனத்திற்கும் கடன் வழங்கப்படுகிறது. தவிர்க்க முடியாத நிலைகளில் மட்டுமே, நடைமுறை மூலதனத்திற்கான கடன் வழங்கப்படுகிறது. அதுவும் புதிய தொழில்களைத்

துவக்குபவர்களில், தகுதி வாய்ந்தவர்களுக்கு மட்டும் தான் இந்த உதவி கிடைக்கும்.

தொழில் நிறுவனத்தின் சொத்துக்கள் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியை மட்டுமோ கடன் வழங்கும் அதிகாரிகள் தேவையெனக் கருதும் அளவிற்கு அடமானமாக ஏற்றுக் கொண்டு அதன் பேரில் கடன் கொடுக்கிறார்கள். தொழில் நிறுவனத்திற்குச் சொந்தமாயிருக்கும் அசையாச் சொத்துக்களாகிய நிலம், கட்டடம், இயந்திரங்கள், தளவாடங்கள் இவைகளையும் கடனுக்கு ஈடாகக்கொடுக்கலாம். தொழில் நிறுவனத்தின் சொத்துக்கள், மற்றும் துணை ஈடாக வைக்கப்படுகின்ற இதர சொத்துக்கள் இவற்றின் நிகர மதிப்பில் 75 சத வீதம் வரை கடன் வழங்கப்படும்.

இச்சட்டத்தின்கீழ், ஒரு தொழில் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படக்கூடிய கடன் தொகையின் உச்ச அளவு ரூபாய் 2 லட்சமாகும்.

ரூபாய் 50,000 வரையிலான கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு வட்டி 6·75 சத வீதமாகும். ரூபாய் 50,000க்கும் மேற்பட்டு ரூபாய் 2 லட்சம் வரையிலான தொகைக்குத் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள வட்டி ஆண்டொன்றுக்கு 7·75 சதவீதமாகும்.

இச்சட்டத்தின்கீழ்ப் பெறும் கடன் தொகையைக் கடன் வழங்கும் அதிகாரி நிர்ணயிக்கும் காலவரையறைக்குள், வருடாந்திர சம தவணைகளில் திருப்பிச் செலுத்துதல் வேண்டும். ஆனால் கடன் தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்தும் காலம் 10 ஆண்டுகளுக்கும் மேற்படலாகாது.

பொதுவாக இந்திய ஸ்டேட் பாங்க், சிறு தொழில்களின் நடைமுறை மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கெனக் குறுகிய காலக் கடன் ( Short term loan ) வசதியளிக்கிறது. இந்தக் குறுகிய காலக் கடன் தொகைகளை ஓராண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தி விட வேண்டும். இதனைப் புதுப்பித்தும் கொள்ளலாம். நிலையாய் அமைந்த சிறு தொழில்களுக்கு அவைகளது தயாரிப்பைப் பெருக்கவும், நவீன இயந்திரங்களை நிறுவி, தொழிலைச் சீரமைக்கவும் ஸ்டேட் பாங்க் இடைக்காலக் கடன் வழங்குகிறது. இத்துடன் தொகை 10 வருட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

கிராமத் தொழில்கள், தனியார் சிறு தொழில் நிறுவனங்கள், கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் இவைகளுக்கு 1922-ம் ஆண்டின் தமிழக அரசாங்கத் தொழில் உதவிச் சட்டத்தின்கீழ்அவர்களது தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குதல், நில உரிமை பெறல், தொழிற் கூடக் கட்டடங்கள் உருவாக்குவது போன்ற செயல்களுக்கும் மற்றும் நடைமுறை மூலதனச் செலவுக்கும் அரசாங்கம் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வசதியளித்துக் கடன் வழங்குகிறது.

அரசு உதவியைப் பெறுவதற்கு யார் யாருக்கு மனுச் செய்துகொள்ள வேண்டும் என்ற விவரங்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

| விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய அலுவலர். | வழங்கப்படும் கடன் தொகையின் உச்ச வரம்பு ரூபாய். |
|---|---|
| (1) குடிசைத் தொழில் அலுவலர், தஞ்சாவூர், உதக மண்டலம், மதுரை, திருநெல்வேலி. | 2,000 வரை |
| (2) சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி தொழில் வணிக இயக்குநர்கள். (வேலூர், சென்னை-2, கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சிவகங்கை, நாகர்கோவில், செங்கல்பட்டு மாவட்ட உதவி தொழில் வணிக இயக்குநர் அலுவலகம், சென்னை-2ல் உள்ளது) | 500 வரை |
| (3) வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மண்டலத் துணைத் தொழில் வணிக இயக்குநர்கள். | 7,500 வரை |
| (4) இயக்குநர், தொழில் வணிகத் துறை, சேப்பாக்கம், சென்னை-5. | 7,500 முதல் 2 லட்சம் வரை |

வழங்கப்பெற்ற கடன் தொகை ஐந்து முதல் பத்து வருட சமமான தவணைகளில் வசூலிக்கப்படும். கடன் பெற விரும்பும் தொழில் நிறுவனங்கள், அதற்கென நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்ப நமூனாக்களைச் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சிறு தொழில் வளர்ச்சியில் அரசு மிகுந்த அக்கறையுடன் பணியாற்றி வருகிறது. படித்த இளைஞர்கள், குறிப்பாகத், தொழிற்படிப்புப் படித்தவர்கள், இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தனியாகச் செய்ய முடியவில்லையென்றால், நாலைந்து பேர் சேர்ந்து இத்துறையில் ஈடுபடலாம்.

'' உழைப்புக்கு மதிப்பளிக்கும் நாடு தான் உலகில் முன்னேற முடியும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். அறிவுத் திறன் இருக்கிறது. ஆர்வம் தான் வேண்டும். இந்த ஆர்வத்தீயை நல்ல நல்ல திட்டங்கள் மூலம் நம் ‘ தமிழக அரசு ’ அணையாத ஒளியாக மாற்றியமைக்க அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டு வருகிறது. மக்கள் உள்ளத் தூய்மையோடு உழைத்தால்—வெட்டிப் பேச்சுக்கோ, திண்ணை வேதாந்தத்திற்கோ, இடமில்லாமல் விரட்டி விடலாம். அணுகுண்டால் அழிந்து கிடந்த ஜப்பான் நாட்டைத் தொழில் மயமாக மாற்றியமைத்தது அந்த நாட்டு மக்களின் உழைப்புச் சக்திதானே ! '' என்று தமது நீண்ட விளக்கவுரையை முடித்தார் நண்பர் ஆறுமுகம்.

'' உங்கள் விளக்கத்திற்கு நன்றி '', என்று கூறி விட்டு நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டேன்.




முத்துப் பல், மோகனப் புன்னகை என்றெல்லாம் பாராட்டப்படுகின்ற பல்லின் நல் வனப்பு, முகத்திற்கு அழகு தருவது மட்டுமல்ல; உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்காமல் இருக்கவும் முக்கியமான ஓர் உறுப்பாகும்.

பல்லில் சொத்தை விழுந்தால் அழுக்குகள் சேர்ந்தால், அதன் மூலம் வயிற்றிலும் உடலின் பிற பாகங்களிலும் பல கோளாறுகள் ஏற்பட ஏதுவாகின்றது.

பல் சொத்தை ஆவதற்குப் பல காரணங்கள் உண்டு.

பொதுவாக, அதிகமான இனிப்புகள் சாப்பிடுவதும் ஒரு காரணம். சாக்லேட், ஐஸ் க்ரீம், மற்றும் மாவுப் பதார்த்தம், சர்க்கரை சேர்ந்த பலகாரங்கள்ஆகியவற்றைச் சாப்பிட்டு விட்டு வாயினை நன்கு கொப்பளிக்காவிட்டால், அவை ஒட்டிக்கொள்வதுண்டு. அதே போல் இரவில் சர்க்கரை கலந்த பாலை அருந்திவிட்டு, வாயைத் துலக்காமல் தூங்குவது நம்மில் பலருடைய பழக்கம். இது தீமையே!

இவ்வாறு வாயைச் சுத்தமாக வைக்காதிருந்தால் அந்த இனிப்புப் பண்டங்கள் வாயில் ஒட்டியிருந்து புழுக்களை உற்பத்தி செய்கின்றன. நாளடைவில் அந்த நுண்ணிய புழுக்கள் பல்லைக் குடைந்து சொத்தைப் பல்லை ஏற்படுத்துகின்றன. இந்த நோய் சிலருக்குப் பாரம்பரியமாக வருவதும் உண்டு. பற்களின் அமைப்பைப் பொறுத்தும், பல் வளர்ச்சியிலுள்ள குறைபாடுகளைப் பொறுத்தும் ஏற்படுவதுண்டு. நோய்வாய்ப் படும் போது பற்களைச் சுத்தமாகப் பேணிக் காக்காததாலும் சொத்தைப் பல் ஏற்பட நேரிடும்.

ஆரம்ப காலத்தில் சொத்தைப் பல் ஏற்படவிருக்கும் பாகத்தில் மங்கல் நிறம் அல்லது கறுப்பு நிறப் புள்ளிகள் தோன்றும். சூடான அல்லது மிகக் குளிர்ந்த பானங்கள் அருந்தும் போது அந்தப் பல்லில் பட்டதும் கூச்சம் கொடுக்கும்.

நாளடைவில் அதில் சிறிது பள்ளம் ஏற்பட்டுச் சாப்பிடும் ஆகாரம் அதில் போய்த் தங்கிக் கொள்ளும். அது வாய் நாற்றத்தையும், குடைச்சலையும், பல் வலியையும் தரும்.

முதலிலேயே கவனிக்காமல் வளர விட்டுவிட்டால், நான்கைந்து ஆண்டுகளானதும் இந்தப் பற்கள் மிகுந்த தொல்லை தரும். தாங்க முடியாத வலியினை ஏற்படுத்தும். புழுக்கள் ரத்தத்தில் ஊடுருவிச் சென்று பிற பாகங்களையும் பாதிக்கும். சில சமயங்களில் ஈறும் கன்னமும் வீங்கி உணவு உட்கொள்ள முடியாத நிலையினை உண்டாக்கும்.

நாம் உண்ணுகின்ற உணவினை நோய் தாக்காமலிருக்க வேண்டியது அவசியமாகையால் பல் நோய்களை உடனடியாகக் கவனிக்க வேண்டும்!

சொத்தைப் பல்லை அடைக்கும் பகுதி.





பல் பிடுங்குமுன் மரத்துப்போவதற்காக ஊசி போடப்படுகிறது.

பல் நோய்களைக் கவனிப்பதற்கென்று சென்னையில் தனியாக அரசின் மருத்துவ மனை, கோட்டை இரயில் நிலையத்திற்கு எதிர்ப்புறத்தில் உள்ளது.

புதிய கட்டடத்தில் இயங்கும் இந்த மருத்துவ மனையில் மற்றொரு புதுமையும் உண்டு.

பல் நோயாளிகள் வந்ததும், அவர்களை வரவேற்று, உரிய இடத்திற்கு அழைத்துச் சென்று உதவிட அங்கேயே ஒரு தலைமை மருத்துவத் துணையாளர் (Head Nurse) இருக்கிறார். அதோடு, பல் மருத்துவ மனையின் கனிவான, அதே சமயம் கண்டிப்பான கண்காணிப்பாளர் டாக்டர் இராமச்சந்திரன் அவ்வப்போது நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறார். இதன் காரணமாக, அங்கு நோயாளிகள் பதிவு செய்யப்படுதல், சோதனைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுதல் ஆகியவை தங்கு தடையின்றி ஒழுங்காக, ஒரே சீராக நடைபெறுகின்றன.

நோயாளிகளுடன் வருபவர்கள் வரவேற்பு அறையில் நிறுத்திவைக்கப்படுகின்றனர். நோயாளிகளுடன் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இதனால், வீணாகக் கூட்டம் சேருவது தடுக்கப்படுகிறது. பணிகளும் விரைவாக நடைபெறுகின்றன. நாளொன்றுக்குச் சுமார் 600-க்கும் மேல் நோயாளிகள் வந்தாலும்கூட மிக விரைவில் அவர்கள் கவனிக்கப்பட்டு இல்லம் திரும்புகின்றனர்.

இங்குப் பதிவு செய்யப்பட்ட பல் நோயாளி முதலில் பக்கத்திலுள்ள ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பப்படுகிறார். அங்கு அது என்ன வகைப் பல் நோய் என்பது ஆய்வு செய்யப்பட்டுச் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்.

எடுத்துக் காட்டாக, ஒருவருக்குச் சொத்தைப் பற்கள் இருந்து, அதுவும் ஆரம்பக் கட்ட நோயாக இருந்தால் பல் அடைக்கும் பகுதிக்கு அனுப்பப்படுகிறார். அங்கு அவருக்கு எந்தத் தேதியில் பல் அடைக்கப்படும் என்பதைக் குறித்துத் தருகிறார்கள். தற்போது அங்கு கிட்டத்தட்ட ஒரு மாதம் வரை பல் அடைக்கப்பட வேண்டியவர்களின் பட்டியல் குறிப்பிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல் அடைக்கும் பகுதிக்குச் சென்றால், பக்கத்திற்கு 12 இயந்திரங்களாக மொத்தம் 24 இயந்திரங்கள் உள்ளன. பல் டாக்டர்களின் மேற்பார்வையின் கீழ், பல் மருத்துவ மாணவ, மாணவியர் இங்கு சொத்தைப் பற்களை அடைக்கின்றனர். முதலில் பல்லிலுள்ள சொத்தைப் பாகங்களும், புழுக்களும் துப்புரவாக நீக்கப்பட்டுப், பின் அதில் பல்லைப் போன்ற கடினமான பொருளைக் கொண்டு அந்தப் பகுதி நன்கு அடைக்கப்படுகிறது. டாக்டர்களும் இந்தப் பல் அடைத்தல் பணியினைச் செய்கிறார்கள்.

இந்தப் பகுதியில் பல் அடைப்பது மட்டுமின்றி, அரைகுறையாக உடைந்துபோன பற்களுக்குத் தொப்பி போல் வைத்துக் குறை பாகத்தை நிறைவு செய்வதும் உண்டு.

அடுத்த கூடத்தில் சொத்தைப் பற்களைப் பிடுங்கும் ஒரு பகுதியுள்ளது. ஐந்தாண்டுக்கு மேல் காலதாமதமான சொத்தைப் பற்கள் அடைக்கக் கூடிய நிலையைத் தாண்டிவிட்டால், இனி எடுத்துத்தான் ஆகவேண்டும் என்று டாக்டர்கள் முடிவு செய்தால், அப் பற்கள் இங்கு அகற்றப்படுகின்றன.

விபத்துக்களில் சிக்கி, அதனால் சில பற்கள் பாதிக்கப்பட்டுப் பற்கள் செத்துவிடுவதும் உண்டு. இந்தப் பற்கள் சாம்பல் நிறமாக மாறிவிடும். இதனையும் இப் பிரிவில் அகற்றி விடுகின்றனர். இப் பகுதியிலும் சுமார் 20-க்கும் மேற்பட்ட இயந்திரங்கள் உள்ளன.

இந்த மருத்துவ மனையில் மொத்தம் ஏழு துறைகள் இருக்கின்றன.

1. ஆய்வுப் பகுதி.

2. சொத்தைப் பற்களை அடைப்பது, உடைந்த பற்களைச் சரி செய்வது.

3. சொத்தைப் பல்லைப் பிடுங்குவது, விபத்துக்களால் பாதிக்கப்பட்ட பற்களைப் பிடுங்குவது.

4. ஈறு நோய்களைக் கவனிப்பது ; பற்களைச் சுத்தம் செய்வது; காரைகளை அகற்றுவது.

5. தெத்துப் பற்களை நீக்கிச் சரி செய்வது. (கோணல் மாணலாகப் பல்லுள்ள பெண்கள் அவை தமது அழகைக் குறைப்பதால் அவற்றை நீக்குவதற்கு இங்கு வருகின்றனர். எனவே, இதை அழகு செய் துறை எனலாம்.)

6. கதிரியற் பிரிவு. இங்கு விபத்துக்கள் மற்றவைகளால் பாதிக்கப்படும் பற்கள் 'எக்ஸ்ரே'



சொத்தைப் பல்லை அடைக்கிறார் டாக்டர்

எடுத்துப் பார்க்கப்படுகின்றன. இதற்காகச் சிறிய 'எக்ஸ்ரே' படங்கள் (பிலிம்) உள்ளன.

7. பொய்ப் பல், பிளாஸ்டிக் காது, மூக்கு முதலியவை கட்டும் பிரிவு.

இவை தவிரக் குழந்தைகளுக்குப் பல் நோய் வராமல் (வரும் முன் காக்கும்) பாதுகாக்கும் பகுதியும் உள்ளது. இங்கு சுமார் ஒன்றரை வயது முதல், அதாவது பல் முளைக்கும் பருவந் தொட்டு, உள்ள சிறுவர் சிறுமியருக்குப் பற்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. பல்லில் நோய் வராமல் தடுப்பதற்கு இப்பிரிவு பெரிதும் பயன் படுகிறது.

பிற அரசு மருத்துவ மனைகளில் உள்ளது போல் இங்கும் 200 ரூபாய்க்குக் கீழ் வருவாய் உள்ள வர்களுக்கும், அரசிதழ்ப் பதிவு பெறாத அரசு ஊழியர்களுக்கும் இலவசமாகச் சிகிச்சை அளிக்கப் படுகின்றது.

இந்த மருத்துவ மனையுடன் பல் வைத்தியக் கல்லூரியும் இணைக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுப் பட்டப் படிப்பான (B. D. S.) இதில் ஆண்டுக்கு 45 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இரண் டாண்டு பட்ட மேல் படிப்பும் இங்கு உள்ளது.

முத்துப் பற்களைப் போல் எழிலாகத் தூய்மை யாகத் திகழ்கிறது இந்த மருத்துவ மனை.


# வின்டெக்ஸ்

## விசயமங்கலம், தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்
## லிட் : A. A. 245

**விசயமங்கலம்** (அஞ்சல்), **ஈரோடு** (வட்டம்),
**கோயமுத்தூர் மாவட்டம்.**

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள், வேட்டிகள், தரத்திற்கும் நவீன ரகத்திற்கும் கெட்டிச் சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் மிகச் சிறந்தவை.

தமிழ்நாடு அரசினரால் முதற் பரிசுகளும் அனேக கண்காட்சிகளில் நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லா விற்பனை நிலையங்களிலும் எங்கள் ஜவுளிகள் கிடைக்கும்.

எப்பொழுதும் **'வின்டெக்ஸ்'** பெட்ஷீட் ரகங்களையே வாங்குங்கள்.

**T. P. பஞ்சாபகேசன்,**
**செயலாளர்.**

**V. C. சின்னசாமி,**
**தலைவர்.**




ரோம் நாட்டு மாமன்னன் டைபீரியன் சீசரின் பிறந்த நாள் விழா, பார்த்தோர் வியத்தகு அளவிற்குக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. மன்னருக்கு வாழ்த்துக் கூற வந்த பிரபுக்கள், வணிகர் குலக் கோமான்கள்; அவர்தம் துணைவியர் மட்டுமல்ல: வாழ்த்த வந்திருந்த குடி மக்கள் அனைவரும் உடுத்தியிருந்த விலை உயர்ந்த பட்டாடைகள் கூட மன்னனின் கவனத்தைக் கவர்ந்தன.

கிரேக்கத்தில் இத்தகைய பட்டாடைகள் கிடையாதே, இதை எங்கிருந்து பெற்றனர் என்பதை அறிய ஆவல் கொண்ட மன்னன் அருகிலிருந்த அமைச்சரிடம் அதுபற்றி வினவினான்.

அது தமிழகத்திலிருந்து வருகிறதென்றும்; எடைக்கு எடை பொன் கொடுக்க வேண்டிய அளவு மிக விலை உயர்ந்தது என்றும் அமைச்சர் அறிவித்தார்.

அந்த அளவு தமிழகத்தின் பட்டாடைகள் திரை கடல் தாண்டிப் புகழ் பரப்பி நின்றன. பாலாவி யன்ன பட்டாடை நெய்தனர், பண்டைத் தமிழர்கள். ஏசு கிறிஸ்து பிறப்பதற்கு 4,000 ஆண்டுகளுக்கு முன்னதாக, அதாவது இற்றைக்குச் சுமார் 6,000 ஆண்டுகட்கு முன்பாகவே இந்தியாவில் பட்டுத் தொழில் சிறப்புற விளங்கியது என்றும் இங்கிருந்து மெள்ள மெள்ளப் பாரசீகம், மத்திய ஆசியப் பகுதிகளுக்குப் பரவியதாகவும் வட மொழி இலக்கியங்கள் கூறுகின்றன.

பட்டின் தோற்றம் பற்றி மற்றொரு கதையும் உண்டு. சீனத்திலிருந்தே பட்டு தோன்றியது என்பதே அது.

கி.மு. 2,640-ல் (சுமார் 4,600 ஆண்டுகளுக்கு முன்) சீனாவை ஹ்வாங்டி என்ற சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். மன்னரின் மனைவி 'சிலிங்' ஒரு நாள் மாலையில் அரண்மனையிலுள்ள தோட்டத்தில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தாள். அப்போது அங்கிருந்த முசுக்கட்டைச் செடியொன்றில் ஒரு புழுவானது அழகிய இழைகளால் கூடு கட்டுவதைக் கண்டாள். கூட்டின் அழகை வியந்து செடியிலிருந்து கூட்டை எடுத்துத் தேநீரில் போட்டாள். பின் இழையின் ஒரு முனையினைப் பிடித்துப் பிரித்து எடுத்தாள். மிக மெல்லிய அழகிய இழை வருவதைக் கண்ணுற்ற இராணி இந்த எழிலான இழையினால் துணி நெய்து உடுத்தினால் எவ்வாறு இருக்கும் என்று எண்ணிப் பார்த்தாள்.

இராணியின் எண்ணத்தை அறிந்த மாமன்னன் அரண்மனையைச் சேர்ந்த தோட்டத்தில்

முசுக்கட்டைச் செடிகளைப் பயிரிடச் செய்தான். பல்லாயிரக்கணக்கான பட்டுப் புழுக்களை வளர்க்கவும் ஏற்பாடு செய்தான். தலை சிறந்த சீன நெசவாளர்கள் அந்தப் பட்டு நூல்களைக் கொண்டு பட்டாடை நெய்தனர். இது தான் பட்டின் வரலாறு என்று சீனத்துச் சரித்திரம் கூறுகின்றது.

சீன மொழியில் அதற்கு 'சி' என்ற பெயரிட்டனர். 'சி' விளையும் நாடே சீனம் ஆயிற்று என்றும் கூறப்படுகிறது. அதற்குப்பின் அங்கிருந்து இந்தியாவுக்குப் பட்டுத் தொழில் பரவியதாக அந்தக் கதை கூறுகிறது. சீனத்து இளவரசியார் பட்டுப்பூச்சியின் முட்டைகளையும் முசுக்கட்டை விதைகளையும் தனது சிகையலங்காரத்தில் மறைத்து வைத்து இந்தியாவிற்குக் கடத்திக் கொண்டு வந்ததாகவும் அக்கதை மேலும் கூறுகிறது.

பிற்காலத்தில் அது ரோமாபுரி, கிரேக்கம் போன்ற மேலை நாடுகளுக்கும் பரவியது. துவக்கக் காலத்தில் அது மிகவும் அதிக விலைக்கு விற்றதால், பட்டு உடுத்துவது மிகப் பெரிய ஆடம்பரமாகக் கருதப்பட்டது.

ஜஸ்டீனியன் என்ற மன்னன், பட்டுத் தொழிலை, அரசுக்குச் சொந்தமான தொழிலாக்கினன். கான்ஸ்டாண்டிநோபிள் அரண்மனைக்குள்ளேயே கைத்தறிகளை நிறுவி, மகளிரைக் கொண்டு பட்டு நெசவினைச் செய்து வந்தான், அந்த மன்னன்.

பூம்புகாரில் சோழ காலப் பெண்டிர் பகலில் பட்டாடையும், இரவில் பருத்தியாடையும் உடுத்தி வந்தனர் என்று நமது பட்டினப்பாலை போன்ற பண்டை நூல்கள் கூறுகின்றன.

பார் புகழ் பெற்ற இந்தப் பட்டு நூல் உற்பத்தியில் இன்று தமிழகம் முனைந்து ஈடுபட்டுள்ளது.

தமிழகத்தில் ஏர்க்காடு, ஒசூர், தாளவாடி, கொல்லிமலை, வெண்ணை மங்கலம், தங்கனிக் கோட்டை, கூனூர் போன்ற 15 இடங்களில் தமிழக அரசின் பட்டுப் பண்ணைகள் உள்ளன.

ஏர்க்காட்டிலுள்ள அரசினர் பண்ணைகளில் ஜப்பான்-சீன ரகப் பட்டுப் பூச்சிகளை அதிக



அளவு உற்பத்தி செய்து அவற்றை ஒசூரிலுள்ள அரசினர் பட்டுப்பண்ணைக்கு அனுப்புகின்றனர். அங்கு இந்த ரக ஆண் பூச்சியையும், தமிழகப் பெண் பட்டுப் பூச்சியையும் சேர்த்துக் கலப்பினப் புழுக்களைத் தயாரிக்கிறார்கள். பின் அந்தக் கலப்பினப் புழுக்கள் கட்டும் கூட்டைப் பக்குவப்படுத்தி அதிலிருந்து ஏராளமான பட்டு நூல்களை எடுக்கிறார்கள்.

## பிறப்பு வளர்ப்பு

பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்வது எப்படி? முதலில் பட்டுப் பூச்சிகளை ஓர் அட்டைப் பலகையில் வைத்து அதன்மீது மேல் பாகம் திறந்துள்ள 'கப்' போன்ற ஒரு குவளையால் மூடி வைக்கின்றனர். ஒரு குவளையில் ஒரு பூச்சி வீதம் சுமார் 25 பூச்சிகள் வைக்கப்படுகின்றன.

பட்டுக் கூடுகள்.



அவ்வாறு வைக்கப்பட்ட ஒவ்வொரு பூச்சியும் 400 முதல் 500 வரை முட்டையிடும். ஒரு தட்டில் மொத்தம் சுமார் 10,000 முட்டையிருக்கும்.

முட்டையிட்ட 10-வது நாளில் முட்டையிலிருந்து வெளிவரும் புழு, சிறிய எறும்பு அளவிலிருக்கும்.

அப்போது புழுக்களுக்கு, முசுக்கட்டையின் தளிர் இலைகளைச் சிறிது சிறிதாக நறுக்கிப் போடுவார்கள். இதற்காக ஏர்க்காட்டில் ஆறே கால் ஏக்கர் பண்ணையுள்ளது. அதில் 5 ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டைச் செடிகள் உள்ளன. புழு வளர வளர ஏராளமாக இந்த இலைகளை உட்கொண்டு 30 நாட்களில் ஒரு விரலளவு பெரிதாகி விடும். அதாவது பிறந்த போது இருந்ததைவிட 10,000 மடங்கு பெரிதாகிறது.

புழு உட்கொண்ட ஆகாரம் ஜவ்வு போன்று மாறிவிட்டால், அது கூடு கட்டும் பருவம் அடைந்து விட்டது என்று தெரிந்துகொள்ளலாம். அப்போது புழு ஒருவித மினுமினுப்புடன் தோன்றும். புழுவிலிருந்து பட்டும் வெளிவரத் துவங்கும்.

இந்தப் பருவத்தில்தான் அது கூடுகட்ட ஆரம்பிக்கும். இவ்வாறு கூடுகட்டும் பருவத்தில் பட்டுப்பூச்சியை 'சந்திரைக்' என்று சொல்லப்பட்ட மூங்கில் கீற்றுத் தட்டில் அல்லது 'மௌன்டேஜுகள்' என்ற மூங்கில் கீற்றுத் தட்டுகளில் எடுத்து வைப்பார்கள். அங்கு ஒவ்வொரு புழுவும் தன்னைச் சுற்றி ஒரு வெண்மை நிறமான நூலினுல் கூடு கட்டும். இந்தக் கூடுதான் பட்டு நூல் கூடு. ஒரு கூடு கட்ட 24 மணி நேரம் முதல் 30, 35 மணி நேரம் வரை ஆகும். ஏர்க்காட்டில் உள்ளது விதைப் பண்ணையான படியால் இங்கு பட்டுநூல் தயாரிப்பதில்லை.

இங்கு தயாராகும் முட்டைக் கூடுகளில் ஒவ்வொரு முறையும் விதைக்காக (பூச்சிகளுக்காக) சுமார் 20 கூடுகளை எடுத்து வைத்துக் கொண்டு மீதியைக் கூடுகட்டிய 5 நாட்களில் ஒசூருக்கு அனுப்பி விடுகின்றனர். ஆண்டுக்குச் சுமார் ஒரு லட்சம் விதைக்கூடுகள் ஒசூருக்கு ஏர்க்காட்டுப் பண்ணையிலிருந்து அனுப்பப்படுகின்றன.

ஆண் பூச்சிகளும் பெண் பூச்சிகளும் சுமார் 5 அல்லது 6 மணி நேர சேர்க்கைக்குப் பின் சுமார் 400 முதல் 500 முட்டைகள் வரை யிடுகின்றன.

இவற்றிலிருந்து வரும் கலப்பினப் புழுக்கள் கட்டும் கூடுகளையே பட்டுக்குப் பயன்படுத்துகின்றனர்.

தரமான ஒரு கூட்டைப் பிரித்தால் சுமார் 500 மீட்டர் நீளப் பட்டு நூல் கிடைக்கும். சில மேலை நாட்டு ரகங்களில் 800 முதல் 1200 மீட்டர் வரை நூல் கிடைப்பதும் உண்டு.

பட்டு நூலின் தரம் நீளத்தில் மட்டுமல்லாமல் எடையைப் பொறுத்தும் உள்ளது. பட்டுப் புழுக் கூடுகளை ஜப்பானில் ஏழு ரகங்களாகப் பிரிக்கின்றனர். 32 சென்டிகிராமுக்கும் எடைக்கு மேலுள்ளது சிறந்த ரகம். 27·5 சென்டி கிராமிலிருந்து 32 சென்டி கிராம் வரை உள்ளது, முதல் ரகம். இப்படி மொத்தம் ஏழு ரகங்களாகப் பிரிக்கப்படுகின்றன. கடைசி ரகம் 15 சென்டி கிராமுக்கும் குறைந்த எடையுள்ளதாகும். தற்போது தமிழ் நாட்டில் ஓசூர், தாளவாடி போன்ற பகுதிகளிலிருந்துசுமார் இரண்டே முக்கால் லட்ச ரூபாய் மதிப்புள்ள பட்டு நூல்கள் கிடைக்கின்றன. சுமார் 20,000-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தமிழகத்திற்குத் தேவையான பட்டு நூல்களில் 99 சதவீதம் பெங்களூரிலிருந்துதான் வாங்கப்படுகிறது.

பட்டு உற்பத்தியை அதிகப்படுத்த, தமிழக அரசு சுமார் 55 லட்ச ரூபாய் செலவில் புதிய திட்டமொன்றை வகுத்து வருகிறது. இத்திட்டப்படி சுமார் 7000 ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டைச் செடி பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக ஒசூர் பகுதியில் கடந்த இரண்டு மாத காலமாக ஒரு திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி அரசாங்கம் தரும் நிலத்தில் பாதியிடத்தில் முசுக்கட்டைச் செடி பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு நிலத்தைக் குத்தகைக்கு விட அரசு முன் வந்துள்ளது.

பொதுவாகக் கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,000 அடி உயரமுள்ளதும், ஆண்டுக்குச் சுமார் 30 அங்குலம் மழை பெய்யக்கூடியதுமான பகுதிகளில் இந்தத் தொழில் சிறப்பாக வளர மிகுந்த வாய்ப்பு உண்டு.

அதனால் வெப்பம் மிகுந்த பகுதிகளை விட்டு விட்டுக் குளிர்ந்த மலைப் பகுதிகளில் இத்தொழிலில் அதிகக் கவனம் செலுத்தி முன்னேற்றுதற்குத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

---

## குறு நிலக் கிழார்களுக்கான திட்டம்

மிகக்குறைந்த நிலங்களை உடைய குறு நிலக் கிழார்களுக்கும், பண்ணைத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கும் திட்டம் ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூபாய் 47·5 கோடி ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் குறுநிலக் கிழார்களுக்கும், தமது வருமானத்திற்கு வேளாண்மையைப் பெரிதும் நம்பியிருக்கும் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் நன்மைபயக்கும்.

தீவிர சாகுபடி முறைகளின் மூலம் உற்பத்தியைப் பெருக்க, குறுநிலக் கிழார்களுக்குத் துணை புரிவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். குறுநிலக் கிழார்களுக்கும், பண்ணைத் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கக்கூடிய கோழி வளர்ப்பு அல்லது பால்பண்ணை போன்ற வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய நடவடிக்கைகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.



2 ஏக்கர் வரை நன்செய் நிலமும், 4 ஏக்கர் வரை புன்செய் நிலமும் உள்ள குறுநிலக்கிழார்களும், வசிப்பதற்கு வீட்டுடன் பண்ணை வேலை செய்வது மூலமாக 50 சதம் அல்லது அதிக வருமானமும் உடைய பண்ணைத் தொழிலாளர்களும் இத்திட்டத்தினால் பயன் பெறுவார்கள். குறு நிலக்கிழார்களில் ஒரு ஏக்கர் வரை நன்செய் நிலமும், 2 ஏக்கர் வரை புன்செய் நிலமும் உள்ளவர்களே முதலில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு திட்டத்திலும் 20,000 குடும்பங்கள் இடம் பெறும்.



சேலம் மாவட்டத்திற்கு ஒரு திட்டமும், வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒரு திட்டமும் தீட்டப்பெற்று மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஒவ்வொரு திட்டத்திற்கும் மானியம் கொடுக்கும் வகையில் மத்திய அரசுக்கு ஏற்படும் செலவு ரூபாய் 1 கோடியாகும். மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் இத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

# இதோ, பராமரிப்புத் தொல்லையற்ற, நடைமுறைக்குதவும் நிரந்தரமான கூரையமைப்புச் சாதனம்

## எவரெஸ்ட் ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட்

## அலைவடிவக் கூரைத் தகடுகள்
## வளைவுள்ள கூரைத் தகடுகள்



**மற்றெந்தக் கூரையமைப்புச் சாதனங்களையும் விட, எவரெஸ்ட் வளைவுள்ள கூரைத் தகடுகளும், அலைவடிவக் கூரைத் தகடுகளும் எவ்வளவு மேம்பட்டது என்று பாருங்கள்:**

● தகடுகளை ஒருங்கிணைப் பதித்து கூரைகளை அமைப்பது எளிது. ● வளைவுள்ள கூரைத் தகடுகள் தாமாகவே நிலைபெற வல்லவை. மரச் சட்ட வேலைப்பாடோ, விலையுயர்ந்த எஃகுக் கட்டுமானங்களோ தேவைப்படா. ● சீதோஷ்ண நிலைகளும் பூச்சிகளும் ஊடுருவ முடியாது. பராமரிப்புத் தொல்லையே இல்லை. ● துருவினாலோ, அரிமானத்தினாலோ சேதமடையாதவை—உண்மையில் வயதேற ஏற வலுவேறும். சீர்கேடோ, ஒழுகலோ, பகுதிகளைப் புதுப்பித்தலோ இருக்கவே இருக்காது. ● தீயினால் பாதிக்கப்படாதவை. சேதங்கள் நேராது, மேலான பாதுகாப்பு. ● நிரந்தரமானவை—ஆயுட்கால முழுதும் நீடித்திருப்பவை.

## எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் தயாரிப்புகள்.

நாடுநெடுகப் பரவிய வினியோக அமைப்பையும், தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப உதவியையும் பின்பலமாகக் கொண்டுள்ளன.

**ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் லிட்,**
(டர்னர் & நியூவால் க்ரூப்பின் ஒரு உறுப்பினம்)
பம்பாய் • கல்கத்தா • ஜபல்பூர் • சென்னை • நியூ டெல்லி
போத்தனூர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

s-Q.12 TM

"அமுதா! அமுதா! இங்கே வா! உனக்கு என்ன வாங்கி வந்திருக்கிறேன் பாரேன்!"

"என்னமோ எனக்குப் பட்டணத்திலிருந்து தங்கச் சங்கிலி வாங்கி வந்துவிட்ட மாதிரி ஒரே அமர்க்களப் படுத்துகிறீர்களே! ஏதோ இரண்டு பழம் வாங்கி வந்திருப்பீர்கள்! அவைகளைக் கொடுக்க அவசரமா? நான் இப்போ வரமுடியாது! கொஞ்சம் பொறுங்க அத்தான்! முதலில் காப்பி சாப்பிடுங்க!! அப்புறமா நீங்க வாங்கி வந்துள்ளதையெல்லாம் மெதுவாகப் பார்த்துக் கொள்கின்றேன்."

"காப்பியும் வேண்டாம், ஒன்றும்வேண்டாம்; உன் வேலையைப் பாரு."

"உங்களுக்குக் காப்பி தயாரித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் அவசரப்படுத்தினீர்கள். அதனால் தான் உடனே வரமுடியவில்லை. இதற்குப் போய் கோபித்துக் கொண்டீர்களே! நீங்க வரா விட்டாலும், நானே காப்பியை எடுத்துக் கொண்டு உங்க இடத்திற்கே வந்துவிட்டேன். காப்பி ஆறிப் போய்விடும். சாப்பிடுங்க அத்தான்!"

"சரி, கீழே வைத்துவிட்டுப் போ; நான் சாப்பிட்டுக் கொள்கின்றேன்."

"முதலில் நீங்க கூப்பிட்ட காரணத்தைச் சொல்லுங்க. அப்புறம் நான் போகின்றேன்."

"இந்த அட்டைப் பெட்டியில் என்ன இருக்கு என்று பாரு!"

"ஏதோ நகை வாங்கிக் கொண்டு வந்திருப்பீர்கள் போலிருக்கு. பட்டணத்தில் ஏதாவது 'ரோல்டுகோல்டு' நகை, விலை மலிவாகக் கிடைச்சுதாக்கும்!"

"எது 'ரோல்டு கோல்டு'? நல்லாப் பாரு; அசல் தங்கம்!" என்று கோபமாக நகைப்பெட்டியைத் திறந்து காட்டினான் முத்து.

"என் அத்தான் இன்றைக்குத் தான் மிகவும் நல்ல அத்தான்!" என்று நகையைக் கண்ட ஆசையில் அமுதா கூறினாள்.

"என்ன தம்பி முத்து! உன் மனைவி உனக்கு 'ஐஸ்' வைக்கிற மாதிரி இருக்கு! என்ன விஷயம்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்துவிட்டார் ஆறுமுகம்.

"வாங்க அண்ணே! வணக்கம்! உட்காருங்க அண்ணே. உங்களைப் பார்த்து நீண்ட நாளாச்சு. இந்தப் பக்கமே வரக்காணோமே!"



அமுதா, அண்ணனுக்கும் காப்பி கொண்டுவா !''

''ஏதோ மகிழ்ச்சியாப் பேசிக் கொண்டிருந்தீர்கள். சிவ பூஜை யில் கரடி புகுந்த மாதிரி நான் வந்து விட்டேன். என்னுல் உங்களுக்கு இடைஞ்சல் வேண்டாம். நான் அப்புறமா வருகிறேன் தம்பி !'' என்று கூறிவிட்டு ஆறுமுகம் திரும்பிச் செல்ல முயன்ருர்.

'' உங்களால் எங்களுக்கு எந்த வித இடையூறும் இல்லிங்க அண்ணே ! நீங்க உட்காருங்க .''

''காப்பி சாப்பிடுங்க மாமா!'' என்று கூறி ஒரு தம்ளரில் காப்பியைக் கொண்டு வந்து கொடுத்தாள் அமுதா.

முத்துவும் ஆறுமுகமும் காப்பியை ஆற்றிக் குடித்தனர். அதன் பின் முத்து, நகைப் பெட்டியைத் திறந்து ''இந்த நகை நல்லா இருக்கா பாருங்க அண்ணே! சென்னையிலிருந்து வாங்கி வந்தேன். இதைப் பார்த்து விட்டுத்தான் அமுதா என்னைப் புகழ்ந்து கொண்டிருந்தாள் !'' என்ருர்.

நகையை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு '' உன் மனைவியே நீ வாங்கி வந்த நகையைப் புகழ்ந்து விட்ட பிறகு நான் என்ன தம்பி குறை சொல்ல முடியும்? நகை ரொம்ப அழகா இருக்கப்பா ! என்ன விலைக்கு வாங்கி வந்தே?'' என்று கேட்டார் ஆறுமுகம்.

'தொள்ளாயிரம் ரூபாய் ஆகுது அண்ணே!'

''ஏன் ? தம்பி ! இவ்வளவு ரூபாயை நகைக்காகச் செலவழிக்கலாமா? ஒரு நிலத்தை வாங்கியிருக்கக் கூடாதா? இப்படிக் கேட்கின்றேனே என்று நீ கோவிச்சுக்காதே அமுதா ! எல்லாம் உங்க நன்மைக்காகத் தான் சொல்றேன் !''

''நான் இவ்வளவு விலைக்கு வாங்கச் சொல்லவில்லை மாமா! அவருடைய விருப்பத்திற்கு வாங்கி வந்துள்ளார். நீங்களே நல்ல புத்தி சொல்லுங்க மாமா!' என்று கோபமாகக் கூறிவிட்டு அமுதா உள்ளே சென்று கொண்டிருந்தாள்.

'' வாயாடி ! இப்ப கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் 'தங்கச் சங்கிலியா வாங்கி வந்திருக்கின்றீர்கள்?' என்று கோபமாகக் கேட்டாய். இப்பொழுது பழியை என்மேல் போட்டுவிட்டுப் போகிருயா? போ! போ! அப்புறம் பேசிக் கொள்கின்றேன் !'' என்ருன் முத்து.

ஆறுமுகம், நகையை முத்துவிடம் திருப்பிக் கொடுத்தார். முத்து அதை அட்டைப் பெட்டியில் வைத்து மூடிவிட்டு ''என்ன காரியமா வந்திங்க? சொல்லுங்க அண்ணே !'' என்ருன்.

''குறுவையிலே உனக்கு ஏக்கருக்கு 60 மூட்டை வீதம் நெல் கண்டு முதல் கிடைச்சுதாமே ! ஏக்கருக்கு ரூபாய் 400 செலவு செய்தும் எனக்கு 20 மூட்டைக்கு மேல் கிடைக்கவில்லை தம்பி ! நான் பிள்ளை குட்டிக்காரனுச்சே! எனக்கும் அந்த ரகசியத்தைச் சொல்லியிருக்கக் கூடாதோ ? நானும் உன்னுல் பிழைச்சிருப்பேனே !''

'' இதில் ஒன்றும் ரகசியமே இல்லே அண்ணே! நான் உயர் விளைச்சல் தரும் அதிசய நெல் ஐ. ஆர். 8 சாகுபடி செய்தேன். நீங்க ஏதேனும் நாட்டு ரக நெல்லைச் சாகுபடி செய்திருப்பீர்கள். அதுதான் வேறுபாடு. நான் தான், நீங்க நாற்று விடுவதற்கு முன்பே 'ஐ.ஆர். 8' விதை தருகிறேன். அதைச் சாகுபடி செய்யுங்கள், என்று உங்களிடம் சொன்னேனே உங்களுக்கு ஞாபகம் இல்லையா?''

''ஆமாம், தம்பி ! நீ வற்புறுத்திச் சொல்லியது இப்பத்தான் ஞாபகத்துக்கு வருது. உன் பேச்சைக் கேட்டிருந்தால் எனக்கும் அதிக மகசூல் கிடைச்சிருக்கும் ! ஐ.ஆர். 8 நெல் சாகுபடி செய்யச் செலவு என்ன ஆச்சு? வரவு என்ன ஆச்சு? கொஞ்சம் விவரமாகச் சொல்லு தம்பி !''

''அண்ணே! நான் நாலு ஏக்கரில் ஐ.ஆர். 8 சாகுபடி செய்தேன். எனக்கு ஏக்கருக்குச் சராசரியாக 75 கிலோ கொண்ட மூட்டை 60 ஆகியுள்ளது. அதாவது ஏக்கருக்கு 4,500 கிலோ நெல் விளைந்துள்ளது. மூட்டை ரூபாய் 36 வீதம் அவைகளை விற்று விட்டேன். அதிலிருந்து ஏக்கருக்கு ரூபாய் 2,160 கிடைத்தது. ஆனுல் நான் ஏக்கருக்குச் செலவு செய்தது ரூபாய் 600. எனவே ஏக்கருக்கு நிகர லாபமாக ரூபாய் 1,560 எனக்குக்




குழந்தை பிறப்பதைத் தடுக்க அறுவைச் சிகிச்சை, லூப் முறை, வில்லைகள் உட்கொள்ளுதல் போன்றவை தற்போது கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றன.

இதில் வில்லைகளைப் பெண்கள் மாதத்தில் 25 நாட்கள் தவருது உட்கொள்ள வேண்டியுள்ளது. சில சமயங்களில் உட்கொள்ள மறந்து விட்டால் கருத்தரிக்க ஏதுவாகலாம். அதோடு, நாள்தோறும் உட்கொள்வது சிலருக்குச் சிரமமாயிருக்கலாம்.

எனவே, தற்போது கருத்தடை ஊசி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஊசிக்கு டோபா (Dopa) என்று பெயரிட்டுள்ளனர். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெருமளவு பயன் படுத்திப் பரிசீலனை செய்யப்பட்டுள்ள இந்த ஊசியைப் பெண்களுக்குப் போட்டால் மூன்று மாத காலம் கர்ப்பம்ஆக மாட்டார்கள். எனவே மூன்று மாதத்திற்கு ஒரு முறை இந்த ஊசியைப் போட்டால் போதுமானது. இந்த ஊசி முறை இந்திய விஞ்ஞான ஆய்வுக் கழகத்தினுல் (Indian council of scientific research) பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

விரைவில் சென்னையில் இந்த ஊசித் திட்டம் செயல்படுத்தப்படும்.

கிடைத்துள்ளது. 4 ஏக்கரிலிருந்தும் கிடைத்த மொத்த லாபம் ரூ. 6,240. அந்தப் பணத்தைக் கொண்டு போய்தான் ஒரு டிராக்டர் வாங்க அட்வான்சு, ரூபாய் 3,000 கட்டிவிட்டு, ஒரு மோட்டார் வாங்கிக்கொண்டு, இந்த நகையையும் வாங்கி வந்தேன்!''

''நீ செய்தது மிகவும் சரி தம்பி! இதை முன்பே சொல்லியிருந்தால், இவ்வளவு செலவு செய்து ஏன் நகை வாங்கி வந்தாய் என்று அமுதாவின் முன்னால் கேட்டிருக்க மாட்டேன். அமுதா வேறு உன்மேல் கோபமாகப் போய் உள்ளது!''

''அமுதாவுக்கு விவரத்தை இன்னும் சொல்லவில்லை. விவரம் தெரிந்தால் அவளும் நான் செய்தது சரி என்றே சொல்லுவாள்.''

''ஐ. ஆர். 8 நெல்லுக்கு மார்க்கட் இல்லை என்று சொல்றுங்களே என்று நம்பி, நான் ஏமாந்துவிட்டேன்.''

''அதெல்லாம் மிகவும் தப்பான கருத்து அண்ணே! நீங்க சன்னமான நாட்டு ரக நெல்லைப் பயிர் செய்துள்ளீர்கள். உங்களுக்குக் கிடைத்தது 20 மூட்டை. ஒரு மூட்டை ரூபாய் 50 வீதம் விற்றாலும், உங்களுக்குக் கிடைக்கப் போவது ரூபா 1,000. அதில் செலவு ரூபாய் 400 போக லாபம் 600 ரூபாய் தான் கிடைக்கும். ஐ.ஆர். 8 நெல் விலை எவ்வளவு தான் குறைந்தாலும், மூட்டை ரூபாய் 30 விலைக்குக் கீழே போகாது. அதேபோல் மிகவும் குறைந்த மகசூலாகக் கொண்டாலும், ஐ.ஆர். 8 நெல் ஏக்கருக்கு 45 மூட்டைக்குக் குறையாமல் கொடுக்கும். எனவே, குறைந்த விலையும், குறைந்த மகசூலும் கிடைப்பதாகக் கொண்டாலும் கூட, ஐ.ஆர். 8 நெல் மூலம் ஒரு ஏக்கரிலிருந்து ரூபாய் 1,350 கிடைக்கும். அதில் செலவு ரூபாய் 600 போக நிகர லாபம் ரூபாய் 750 கிடைக்கும். மார்க்கட்டில் அதிக விலை போகும் சன்னமான நாட்டு ரக நெல்லைப் பயிரிடுவதைவிட, ஐ.ஆர். 8 நெல் பயிரிடுவதால் ரூபாய் 150 அதிக லாபம் கிடைக்கும். இந்த விவரமெல்லாம் எனக்கு முன்பே தெரிந்திருந்தால் இன்னும் நான்கு ஏக்கரில் ஐ.ஆர். 8 நெல் சாகுபடி செய்திருப்பேன்!''

### குதிரை இழுத்த இரயில்



1825-ம் ஆண்டுக்கு முன் உலகத்தில் எந்தப் பாகத்திலும் புகை வண்டி கிடையாது. குதிரையும், குதிரை வண்டிகளும் தான் அதற்குமுன் அமைந்திருந்த விரைவான போக்குவரத்து வசதிகள்.

1825-ல், முதல் புகை வண்டி இங்கிலாந்தில் ஓடியது.

அமெரிக்காவில், 1830-ல் இரயில் வண்டி வந்த போதிலும், ஆரம்ப காலத்தில் அது குதிரைகளினால் தான் இழுக்கப்பட்டது.

இந்தியாவில், பம்பாயில் 16—4—1853-ல் புகை வண்டிப் போக்குவரத்துத் துவக்கப்பட்டது. ஆனால் வெள்ளோட்டம் 1852 நவம்பர் மாதத்திலேயே நடைபெற்றது.

தமிழகத்தைப் பொறுத்த வரை, புகை வண்டி 1-4-1856-ல் தோன்றியது. வியாசர்பாடிக்கும்வாலாஜா ரோட்டிற்கும் (ஆர்க்காடு) இடையே உள்ள 63 மைல் தூரத்தில் இந்த முதல் புகை வண்டி ஓடியது.

''சரி, போனது போகட்டும் தம்பி! அடுத்த தடவை ஐ.ஆர். 8 நெல் பயிரிடும்போது நீ, எனக்கும் தெரிவித்து விட வேண்டும்.''

''நம்ம சம்பா நெல்லெல்லாம் டிசம்பர் மாதத்தில் அறுவடைக்கு வந்துவிடும். அடுத்து வருகிற நவரைப் பட்டத்தில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடத் திட்டமிட்டுள்ளேன். சென்ற ஆண்டு கூட நவரைப் பட்டத்தில் தமிழ் நாட்டில் ஏறத்தாழ ஏழு லட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்யப்பட்டதாகப் பத்திரிகையில் படித்தேன். எனவே இந்த ஆண்டு நவரைப் பட்டத்தில் நாமும் ஐ. ஆர். 8 நெல் பயிர் செய்வோம் அண்ணே!''

''சரி தம்பி இனிமேல் நீ சொல்றபடிதான் சாகுபடி செய்யப் போறேன். இப்போ சம்பா நடவு செய்து முடித்துவிட்டேன். குறுவை அறுத்த வயலில் தாளடி பயிரிட நினைக்கின்றேன். ஒரு ஏக்கரில் இறைவைப் பருத்தி சாகுபடி செய்துள்ளேன். ஐப்பசி மாதத்தில் என்னென்ன செய்யணும் என்பதையும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு தம்பி!''

''சம்பா நடவெல்லாம் முடித்து விட்டதாகச் சொன்னீர்கள். நடவு செய்த 15-வது நாள், களை எடுக்க வேண்டும். களை எடுத்த பின்பு அன்றே பூச்சிகளையும், நோய்களையும் தடுக்க மருந்து தெளிக்க வேண்டும். கோ-25 நெல்லிற்கு மட்டும் நடவு செய்த 21-ஆம் நாளில் மருந்து தெளிக்க வேண்டும். என்ன மருந்து தெளிக்க வேண்டும், எவ்வளவு தெளிக்க வேண்டும் என்பதை நமது ஊர்ப் பணியாளரையோ அல்லது வேளாண்மை வளர்ச்சி அலுவலரையோ கேட்டு அறிந்து செய்வதே நல்லது.''

''ஏன்? தம்பி! சம்பாவுக்கு நான் இதுவரை மேல் உரம் போட்டதே இல்லை. இந்தத் தடவை போடலாம் என்று நினைக்கின்றேன். நீ என்ன சொல்றே?''

''மேலுரமிடுவதால் மிகுந்திடும் மகசூல் என்பது அனுபவப் பூர்வமாகவும், ஆராய்ச்சி மூலமாகவும் கண்ட உண்மைங்க. நடவு செய்த 21-வது நாளில் முதல் முறையாக மேலுரமிட வேண்டும். ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய நெல்லிற்கு ஏக்கருக்கு 15 கிலோ தழைச் சத்தளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 32½ கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். ஐ. ஆர். 5 நெல்லிற்கு ஏக்கருக்கு

9 கிலோ தழைச் சத்தளிக்க 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். கோ-25, கோ-32 நெல்லிற்கு ஏக்கருக்கு 5½ கிலோ தழைச் சத்து அளிக்க 27½ கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியாவை மேலுரமாகப் போட வேண்டும். நாட்டு ரகங்களுக்கெல்லாம் ஏக்கருக்கு 4 கிலோ தழைச் சத்து அளிக்க 20 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 8½ கிலோ யூரியாவை மேலுரமாகப் போடணும் அண்ணே! ''

'' இரண்டாவது முறை எப்பொழுது களை எடுப்பது, மருந்து தெளிப்பது, இரசாயன உரமிடுவது என்பதையும் கூறிவிட்டால் நல்லது! ''

''நடவு செய்த 30-ம் நாளில் 2-வது முறை, களை எடுக்க வேண்டும். ஆனால் ஐ. ஆர். 8, ஜெயா நெல்லிற்கு நடவு செய்த 40-வது நாளிலும், ஐ. ஆர். 5 நெல்லிற்கு நடவு செய்த 35-வது நாளிலும் களை எடுக்கவேண்டும். ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய நெல்லிற்கு நடவு செய்த 30-வது நாளிலும், கோ-25 நெல்லிற்கு 42-வது நாளிலும், மற்ற ரகங்களுக்கு முதல் மருந்து தெளித்த 20-வது நாளிலும் 2-ம் முறையாக மருந்து தெளிக்க வேண்டும். இரண்டாவது முறையாக முன் கூறிய அளவு இரசாயன உரங்களைப் பயிர், சூல்கட்டும் பருவத்தில், அதாவது தொண்டைக் கதிர் சமயத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு மேலுரமாக இட வேண்டும்.''

''தாளடிக்கு என்ன ரகம் போடப் போறே தம்பி ?''

''நான் ஐ. ஆர். 5 என்ற நெல்லை நாற்று விட்டுள்ளேன். நீங்க என்ன ரகத்தை நாற்று விட்டீர்கள் ?''

'' இன்னும் நான் நாற்றுவிடவில்லை தம்பி ! அதுபற்றி உன் யோசனையைக் கேட்கத்தான் தம்பி உன்னைத் தேடி வந்தேன்.''

'' அப்ப நீங்க நாற்று விட வேண்டாம் அண்ணே ! என்னிடம் 2 ஏக்கருக்குத் தேவையான நாற்று மீதமாகி விடும். யாருக்காவது கொடுக்கலாம் என்றே கிடைத்த நெல் முழுவதையும் நாற்றுவிட்டு வைத்துள்ளேன். உங்களுக்குத் தேவையான நாற்றுகளை நானே கொடுத்துவிடுகிறேன். நான் அவ்வப்போது சொல்ற மாதிரி நீங்களும் செய்யணும்; சரிதானே அண்ணே !''

'' சரி தம்பி! நீ போய்ச் சாப்பிடு. அப்புறம் பேசிக் கொள்வோம்'' என்று எழுந்தார் ஆறுமுகம்.

'' இருங்க அண்ணே ! ஐ. ஆர். 5 நெல், பருத்தி பற்றிய விவரமெல்லாம் ' தமிழரசு ' என்ற இப்புத்தகத்தில் வெளியாகி உள்ளது. படித்துப் பாருங்க '' என்று கூறித் தன்னிடமிருந்த ' தமிழரசு ' இதழை ஆறுமுகத்திடம் கொடுத்தான் முத்து.

'' மிகவும் நன்றி தம்பி !'' என்று கூறிவிட்டு ஆறுமுகம் விடை பெற்றுச் சென்றார்.

உள்ளே சென்ற முத்து, மனைவியிடம் தங்கச் சங்கிலியைக் கொடுத்து ''அமுதா ! இந்த நகை ஏன் வாங்கி வந்தேன் தெரியுமா? ஐ. ஆர். 8 நெல் பற்றிப் பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தியைப் படித்துவிட்டு அந்த நெல்லைப் பயிரிடுமாறு என்னைத் தூண்டியதே நீ தானே! அதனால் தான் ஐ. ஆர். 8 நெல் விற்ற பணத்திலிருந்து டிராக்டருக்கு முன்பணம் கட்டிவிட்டு, மோட்டார் வாங்கிக் கொண்டு, மீதி இருந்த பணத்தில் இந்த நகையை வாங்கி வந்தேன். நம் திருமணத்திற்குப் பிறகு நான் வாங்கி வந்துள்ள முதல் நகையே இதுதானே!''

'' பெண்ணுக்குப் பொன் நகை பெரியதல்ல அத்தான் ! புன்னகையே பெரியது !'' என்று கூறிக்கொண்டே அமுதா உள்ளே சென்று எதையோ எடுத்துத் தன் இடையில் மறைத்து வைத்துக் கொண்டு முத்துவின் அருகே வந்தாள்.

'' அத்தான் ! உங்கள் கண்களை நன்றாக மூடிக் கொள்ளுங்கள் ! உங்களுக்கு நான் ஒரு பரிசு தரப் போகிறேன்.''

அன்புக் கட்டளைக்குக் கட்டுப்பட்டுக் கண்களை மூடிக்கொண்டே இருந்தான், முத்து.

'' அத்தான் ! இப்பொழுது கண்களைத் திறந்து பாருங்கள் !''

அழகிய கைக் கடிகாரத்தைக் கண்டதும் முத்துவின் முகம் மலர்ந்ததுடன், வியப்பினால் விரிந்தது.

'' ஏது அமுதா இந்த வாட்ச்?''

'' நான் நம்ம வீட்டுப் புழக்கடையில் காய்கறித் தோட்டம் போட்டுக் காய்களை விற்று வந்தேனல்லவா ? அதிலிருந்து கிடைத்த பணத்தை அவ்வப்போது தபாலாபீசில் சிறு சேமிப்பாகக் கட்டி வந்தேன். தபால் ஆபீசில் 300 ரூபாய் சேர்ந்திருந்தது. நேற்றைய முன்தினம் ஊரிலிருந்து என் தம்பி வந்தான். அவனிடம் உங்களுக்கு ஒரு வாட்ச் வாங்க வேண்டுமென்று சொன்னேன். அவனுக்குத் தெரிந்த ஒரு கடையில் புது வாட்ச் வந்திருப்பதாகவும், ரூபாய் 250 கொடுத்தால் வாங்கிவிடலாமென்றும் சொன்னான். தபாலாபீசிலிருந்து 250 ரூபாயை வாங்கி வந்து தம்பியிடம் கொடுத்தனுப்பினேன். அவன் நேற்று இந்த வாட்சை வாங்கிவந்து கொடுத்துவிட்டுப் போனான்.''

'' அமுதா! நீ மிகவும் கெட்டிக்காரி ! பரிசுக்குப் பரிசு அளித்துவிட்டாய் !'' என்று கூறிவிட்டு முத்து சாப்பிட ஆரம்பித்தான்.

தங்கச்சங்கிலியின் பளபளப்பை அடிக்கடி பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் முத்து. அவனுக்கு அன்பு மனைவி அமுதா படைத்த சோறும் அமுதமாகவே இருந்தது ! கைக்கடிகாரத்துடன் உள்ள கணவன் அவளுக்கோ அழகுத் தெய்வமாகவே காட்சியளித்தான் !

### குடும்பநல கிராமம்

ஏர்க்காடு வட்டாரத்தில் பட்டிப் பாடிதரப்பு என்ற கிராமம் உள்ளது. இங்குள்ள மணமான ஆடவர்களில் 95 சதவீதம் குடும்ப நலத் திட்டத்திற்காக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். இதன் மூலம். இது மற்ற கிராமங்களுக்கு முன்மாதிரியாகவுள்ளது.

ஏர்க்காடு அண்ணா பூங்கா அருகே வந்து நின்றது அந்த ஊர்தி. பிரபல திரைப்பட இயக்குநர் இளந்திரையன், உதவி இயக்குநர் உத்தம ராயன், ஒளிப்பதிவாளர் உலகளந்தான் ஆகியோர் ஊர்தியிலிருந்து வெளிப்போந்தனர்.

இயக்குநர் அந்த இடத்தில் நின்றபடியே ஒரு கண்ணோட்டம் விட்டார். ''ஆகா என்ன அருமையான இடம்!'' என்று அவர் வாய் முணுமுணுத்தது.

மேட்டுப்பகுதியில் பூங்கா. எதிரே படகுத்துறை உள்ள பெரிய ஏரி. ஏரியில் சுற்றுலா வந்த புதுமணமக்கள் இருவர் படகுச் சவாரியை அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஏரியின் பின்னணியிலே குன்று போல் சிறிது உயர்ந்த இடத்தில் மரங்களிடையே வட்டார வளர்ச்சி அதிகாரியின் அலுவலகக் கட்டடம். பூங்காவின் அருகே தேநீர் விடுதி. பக்கத்திலேயே காஃபி வாரியத்தின் காஃபித் தோட்டம். இவைதான் அவரை அவ்வாறு பாராட்ட வைத்தன.

''கதாநாயகி காஃபித் தோட்டத்தில் கூலி வேலை செய்பவள் தானே! எனவே, சுற்றுலா வந்த வாலிபர் அவளை இங்கு சந்திப்பதாக அக்காட்சி அமைக்கலாம். பூங்காவிலும், ஏரியிலும் சிருங்காரக் காட்சிகளைப் படமாக்கலாம்'' என்றார், இயக்குநர். உதவி இயக்குநர் உடனே அதைக் குறித்துக் கொண்டார். ஒளிப்பதிவாளர், காட்சி அமைப்பைப் பார்க்கும் சிறிய கண்ணாடியினால் காட்சிகளை எப்படி அமைக்க வேண்டும் என்பதனை அப்போதே சரி பார்த்துத் தன்னுடைய மனக் கண்ணில் பதிய வைத்துக் கொண்டார்.

''ஊம்; அடுத்த இடத்திற்குச் செல்லலாம்!'' என்றார் இயக்குநர். வண்டி நகர்ந்தது. இயக்குநர் திரைப்படத் தொழிலில் அனுபவம் மிக்கவர் என்றாலும், ஏர்க்காட்டுக்குப் புதியவர். இப்போது தான் முதல் முதலாக அவர் ஏர்க்காட்டிற்கு, அதுவும் படப்பிடிப்பிற்காக வந்திருந்தார். சென்னையில் கடும் வெய்யிலில் பணியாற்றிப்பழக்கப் பட்ட அவருக்கு இங்குள்ள ''ஜில்லென்ற'' இதமான




பருவநிலை உற்சாகத்தைத் தந்தது. சாலையோரங்களில் பற்பல வண்ணத்தில் பூத்துக் குலுங்கும் காட்டுப் பூக்களும், இல்லங்கள்—பூங்காக்களில் எழில் சிந்தும் டாலியா—சாமந்திப்பூ வகைகளும், வண்ணப் படத்திற்கு வளமான காட்சிகளாகத் தென்பட்டன. வண்ணப்படத்திற்கு மட்டுமல்ல. ஏர்க்காட்டிற்குச் சுற்றுலா வருவோர் அனைவரையும் கவர்ந்து இழுக்கும் காந்த சக்தி அந்த அழகு மலர்களுக்கு நிச்சயம் உண்டு!

ஊர்தி, மலையின் ஒரு பகுதிக்கு வந்தது. பூஞ்செடிகளுக்கு மத்தியிலுள்ள சிறிய பாதை வழியாக அவர்களை அழைத்துச் சென்றார் உதவி இயக்குநர். அங்கு ஒரு பாறை மீது வட்ட வடிவமாக இரும்புக் கம்பிகளினால் கட்டப்பட்டிருந்தது; அங்கிருந்து மலைச் சரிவுகளிலுள்ள எழில் மிகு இயற்கைக் காட்சிகளைக் காணுவதற்காக! ''ஐயா, இதுதான் 'பெண் இருக்கை'; அதாவது 'லேடீஸ் சீட்' என்றார் உதவி இயக்குநர்.

''என்ன லேடீஸ் சீட்டா..?''

''ஆமாம். முன்பு இங்கு இந்தக் கம்பி வைத்துக் கட்டப் படவில்லை. வெறும் மொட்டைப் பாறைதான் இருந்தது. அந்தப் பாறை மீது அமர்ந்து, இயற்கைக் காட்சிகளை அனுபவிக்கலாம். பாறை இருக்கைதான் லேடீஸ் சீட் என்று பெயர் பெற்றது. இங்கிருந்து பார்த்தால் பாம்பு போல் வளைந்து செல்லும் மலைச்சாலையும், மாக்னசைட் கனிப்பாறையும் தூரத்தில் மேட்டூர் அணையின் நீர்த்தேக்கமும் தெரியும். இன்னொரு சுவையான விஷயம். கலைஞரின் 'மந்திரி குமாரி' திரைப்படத்தில் ''வாராய் நீ வாராய்!'' என்று அழைத்துச் செல்லும் வில்லனை, மந்திரி குமாரி மலையிலிருந்து தள்ளும் காட்சி வருகிறதே, அது இந்த இடத்தில் தான் படமாக்கப் பட்டது.''.

''அப்படியா? எங்கே பார்ப்போம்....'' இயக்குநர் அந்த இடத்திலிருந்து மூவாயிரம் அடிக்குக் கீழுள்ள தரையில், தொலை தூரத்தில் தெரியும் 'மாக்னசைட்', சுரங்கப் பகுதிகளையும் மற்றவற்றையும் தொலைநோக்காடியில் பார்த்தார்.

''வில்லன் அந்தச் சுரங்கத்திற்கு வெடி வைக்கப்போகிறான். அதை இங்கிருந்து ஒரு ''ஸூம்'' போட்டுப் படமாக்கினால்........ பிரமாதமாய் இருக்கும் இல்லையா?''

''சந்தேகமே இல்லீங்க! எனக்கும் அதே யோசனைதான் தோன்றிற்று.'' உதவி இயக்குநரும் ஒளிப்பதிவாளரும் சேர்ந்து ஒப்புதல் அளிக்கிறார்கள்.

''அடுத்தது எங்கே?'' இயக்குநர் கேட்கவும், ''பகோடா முனை'' என்றார் ஒளிப்பதிவாளர்.

'' நேரமானதும் பக்கோடா நினைவு வந்துவிட்டதா?'' இயக்குநர் குறுக்கே மடக்க, '' இல்லீங்க ! பகோடா கோபுரம் மாதிரி கல்லால் கோபுரம் செய்து வைத்திருப்பாங்க. அதனால்தான் அந்தப் பெயர்....'' என்று விளக்கினார் உதவி இயக்குநர்.

'' அதனால் என்ன ? அங்கேயே சாப்பிட்டால் போச்சு; உல்லாசப் பயணம் வந்தது போலிருக்கும் '' என்றார் இயக்குநர். பாம்புபோல் வளைந்து வளைந்து செல்லும் அம்மலைப் பாதையில் உற்சாகமாகவே பாய்ந்து ஓடியது உந்து வண்டி.

இயற்கை அழகும், இசை பாடிடும் புள்ளினங்களின் குரலும் கவின்மிகு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. தன்னை மறந்த இயக்குநர் ஒரு திரைப்படப் பாடலை ராகத்தோடு பாடினார். சென்னையில் படப்பிடிப்பின்போது சதா கடுகடு வென்றிருக்கும் இயக்குநரின் மனத்தையும் கனிய வைத்த ஏர்க்காட்டின் சூழ்நிலையை வாயார வாழ்த்திக் கொண்டு வந்தனர் ஒளிப்பதிவாளரும் உதவி இயக்குநரும்.

பகோடா முனையிலுள்ள பழைய கோவிலும் மொட்டை மரங்களுங்கூடக் கலை அம்சத்தோடு காணப்பட்டன.

அங்கிருந்து நோக்கினால், வெகு துரத்தில் ஆங்காங்கே பரந்து கிடக்கும் மலைப் பகுதிகளும், குக்கிராமங்களும், நகர்ப்புறமும் ரம்மியமாகக் காட்சியளித்தன. அனைவரும் உணவருந்த அமர்ந்தனர்.

உணவோடு போராடியதாலோ என்னவோ உதவி இயக்குநருக்குச் சண்டைக் காட்சியின் நினைவு வந்துவிட்டது.

'' என்னங்க ! இந்த இடத்திலே வில்லன், கதாநாயகனோடு மோதும் காட்சிகளைப் படமாக்கினாலென்ன ? இதோ இந்த மொட்டை மரத்தில் தொங்கிக் கொண்டு சண்டையிடுவதைப் பள்ளத்தாக்கின் பின்னணியுடன் படமாக்கினால் அற்புதமாக அமையுமே '' என்றார் அவர்.

'' அருமையான ஐடியா அய்யா ! அப்படியே செய்வோம் '' என்று ஆமோதித்தார், இயக்குநர்.

இந்நேரத்தில் அங்கு தலையைச் சொறிந்தபடி நின்றான் ஒரு இளைஞன். அவன் கையில் தேன் தட்டுகளும், ஒரு கூடையில் வால் பேரிக்காய்களும், கொய்யாப்பழங்களும் இருந்தன. ஏர்க்காடு பகுதிகளில் நடக்கும் வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்புகளில் துணை நடிகனாகத் தலைகாட்டுபவன், அந்த இளைஞன். திரைப்பட இயக்குநர் வந்திருக்கிறார் என்பதை அறிந்து அங்கு வந்திருந்தான். '' இங்கே இந்தப் பழங்கள் நிறைய விளையுதுங்க. இது நம்ம தோட்டத்திலே உள்ளது. ஐயாவுக்காக எடுத்து வந்தேன்!'' மீண்டும் தலையைச் சொறிந்தான். உதவி இயக்குநர் புரிந்து கொண்டார். '' சண்டைக் காட்சிகள் படமாக்கும்போது வா பார்த்துக்கலாம் '' என்றார்.

'' இங்கு வேறு என்னென்ன முக்கிய பகுதிகள் உள்ளன ? உண்ட மயக்கத்தோடு கொஞ்சம் கேட்கலாம். ''—இயக்குநர் கேட்க, உதவி இயக்குநர் விவரித்தார்.

'' கிளியூர் அருவி இருக்குதுங்க. 75 அடி உயரத்திலிருந்து விழுகிறது. துள்ளிவரும் அருவியின் அழகே அழகு ! பின்னணியில் குகைபோன்ற பாறைகளும் உள்ளன. சூரிய வெய்யிலில் அக்காட்சி படத்திற்கு மிகப் பொருத்தமாக இருக்கும்.

' ஆர்த்தர் இருக்கை ' என்று மற்றொரு முனை உள்ளது. அங்கிருந்து பார்த்தால் பாங்கான பள்ளத்தாக்கும், தோட்டத்தின் நடுவேயிருக்கும் சிங்கார மாளிகைகளும், பெரிய ஏரியும் நன்கு தெரியும்.

இங்கு ' மாண்ட் போர்ட் ' என்ற ஆண்கள் பள்ளியும், மகளிருக்கான ' புனித இதய'ப் பள்ளியும் உள்ளன. இரண்டும் உலகப்புகழ் பெற்றவை. பல்வேறு நாட்டிலிருந்து மாணவர்கள் இப்பள்ளிகளில் வந்து பயிலுகின்றனர்.

அப்புறம் லூப்.... ''

'' அது என்னய்யா குடும்ப நலத் திட்டத்தைக் குறுக்கே கொண்டு வர்றீங்க.''

'' அந்த லூப் இல்லீங்க. இது லூப் ரோடு. இந்தச் சாலை பெரிய ஏரி அருகே ஆரம்பமாகிறது. அப்படியே காரிலோ, சைக்கிளிலோ ஒய்யாரமாகச் சென்றால், நாகலூர், காவேரி சிகரம் வழியாகச் சென்று மீண்டும் பெரிய ஏரிக்கே வந்து சேருகிறது ; வளைவான சாலை!''.

''ஆமாம், இதற்கு ஏர்க்காடுன்னு எப்படிப் பெயர் வந்தது ?''

'' இந்த மலைப்பகுதிக்குச் சேர்வராயன் மலை என்பது பொதுப் பெயர். மலை உச்சிமீது (50000 அடி உயரத்தில்) சேர்வராயன் கோயிலிருப்பதால் இதற்குஅந்தப் பெயர் வந்தது. இந்த மலைப் பகுதிகளில் மொத்தம் 67 கிராமங்கள் உள்ளன. அதில் இந்தப்பகுதி, ஏரியை ஒட்டி உள்ளதால் ஏர்க்காடு( ஏரி+காடு) என்று ஆயிற்று.1820-ம் ஆண்டில்



இருந்து 1829 வரை எம். டி. காக்பர்ன் என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். அவர்தான் இந்தப்பகுதி முன்னேறக் காரணமாக இருந்தவர். அவர் இங்கு ' கிரெஞ்ச் ' என்ற பெயரில் ஓர் இல்லம் அமைத்தார். அந்த மாளிகையும் அதைச் சுற்றியுள்ள காஃபித் தோட்டமும் இன்றுங்கூட அதே ' கிரெஞ்ச் ' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. காக்பர்ன், வீடு மட்டும் கட்டவில்லை. அரேபியாவிலிருந்து காஃபியைக் கொண்டு வந்து பரப்பவும், தென் ஆப்பிரிக்காவிலிருந்து ஆப்பிள் போன்ற பழ வகைகளைக் கொண்டு வந்து பயிரிடச் செய்யவும் காரணமாக இருந்தார்.

''அவரைத் தொடர்ந்து பல மேலை நாட்டினர் இங்கு வந்து ஒய்வு இல்லங்கள் அமைத்தனர். ஏர்க்காடும் ஒரு சிறந்த சுற்றுலாப் பகுதியாக மாறியது. இப்போது சுற்றுலா வருபவர்களுக்காகத் தமிழக அரசு பல வசதிகளைச் செய்து வருகிறது. நல்ல சாலைகள், பூங்காக்கள், முதலியன அமைத்து வருகின்றனர். அண்ணா பூங்காகூடச் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டது தான். நம்மைப்போல் படப்பிடிப்பாளர்கள் மட்டுமல்லாது ஏராளமான சுற்றுப்பயணிகளும், கோடை காலத்தில் ஓய்வு எடுக்க வருகிறவர்களும் இங்கு வருகிறார்கள். சேலம் இங்கிருந்து 19 மைல் தான். அடிக்கடி பேருந்து வசதியும் உள்ளது. பிப்ரவரியிலிருந்து ஜூன் முடிய நல்ல பருவநிலை இருக்கும்.''

'' இங்கு தங்குவதற்கு வசதிகள் உள்ளனவா ?'' இயக்குநரின் கேள்வி.

'' இருக்கின்றன ; அரசினரின் சுற்றுலா மாளிகையிருக்கிறது. அதில் வசதியான அறைகள் உள்ளன. இரயில்வேயினர் தங்கள் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லம் அமைக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். அதுதவிர ' அனைத்துலக இளைஞர் விடுதி ' ஒன்றையும் இங்கு ஏற்படுத்த முயற்சி நடக்கிறது. அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு, பார்வையிழந்தோர் பள்ளி ஒன்று அமைக்கவும் திட்டமிட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க அதன் அமைப்பாளர் திரு தேஷ்முக் சமீபத்தில் இங்கு வந்து இடங்களைப் பார்வையிட்டுச் சென்றார்.''

'' ஏதோ மருந்துத் தைலம் தயாரிக்கிறதாகக்கூடக் கேள்விப்பட்டேனே .''

''ஆமாம். இந்திய விஞ்ஞானத் தொழில் ஆய்வுக் குழுவினர் ' ஜெரேனியம் ' என்ற செடியிலிருந்து தைலம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தாவரயியல் ஆய்வும், இங்கு உள்ளது. அதில் நூற்றுக்கணக்கான பூச்செடிகளையும் மருந்துச் செடிகளையும் பயிரிட்டு ஆய்வு செய்கின்றனர்.''

'' மழை வரும் போலிருக்கு; நாம் புறப்படலாம்!'' இயக்குநர் ஆணையைத் தொடர்ந்து ஊர்தி புறப்படுகிறது.

'' அய்யா, வண்டியை எங்கே போகச் சொல்ல ?'' உதவி இயக்குநர் கேட்க, '' கிள்ளியூர் அருவிக்குப் போகட்டும்!'' என்று இயக்குநர் பதிலுரைத்தார்.

'' நாளைக்குச் சென்னை போக ஏற்பாடு செய்யலாமா ?'' உதவி இயக்குநர் மீண்டும் கேட்டார்.

'' இவ்வளவையும் சொல்லிவிட்டு உடனே சென்னைக்குப் போகணும்னு சொல்றீங்களே ! நாலு நாளைக்கு ஏர்க்காட்டிலே தங்கியிருந்து ஏர்க்காட்டின் இயற்கையழகையும் இனிய சூழ்நிலையையும் அனுபவித்துவிட்டுப் போகலாமே ? உங்களுக்குச் சம்மதந்தானே .'' என்று இருவரையும் வினவினார், இயக்குநர்.

'' கரும்பு தின்னக் கூலியா ? ஜாலியா தங்கிப் போகலாம் !'' என்று சொல்லியவாறு பலமாகத் தலையசைத்தார்கள் ஒளிப்பதிவாளரும், உதவி இயக்குநரும்.

சிலுசிலுவென்ற ஏர்க்காட்டின் இதமான காற்று அவர்களின் உள்ளத்திற்கு மேலும் மகிழ்வூட்டியது. அவர்களை மட்டுமல்ல, சுற்றுலா வரும் எவரையும் கவரக்கூடியது இந்த எழில்மிகு ஏர்க்காடு.

### ஓய்வு ஊதிய உயர்வு.

ஒய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் குறைந்த பட்ச ஊதியம் ரூ. 20 ஆக இது வரை இருந்து வந்தது. அதை ரூ. 30 ஆகத் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. 1970 மார்ச் திங்கள் முதல் இது அமுலாகிறது.

## வெண்பாப் போட்டி- 3

ஈற்றடி : **காணக் குளிர்ந்ததே கண் !**

முடிவு நாள் : **16—11—1970**

பரிசு: ஓராண்டு **'தமிழரசு'** அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—

**ஆசிரியர் (வெண்பாப் போட்டி),**
**" தமிழரசு " அலுவலகம்,**
**அரசினர் அச்சகம்,**
**சென்னை-1.**

குறிப்பு: நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப **வேண்டும்;** முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா !

# வண்ணப் படங்களில்

## 39 ஆம் பக்கத்தில்

1. தமிழகம் வந்த 'அனைத் துலக நிதி' யின் நிர்வாக இயக்குநர் திரு சுவிட்சருக்குத் தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் அளித்த விருந்தில், தமிழக முதல்வரும் தொழிலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டனர்.

2. சென்னைக்கு வந்த ரிசர்வ் வங்கித் தலைவர் திரு எஸ். ஜெகநாதன் அவர்களுக்குத் தமிழக முதலமைச்சர், இராஜாஜி மண்டபத்தில் 18—10—70 அன்று அளித்த தேநீர் விருந்தில், முதல்வர், ரிசர்வ் வங்கித் தலைவர், கூட்டுறவு அமைச்சர் ஆகியோர்.

3. தமிழகத்தில் வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவி பற்றி சென்னைக் கோட்டை அமைச்சரவை அறையில் 19—10—70 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழக முதல்வர், ஏனைய அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருடன் ரிசர்வு வங்கித் தலைவர் கலந்துரையாடினார்.

4&7 மதுரையில் சுற்றுலா வளர்ச்சிக் குழுவின் 14-வது கூட்டத்தைத் தமிழக ஆளுநர் அவர்கள் 18—10—70 அன்று துவக்கி வைத்து உரையாற்றினார். சுற்றுலா அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து, மத்திய சுற்றுலா அமைச்சர் டாக்டர் கரன் சிங் ஆகியோரும் உள்ளனர்.

5. ஆஸ்திரேலியா சென்று தமிழகம் திரும்பிய நமது சட்டமன்ற மேலவைத்தலைவர் திரு சி. பி. சிற்றரசு அவர்களை, முதல்வரும் ஏனைய அமைச்சர்களும் சென்னை விமான நிலையத்தில் வரவேற்கின்றனர்.

6. குடிசைப்பகுதி மாற்று வாரியத் துவக்க விழா. வீட்டு வசதி வாரியத் தலைவர் வரவேற்புரை ஆற்றுகிறார். அந்த விழாவில் கலந்து கொண்ட தமிழக முதல்வர், உணவு-உள்ளாட்சி அமைச்சர், வாரியத் தலைவர், திரு. அரங்கண்ணல் திரு. முரசொலி மாறன் ஆகியோர்.

## 42 ஆம் பக்கத்தில்

1. செங்கல்பட்டு மாவட்டம், அகரம் கிராமத்தில் நீர்ப் பாசனக் கூட்டுறவுக் கழகத்தை, முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் தமிழக ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் துவக்கி வைக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் திரு சி. வி. எம். அண்ணாமலை அருகில் இருக்கிறார்.

2. சென்னையில், தமிழகப் புலவர் குழுவுக்கு நடந்த வரவேற்பின்போது, முதல்வர் நிவாரண நிதியிலிருந்து புலவர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு ரூபாய் வழங்கினார் தமிழக முதல்வர். மகா வித்வான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் முதல்வரிடமிருந்து நூறு ரூபாய் அடங்கிய கைப் பையைப் பெறுகிறார்.

3. உலகின் தரமான பொருட்கள் நாள், சென்னை இராஜாஜி மண்டபத்தில் 14-10-1970 அன்று தமிழக ஆளுநரால் துவக்கி வைக்கப்பட்டது. அதனையொட்டி நடைபெற்ற கண்காட்சியை ஆளுநர் பார்வையிடுகிறார்.

4. சென்னை, அடையாறு, கோட்டூர் பகுதியில், சமூக சேவை மையத்தின் கிளையினைப் பொதுப்பணி அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் திறந்துவைத்து, ஏழைகளுக்கு வழங்குவதற்கான உடைகளைப் பார்வையிடுகிறார். அருகில் மறைத் திரு பி.டி. அருளப்பா இருக்கிறார்.

5. அனைத்திந்திய ஓமியோபதி மருத்துவ மாநாடு சென்னை இராஜாஜி மண்டபத்தில் அக்டோபர் 9-ஆம் நாள் நடைபெற்றது. தமிழக முதல்வர் அம் மாநாட்டினைத் துவக்கி வைக்க, வேளாண்மை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் விஞ்ஞானக் கருத்தரங்கினைத் துவக்கி வைத்தார்கள். முதல்வரும், வேளாண்மை அமைச்சரும் ஓமியோபதிக் கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர்.

6. 7. செங்கல்பட்டு மாவட்டம், திம்மாவரத்தில் நவீன அரிசி ஆலையைக் கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் திறந்து வைக்கிறார். தமிழ் நாடு கூட்டுறவுக் கொள்முதல் கழகத் தலைவர் திரு. மன்னை. நாராயணசாமி எம்.எல்.சி. அருகில் இருக்கிறார்.

## மையப் பக்கங்களில் ஏர்க்காடு.

1. மலைப்பகுதி மாளிகை.

2. அண்ணா பூங்காவில் ஓர் ஆரணங்கின் சிலை.

3. & 9. ஏரியிலே ஒய்யாரமான படகுச் சவாரி.

4. வண்ண மலர்த் தோட்டம்.

5. ஏரியில் நீந்தும் சுற்றுலாப் பயணிகள்.

6. ஏரிக்காடு என்ற பெயர் பெற்றது இதனால்தான்!

7. காஃபித் தோட்டம்.

8. 'பெண் இருக்கை' யிலிருந்து இயற்கை அழகைக் கண்டு மகிழும் சுற்றுலாக் குழுவினர்.

10. அண்ணா பூங்கா.

11. 'பெண் இருக்கை' யின் பழைய தோற்றம்.



1



2



3



4



5



6



7


1


2


6


7


3


8


9


4


5


10


11




"ஏழையின் புன்னகையிலே இறைவனைக் காண்கிறேன்'' எனச் சொன்னார் அறிஞர் பெருந்தகை.

இன்று, அந்த ஏழையின் முகத்திலே புன்னகை பூத்திடச் செய்ய வேண்டும் என்ற இலக்குடன், ''குடிசைப் பகுதி மாற்று வாரியம்'' ஏற்படுத்தியுள்ளது தமிழ் நாடு அரசு.

தமிழகத்திற்குப் பலசிறப்புகள்—பெருமை தரும் தலங்கள்—உண்டு. அவற்றில் சிங்காரச் சென்னை மாநகரமும் ஒன்று. ஆனால் அந்தச் சிங்காரச் சென்னையின்திருவுருவின் அழகைக் குறைப்பதாக உள்ளன நகரமெங்கும் பரந்து கிடக்கும் பல குடிசைப் பகுதிகள். நகரத்தினை அழகுபடுத்தும் பணியிலுள்ள தொழிலாளர்



# ஏழையின் புன்னகை

கள், பல மாடிக் கட்டடங்களை உருவாக்கும் புனிதக் கரங்கள், செல்வ வளத்தினைப் பெருக்கிடும் தொழிற் கூடங்களில் அயராது உழைத்து வரும் சகோதரர்கள், சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் சாக்கடைப் பகுதிகளுக்கு மத்தியில் குடிசைஅமைத்து வாழும் நிலை, விஞ்ஞான யுகத்தில் வேதனைப்பட வேண்டிய அவல நிலையேயாகும்!

இந்த நிலையை மாற்றுவதற்குக் குடிசைகளுக்குப் பதில், வசதியான குடியிருப்பு இல்லங்களை அமைத்துக் கொடுக்கும் பணியில் அரசு ஈடுபட்டது. ஆனால், இது காறும் அந்தப் பணியைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு பணிகளிடையே மேற்கொண்டிருந்தது.

எந்தப் பணியையும் விரைவில் முடித்திட வேண்டும் என்ற வேக மிக்க இந்த அரசு, இத் திட்டத்தையும் ஒரு குறுகிய கால வரையறைக்குள் முடித்துவிட வேண்டும் என்று விரும்பியது.

அதன் பலனாகக் குடிசைகளை மாற்றி அமைக்கும் பணிகளுக்கு மாத்திரம் தனியாக ஒரு வாரியத்தை—குடிசை மாற்று வாரியத்தைத் தமிழ் நாடு அரசு துவக்கியுள்ளது. கடந்த 19—10—70 அன்று மாலையில் வீட்டு வசதி வாரியத்தில், இந்தக் குடிசை மாற்று வாரியத்தினைத் துவக்கி வைத்தார்கள், தமிழ் நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

இந்தியாவிலேயே குடிசைகள் மாற்றுத்திட்டத்திற்காக முதலில் தனி வாரியம் நியமித்துள்ளது என்ற பெருமை இதன் மூலம் தமிழகத்திற்குக் கிடைக்கிறது.

15 உறுப்பினர்களைக் கொண்ட இந்த வாரியத்தின் தலைவராகத் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர் திரு.இராம.அரங்கண்ணல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வாரியம், தனது முதல் கட்டப் பணியாகச் சென்னை சைதாப்பேட்டைப் பகுதியில், உள்ள வெங்கடாபுரத்தில் புதிய குடியிருப்புகளை நிர்மாணிக்கிறது. 30 லட்ச ரூபாயில் 402 இல்லங்கள் கட்ட இதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்று மாடி, நான்கு மாடிக் கட்டடங்களாக இவை கட்டப்

படும். ஒவ்வொரு கட்டடத்திலும் 18, 28, 42 என்று பல இல்லங்கள் இருக்கும்.

ஓர் இல்லத்தில் ஒரு பொது அறை, ஒரு சமையல் அறை, குளியல் அறை, கக்கூஸ், வராந்தா ஆகியவை இருக்கும்.

40 ரூபாய் வாடகை மதிப்புள்ள இந்த இல்லம், குடிசையில் வாழும் ஏழை மக்களுக்கு 10 ரூபாய் வாடகைக்கு விடப்படும். மீதி வாடகை நட்டத்தை அரசே ஏற்றுக்கொள்ளும்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு பகுதிகளிலுள்ள குடிசைகளை இந்த வாரியம் மாற்றி அமைக்கும். 7 ஆண்டு காலத்திற்குள் இத்திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்திக் குடிசைவாழ் மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த இவ்வாரியம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. பரிசுச் சீட்டிலிருந்து கிடைக்கும் இலாபத்தில் 50 லட்ச ரூபாய் உட்பட, ஒன்றரைக் கோடி ரூபாய், முதல் ஆண்டில் இதற்காகச் செலவிடப்படும்.

வெங்கடாபுரம் திட்டத்தில் இதுவரை 72 குடியிருப்பு இல்லங்கள் கட்டிமுடிக்கப்பட்டுக் குடிசைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது 252 குடியிருப்புகள் கட்டப்படவிருக்கின்றன.

கால்கோள் விழாவினைத் துவக்க வந்த முதல் அமைச்சரை, சைதை நடராஜன் நாதசுரக் குழுவினரின் இனிய நாதம் வரவேற்க, வாணங்கள் முழங்க, மத்தாப்புக்கள், ஒளிவீசித், தோரணங்கள் கட்டப்பட்ட சாலையின் இருமருங்கும் பூப்பொறிகளை அள்ளி வீசப், பூக்கள் தூவி, மாலை அணிவித்து வரவேற்றனர் அப்பகுதிக் குடிசை வாழ் மக்கள். அவர்களது வருங்கால வாழ்வினை மலரச் செய்யும், செம்மைப் படுத்தும் முதல்வர் அல்லவா அவர்! எனவே தான் வரவேற்பிலே அத்துணை உற்சாகம்; பூரிப்பு !

கட்டடங்கள் எழும்ப விருக்கும் பகுதிகளைச் சுற்றிப் பார்த்த பின், விழா மேடைக்கு வந்தார் முதல்வர்.

விழா, ''நீராரும் கடலுடுத்த'' என்னும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. உணவு—உள்ளாட்சி அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

விழாவில் முதல்வர் பேசும் போது, ''இது புனிதமான நாள் என்றால், அது இரு கருத்துக்கு இடமின்றி எல்லாரும் ஏற்றுக் கொள்ளத் தக்க நற் கருத்தாகும். சென்னை நகரின் முகத்தை மாற்றும் திட்டம் என்று பாராளுமன்ற உறுப்பினர் மாறன் குறிப்பிட்டார். இப்போது சென்னை நகரம் அழகான முகம் படைத்த தென்றாலும் ஆயிரக் கணக்கான குறு மருக்கள் நிறைந்ததுபோல், குடிசைகளில் ஏழை மக்கள் துன்பங்களிடையே வாழ்வது, பொலிவிழந்து கிடக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஏழையின் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டுமென்ற நீண்ட நெடு நாளைய ஆசைக் கனவு, இன்று நிறைவேறுகிறது. வீட்டு வசதி வாரியம் என்ற பெயரால் நல்ல பல காரியங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் எனது நண்பர், முன்னாள் அமைச்சர் மாண்புமிகு வெங்கட்ட ராமன் அவர்களை, அண்ணாவின் வழி வந்தவன் என்ற காரணத்தால் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாகவும் முனைப்பாகவும் இந்தக் காரியம் செயல் படவேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் சென்னையிலும் அடுத்தபடியாக நமது தமிழகத்தின் மற்ற பகுதிகளுக்கும் இந்தப்பணிகளைத் தொடர்ந்திட அந்த வாரியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையில் நான் யாரை மறந்தாலும், குடிசை வாழ் பகுதி மக்களை மறக்க முடியாது. 1967-ல் நான் இந்த வெங்கடாபுரம் பகுதியிலுள்ள கோட்டூரிலே கொலைசெய்யப்பட விருந்த போது என்னைக் காப்பாற்றிய இடம் ஏழையின் குடிசைதான். என்னைக் காப்பாற்றிய குடிசையை நான் உயிருள்ள மட்டும் மறக்க மாட்டேன். இது எனது நன்றிக் கடன் என்று சொன்னாலும் மிகையாகாது.

குடிசை மாற்றுத் திட்டத்திற்காக 1970-71-க்கு சுமார் ஒரு கோடி ரூபாய் அளவில் ஒதுக்கியிருந்தோம். பரிசுச் சீட்டிலிருந்து 50 லட்சம் சேர்த்து ஒன்றரைக் கோடி ரூபாய் செலவிட முடிவு செய்துள்ளோம். அடுத்த ஆண்டும் சேர்த்து 5 கோடி ரூபாய் குடிசை மாற்றுவதற்காகப் பயன்படுத்தப் படும். 7 ஆண்டுக் காலத்திற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கத் திட்டமிட்டிருக்கிறோம்

இது ஏழு ஆண்டுத் திட்டம், ஏழை ஆண்டுத் திட்டம் என்றாலும் பொருத்தமாகவே யிருக்கும்.





ஆனால் இந்த நிதி கூடப் போதாது ! இதற்கான முதலமைச்சர் நிதிக்கு குதிரைப் பந்தய சங்கத்தார் 2 லட்சம் ரூபாய் தர இசைந்துள்ளனர்.

இது போல் சென்னை மாநகரிலுள்ள வாரி வழங்கும் தன்மை படைத்தவர்கள் இந்த வாரியத்திற்கு வாரி வழங்கிட வேண்டும்.

இது தவிர எல்.ஐ.சி. யிடமிருந்தும் கடன் உதவி பெறலாமென நினைக்கிறோம். அதோடு மத்திய அரசிடமிருந்தும் பெருந்தொகையை எதிர்பார்க்கிறோம்.

நான் பந்தயக் குதிரை போல் ஓடக் கூடியவன் என்று அடிக்கடி குறிப்பிடுவேன். எனவே இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பந்தய மைதானத்தில் ஜீப் காரில் தொடர்வது போன்றாவது தொடர வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏழைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் வண்ணம் ஏழாண்டுக்காலத்திற்குள் இத்திட்டத்தை முடிப்போம் என்று இந்த நேரத்தில் சூளுரை எடுத்துக் கொள்வோம்'' என்று கூறினார்.

### துப்பும் மீன்கள்.

புழுவைப் பிடிப்பதற்காக நீரை அதன்மீது உமிழும் ஒருவகை மீன்கள் உள்ளன. தண்ணீருக்கு மேலுள்ள செடியிலுள்ள புழுவின் மீது குறிபார்த்துத் தண்ணீரை உமிழ்கின்ற இவற்றின் குறி ஒருபோதும் தவறுவதேயில்லை. புழுவின்மீது நீர் தாக்கியதும் புழு தண்ணீரில் விழுகிறது. உடனே மீன் பாய்ந்து சென்று அந்தப் புழுவை விழுங்கிவிடுகிறது.

உணவு உள்ளாட்சித் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—''இதய சுத்தியோடு துவங்கப்பட்ட திட்டமிது. இந் நாட்டின் அடித் தளத்திலுள்ள மக்களுக்கு மறுமலர்ச்சி—புது வாழ்வு ஏற்படுத்தும் நோக்கத்தோடு செய்யப்பட்டது. சென்னையை அழகு படுத்துவது மட்டும் இதன் நோக்கமல்ல. சுகாதாரமற்ற நிலையினைப்போக்கி முன்னேற்ற மடையச் செய்ய வேண்டும் என்பதும் இதன் நோக்கமாகும். எனவே சென்னை நகர மக்கள் அனைவருமே இதனால் பயனடையப் போகின்றனர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் எங்களோடு கலந்து ஆலோசனை செய்து, சட்ட வல்லுநர்களின் ஆலோசனை கேட்டு, அதிகாரிகளுடன் பேசி, இந்த வாரியம் ஏற்படுத்துவதைத் தவிர இதற்கு வேறு வழியில்லை எனக் கண்ட பின்பே இதனைத் துவக்க முடிவு செய்தார்கள். சுறுசுறுப்பான திரு. அரங்கண்ணல் அவர்களை இதற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது பாராட்டத்தக்கது.

குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. வாரிய உறுப்பினர் திரு முரசொலி மாறன் எம்.பி. ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. டி. வி. வாசுதேவன் வரவேற்புரை நிகழ்த்த, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. ஸ்ரீதர் நன்றி கூறினார்.


உறுதியான

உயர்ந்த

செங்கற்களுக்கு

காவேரி

பிரிக் ஒர்க்ஸ்

தொழிலகம்:
கொள்ளிடச்சாலை,
(அன்பில்)
தொலைபேசி எண் :
இலால்குடி-62.

அலுவலகம்:
77. மதுரை சாலை,
திருச்சிராப்பள்ளி-8.
தொலைபேசி எண் :
6926.

# சிறு சேமிப்பு
# ஓர்
# ஒளிவிளக்கு





குல விளக்காம் உங்கள் மகன் கல்வி பெற....

திரு விளக்காய் உங்கள் மகள் மணவாழ்வு பெற....



பெருவிளக்காய் உங்கள் வருங்காலம் சீர் பெறவே....



ஒளிவிளக்காய் வழிகாட்டும் சிறுசேமிப்பு....

**இன்றே உங்கள் அருகிலுள்ள**
**அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்**

இயக்குநர்
சிறு சேமிப்பு நிறுவனம்
சென்னை-9

# சாதனைச் சரிதம் பாரீர்

பாசன வசதி பெருகுது! பசுமைப் புரட்சி ஓங்குது!

# தமிழ்நாடு அரசு

## பொதுப் பணித் துறையின்

## புதிய நீர்ப் பாசனத் திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| மதுரை மாவட்டம் | பாலாறு-புரந்தலாறுத் திட்டம்... | ரூ. | 256 இலட்சம் |
| | பரப்பலாறுத் திட்டம் ............ | ரூ. | 37 இலட்சம் |
| | வைகைக் கால்வாயைச் சீரமைத்தல் | ரூ. | 400 இலட்சம் |
| தருமபுரி மாவட்டம் | சின்னாறுத் திட்டம் ............ | ரூ. | 108 இலட்சம் |
| வடஆர்க்காடு மாவட்டம் | தண்டரை அணைக்கட்டுத் திட்டம்..... | ரூ. | 47 இலட்சம் |
| திருச்சி மாவட்டம் | கொல்லிமலை அணைக்கட்டுத் திட்டம்... | ரூ. | 255 இலட்சம் |
| | பொன்னியாறுத் திட்டம் ............ | ரூ. | 46 இலட்சம் |
| இராமநாதபுரம் மாவட்டம் | வைப்பாறுத் திட்டம் ............ | ரூ. | 23 இலட்சம் |
| தென்னார்க்காடு மாவட்டம் | நந்தன் கால்வாய் பொதுப் பணித் திட்டம்...... | ரூ | 32 இலட்சம் |
| தஞ்சாவூர் மாவட்டம் | தஞ்சைக் கால்வாய்களைச் சீரமைத்தல் ............ | ரூ | 4,980 இலட்சம் |

**தமிழ்நாடு அரசு உடனடியாக நிறைவேற்றும் இத்திட்டங்களால் 20,000 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்; பயனடையும்!**

*தமிழகம் எங்கும் பசுமைப் புரட்சி!*
*உணவு உற்பத்தியில் ஒப்பற்ற வளர்ச்சி!!*

# பயன் மிகு பருத்தி



'வெள்ளைத் தங்கம்' என்று சிறப்பாகக் கூறப்படும் பருத்தியின் தேவை நாளுக்கு நாள் பெருகுகிறது. நமது பஞ்சாலைகளின் தேவையை ஈடுசெய்யும் அளவுக்கு இந்தியாவில் பருத்தி உற்பத்தியாகவில்லை. இதனால் ஆண்டு தோறும் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தியை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். இந்நிலை மாறவேண்டுமானால் பருத்தி மகசூலைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசிய மாகும்.

பருத்தி உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெறுவதற்குப் பொறுக்கு விதைகளை உபயோகிக்க வேண்டியதும், இரசாயன உரமிடுவதும், பயிர்ப்பாதுகாப்புச் செய்வதும் மிகவும் இன்றியமையாதவைகளாகும். எனவே பருத்தி மகசூலைப் பெருக்குவதற்குக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பாக மானாவாரிப் பருத்தியின் மகசூலைப் பெருக்குவதற்கு 'பாரதி' (எம்.சி.யு. 6), 'கே 7' என்ற பருத்தி ரகங்களை விதைக்குமாறு 'தமிழரசு' இதழில் பரிந்துரைக்கப் பட்டிருந்தது. நாட்டு ரகப் பருத்தியைப் பயிரிட்டு ஏக்கருக்கு ரூ. 50 முதல் ரூ. 75 வரை நிகர லாபம் பெறுபவர்களே தமிழ்நாட்டில் ஏராளம். கே. 7 பருத்தியைப் பயிரிட்டால் ஏக்கருக்கு ரூபாய் 250-க்கு மேலும், பாரதி பருத்தியைப் பயிரிட்டால் ஏக்கருக்கு ரூபாய் 500-க்கு மேலும் நிகர லாபம் பெற முடியும். எனவே மானாவாரியாக மேற்படி ரகங்களைப் பயிரிடுமாறு மீண்டும் வற்புறுத்த விரும்புகின்றோம்.

'பாரதி' பருத்திக்கு வரிசைக்கு வரிசை 45 சென்டிமீட்டர் ($1\frac{1}{2}$ அடி) இடைவெளியும், வரிசையில் செடிக்குச் செடி 25 சென்டி மீட்டர் (10 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். கே 7 பருத்திக்கு வரிசைக்கு வரிசை 45 செ.மீ. ($1\frac{1}{2}$ அடி) இடை வெளியும், வரிசையில் செடிக்குச் செடி, 15 செ.மீ. (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

விதைகளை 'கொர்ரு' கலப்பை மூலமோ அல்லது விதைக்கும் கருவி மூலமோ அக்டோபர் மாதத்தில் விதைத்து விடுதலே சிறந்தது.

கோ. 1 உளுந்தை மானாவாரிப் பருத்தியுடன் கலப்புப் பயிராக விதைப்பதனால் ஏக்கருக்கு 150 கிலோ உளுந்து கிடைக்கும். இதன் மூலம் சுமார் ரூ. 225 அதிக வருமானம் கிடைக்கும். ஆனால் இவ்வாறு கலப்புப் பயிர் செய்ய அதிகமாக ஆகக்கூடிய செலவு ரூ. 20 மட்டுமே. ஆகவே கோ. 1 உளுந்தை மானாவாரிப் பருத்தியுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.

கலப்புப் பயிர் செய்ய மூன்று வரிசைப் பருத்தி, ஒரு வரிசை கோ. 1 உளுந்து வீதம் விதைக்க வேண்டும். இவ்வாறு கலப்புப் பயிர் செய்வதனால் பருத்திக்கு எந்த விதக் கெடுதலும் ஏற்படாது.

கம்பு அறுவடைக்குப் பிறகு பருத்தி சாகுபடி செய்தால் பருத்தியின் மகசூல் பெருகும். சோளம் அறுவடைக்குப் பின்பு பருத்தி சாகுபடி செய்தால், பருத்தியின் மகசூல் 19 சத அளவுக்குக் குறைந்து விடும். சோளத்துடன் அவுரியை (இண்டிகோ) வளர்ப்பதனாலோ அல்லது பருத்திக்கு ஏக்கருக்கு 60 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரமிடுவதனாலோ சோளத்தினால் ஏற்படும் தீங்கினை அகற்றிவிடலாம். எனவே குறிப்பிட்ட வயலில் பருத்தி சாகுபடி செய்வதற்கு முன்பு, அந்த வயலில் முந்தின பயிர் என்ன என்பதை அறிந்து அதற்கேற்பச் சாகுபடி செய்வதே நல்லது.

இறவையாகப் பயிரிடப்படும் எம்.சி.யு. 5 பருத்திக்கு விதை ஊன்றிய உடனே நீர் பாய்ச்ச வேண்டும். விதை ஊன்றிய 3-வது அல்லது 4-வது நாளில் இரண்டாம் முறை நீர் பாய்ச்ச வேண்டும். பொதுவாக அடுத்த 25 நாட்களுக்கு நீர்ப்பாசனத் தேவை இல்லை. அதன் பிறகு 10 அல்லது 12 நாட்களுக்கு ஒரு முறை வீதம் விதை ஊன்றிய 130 நாட்கள் வரை நீர் பாய்ச்சவும்.

பருத்தி விதை விதைத்தபத்து நாட்களில் முளைக்காத இடங்களில் புதிதாக விதை ஊன்றவும். விதைத்த 21-ஆவது நாளில் இறைவைப் பருத்தியானால் குழிக்கு 2 செடிகளை மட்டும் விட்டு விட்டு மற்றவைகளை நீக்கவும். மானாவாரிப் பருத்திக்குக் குழிக்கு ஒரு செடியே போதுமானது.

விதைத்த 20-ஆவது நாளில் களைக் கொட்டினால் களை எடுக்கவும். விதைத்த 40-ஆவது நாளில் செடிகளுக்கு மண் அணைக்கவும். மண் அணைப்பதற்கு 'ஜூனியர் ஹோ' என்னும் இடையுழவுக் கருவியை முதலில் செலுத்தி அதன் பின்னால் பார்கலப்பையைப் பயன்படுத்தவும். மானாவாரிப் பருத்திக்கு 'தந்துலு' என்ற கருவியை முதலிலும், அதன் பின்னால் நாட்டுக் கலப்பையையும் ஓட்டி மண் அணைக்கலாம். விதைத்த 60-ஆவது நாளில் மற்றுமொரு களை எடுக்கவும்.

இறைவைப் பருத்திக்கு 12 கிலோ தழைச் சத்தினை அளிக்க

60 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 27 கிலோ யூரியா உரத்தை மேலுரமாக இடவேண்டும். விதைத்த 40 முதல் 60 நாளில் மேலுரமிடலாம்.

இறைவைப் பருத்திக்கு விதைத்த 2-வது வாரத்தில் 0·025 சதம் 'மெட்டாசிஸ் டாக்ஸ்' (100 மில்லி லிட்டரை 100 லிட்டர் தண்ணீரில் கலக்கவும்) தெளித்து, தத்துப்பூச்சி, பேன், திரிப்ஸ் ஆகிய பூச்சிகளைக் கட்டுப் படுத்தவேண்டும்.

விதைத்த 4-வது வாரத்தில் கார்பரில் 0·1 சதவீத மருந்தை (1 கிலோ) யும், 500 கிராம் நனையும் கந்தகத்தையும் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அதன்பின் 15 நாட்களுக்கொருமுறை வீதம் 8 தடவை மருந்து தெளிக்கவும்.

மானாவாரிப் பருத்திக்கு விதைத்த ஒரு மாதம் கழித்து 2 பங்கு கார்பரில் தூள், 1 பங்கு கந்தகத் தூள் வீதம் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ மருந்தைத் தூவவும். 15 நாட்களுக்கொருமுறை இதே அளவு மருந்தை 5 தடவை தூவவும்.

காலை நேரம் பனிப்பதத்தில் பருத்தியை எடுக்க வேண்டும். அப்படிச் செய்வதால், சருகுகள் ஒட்டாமல் சுத்தமான பருத்தியை எடுக்க முடியும். பின்பு ஒரு சில மணி நேரம் பருத்தியை நிழலில் உலர்த்தவும். நிறமிழந்து கெட்டுப்போன பருத்தியையும், பூச்சிகளினால் சேதமடைந்த பருத்தியையும் தனியே பிரித்து எடுத்துவிடவும். நல்ல பருத்திக்கு நல்ல விலை எப்போதும் கிடைக்குமாதலின், தரமான பருத்திகளையே சேகரியுங்கள்.

பருத்தி மகசூல் எடுத்து முடிந்த பிறகு, சரியான நேரத்தில் பருத்திச் செடிகளை நிலத்திலிருந்து பிடுங்கி எடுத்து விட வேண்டும். குளிர்காலக் கம்போடியா அல்லது கருங்கண்ணிப்பருத்திச் செடிகளை ஜூலை மாதக் கடைசிக்குள்ளாக நிலத்திலிருந்து பிடுங்கி எடுத்துவிட வேண்டும். இவ்வாறு செய்வதனால் பூச்சிகளும், நோய்களும் அடுத்துச் சாகுபடியாகும் பயிருக்குப் பரவுவதைத் தடுக்க முடியும்.

மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு பருத்தி மகசூலை உயர்த்தினால் உங்கள் வருமானமும் பெருகும். அதே நேரத்தில் பஞ்சாலைகளும் அந்நிய நாட்டுப் பருத்திக்காகக் காத்திருக்காமல், நமது நாட்டுப் பருத்தியைக் கொண்டே செயல்படமுடியும். வெளிநாடுகளிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்வதனால் ஏற்படும் அந்நியச் செலாவணியைக் கட்டுப் படுத்தவும் முடியும். விரைவில் நம் நாட்டுப் பருத்திகளை வெளிநாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கவும் இயலும். எனவே அந்நன்னாளை எதிர் நோக்கிச் செயல்படுவோமாக!

# கடலை உடைக்கும் இயந்திரம்



தமிழ்நாடு சிறு தொழில் வாரியத்தின், பொறியியல்- தச்சுத் தொழிற்கூடம் ஒன்று சேலத்தில் இயங்கி வருகிறது. தோற்றத்தில் சிறிதாகக் காணப்படும் இத் தொழிற்கூடத்தின் சாதனை குறிப்பிடத்தக்கது.

பள்ளிகளுக்கு வேண்டிய பெஞ்சுகள், மேஜைகள், நாற்காலிகள், கரும்பலகைக்கான நிலைகள் ஆகியவற்றோடு, நவ நாகரீக சாப்பாட்டு மேஜைகள், (போமிகா ஒட்டப்பட்டது,) நாற்காலிகள், கட்டில்கள் முதலியவற்றையும் இங்கு தயாரிக்கின்றனர். இப் பொருட்கள் மட்டும் மாதந்தோறும் சுமார் 60,000 ரூபாய்க்குத் தயாரிக்கப் படுகின்றன.

கட்டடங்களின் கூரைக்கான இரும்புச் சாரத்தினையும் இவர்கள் தயாரிக்கின்றனர். தமிழகம் முழுவதும் இதுவரை சுமார் ஆயிரம் பள்ளிகளுக்கு இவர்கள் இந்தச் சாரம் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். சேலத்திலும், சுற்று வட்டாரத்திலும் பல திரைப்பட அரங்குகளுக்கு இரும்புச் சாரம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

நிலக்கடலை உடைக்கும் இயந்திரமும் இவர்களது தயாரிப்பில் ஒன்றாகும். சாணை பிடிப்பவர், காலால் சக்கரத்தை இயக்குவது போல் இயக்கினால், இந்த இயந்திரத்தில் போடப்படும் நிலைக் கடலைகளைத் தோல் நீக்கிப் பருப்புகளைத் தனியாகக் கொட்டும். 375 ரூபாய் விலையுள்ளது இந்த இயந்திரம்.






*PSG

# அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

***விவரங்களுக்கு எழுதுங்கள் :***

## பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்

**கோயமுத்தூர் 4 தென்னிந்தியா**

*PSG *the hallmark of high standard*

***விற்பனைக் கிளைகள் :***

*311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.*
*பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.*
*13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.*

VSK PSG 213

# கூடித் தொழில் செய்தால் கோடி நன்மை பெறலாம்



''தமிழகத்தில் நம்முடைய விவசாயிகள் முற்போக்கானவர்கள். நாம் கணக்கைப் போட்டு முடிப்பதற்குள் அவர்கள் கணக்கைப் போட்டு நமக்கே சொல்லுகிறார்கள். எத்தகைய நவீன விவசாய முறையானாலும் அவற்றை ஏற்றுச் செயல்படுத்திட அவர்கள் தயங்குவதில்லை. மாறிய நிலைக்கேற்ப வசதிகளைக் கொடுத்திடுக என்று நம்மை அவர்கள் கேட்டபடி இருக்கிறார்கள்.''

7—2—1968-ல் சென்னையில் தீவிர சாகுபடித் திட்ட அதிகாரிகளின் மாநிலக்கருத்தரங்கில், மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றும்பொழுது உதிர்த்த மணி முத்துக்கள் தான் இவை. கனிந்த அனுபவத்தின் அடிப்படையில் எழுந்த கருத்துக் கருவூலம் அது!

அண்ணாவின் கூற்றுக்குச்செயல் வடிவம் கொடுத்து, உழவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் தொண்டுள்ளத்துடன் செய்து தரும் புனிதப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, சீரிய முறையில் பணியாற்றி வருகிறது, கோவைமாவட்டம் துடியலூர் கூட்டுறவு வேளாண்மை நிறுவனம்.

அந்நிறுவனத்தில் விவசாயிக்கு வேண்டிய அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கின்றன. அங்கே உறுப்பினராகச் சேரும் விவசாயிக்கு, வேளாண்மைக்காக என்னென்ன தேவையோ, அத்தனையும், சிரமமின்றி, அலைச்சல் இன்றிக் காலாகாலத்தில் ஒழுங்காகக் கிடைக்க வழி செய்கிறது இந்நிறுவனம்.

விவசாயிக்குக் கடன் கொடுக்கிறார்கள். அதையும், கால விரயமின்றி, விவசாயிக்குத் தேவையான நேரத்தில் கொடுக்கிறார்கள். கடன் மட்டும் கொடுத்து விட்டால் போதுமா வேளாண்மை செய்ய? மற்ற உதவிகளும் வேண்டுமல்லவா? அவற்றையும் கொடுக்கிறார்கள். நல்ல தரமான விதைகள் கொடுக்கிறார்கள். உயர்ந்த உரம் கொடுக்கிறார்கள். பூச்சி மருந்துகள் கொடுக்கிறார்கள். தெளிப்பான்கள், டிராக்டர்கள் வாடகை முறையில் கொடுக்கிறார்கள். அவை பழுதுபட்டால் அவற்றைப் பழுது பார்த்துத் தருகிறார்கள். விளைச்சல் அறுவடையானபிறகு, விவசாயியிடம் விளைச்சல் பொருள்களை வாங்கிப் பத்திரமாக நல்ல முறையில் சேமித்து வைத்துப் பின்பு நல்ல விலைக்கு விற்றுப்பணமும் கொடுக்கிறார்கள். இதைச் சுருக்கமாகச் சொன்னால், வேளாண்மை செய்யும் விவசாயி மனித உழைப்பை மட்டும் தான் கொடுக்கிறார். மற்ற அனைத்தையும் இந்நிறுவனம் அளிக்கிறது. மற்ற மற்ற வேளாண்மைக் கூட்டுறவு நிறுவனங்களில் பணம் மட்டும் தான் கடனாகக் கொடுப்பார்கள். ஆனால் இந்த நிறுவனத்திலோ விவசாயிக்கு வேண்டிய அனைத்தையும் கொடுக்கிறார்கள்.

கோவையிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ள துடியலூரில் 1955 ஏப்ரலில் துடியலூர் கூட்டுறவு கிராம வங்கியாகத் தோற்றுவிக்கப்பட்ட இந்நிறுவனம், பின்பு துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவா நிறுவனமாகப் பெயர் மாற்றப்பட்டது. இந்த நிறுவனத்தின் செயல் எல்லை 13 வருவாய்க்கிராமங்களையும் 56 சிற்றூர்களையும் தன்னகத்தே கொண்டது. இந்தஎல்லைக்குள் உள்ள மக்கள் தொகை 66,518. பெரிய நாயக்கன் பாளையம், சர்க்கார் சாமக்குளம், பேரூர் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்கள் இந்நிறுவனத்தின் செயல் எல்லையினுள் அடங்கியுள்ளன.

இந்நிறுவனத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்க ஒருவிதச் சிரமமும் கிடையாது. விவசாயிகள் அவர்களாகவே உறுப்பினராய் வந்து சேர்கிறார்கள். யாரும் போய் ''உறுப்பினராகச் சேருங்கள்'' என்று கேட்க வேண்டிய தேவையில்லை. இன்று இந்நிறுவனத்தில் 5,068 உறுப்பினர்கள் உள்ளனர். அந்த உறுப்பினர்கள் செலுத்தியுள்ள பங்கு மூலதனம் மட்டும் ரூ. 4,68,114.

விவசாயிக்கு வேண்டிய முதல் தேவை கடன் வசதி. அக்கடன் தொகையும் காலா காலத்தில், தேவையான நேரத்தில் சிரமமின்றிக் கிடைத்தால், அதைவிடப் பெரிய உதவி விவசாயிக்கு வேறு கிடையாது. இந்தக் கடன் வழங்கும் பணியை இந்நிறுவனம் ஒழுங்காக, அழகாகச் செய்கிறது. 1969-70-ல் மட்டும் சுமார் பதினேழே கால் இலட்சம் ரூபாய் கடனாக விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

நீண்ட காலக் கடனாக உயர்ந்த பட்சமாக ரூபாய் பத்தாயிரம் அளிக்கிறது. குறைந்த காலக் கடனாக ஓர் உறுப்பினர் அதிகப்பட்சமாக இரண்டாயிரம் ரூபாய் பெறலாம்.

உறுப்பினர் மனுச் செய்த ஒரு மாதத்திற்குள் நீண்ட காலக் கடனும், பதினைந்து நாட்களுக்குள் குறுகிய காலக் கடனும் அநேகமாகக் கொடுத்து வருகிறார்கள். மற்ற நிறுவனங்கள் எல்லாம் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு மனுச் செய்து வாங்க வேண்டும். இங்கே கதையே வேறு! தங்களுடைய மேற்பார்வை அலுவலர்களை விட்டு விசாரித்து இயக்குநர் குழுவின் அனுமதி வாங்கி, உடனே கடனைக் கொடுத்து விடுகிறார்கள். ''நீங்கள் மனுச் செய்து கொண்ட கடன் தொகை தயாராக இருக்

கிறது. வந்து வாங்கிக் கொண்டு செல்லவும்'' என்று கடன் கேட்டுள்ள உறுப்பினர்களுக்குத் தகவல் அனுப்பிக் கடன் தொகையினை வழங்குகிற நிறுவனம் எங்களுடையது ஒன்று தான்'' என்று பெருமையுடன் சொல்கிறார்கள் நிறுவன நிர்வாகிகள்.

இதற்கென்று தகவல் அட்டை அச்சடித்தே வைத்திருக்கிறார்கள்! வேளாண்மைத் தொழிலில் உரிய காலத்தில் கிடைக்கின்ற கடன் உதவிதான் மிகவும் முக்கியம். கடன் வழங்குவதை இந் நிறுவனம் ஒழுங்காகச்செய்கிறது. கடன் கேட்டுள்ள விவசாயி வெட்டியாக அலைவதில்லை. இதுதான் இந் நிறுவன வெற்றியின் இரகசியம். இந்த நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள், விவசாயிகளிடையே சேமிப்பு உணர்வினை ஏற்படுத்துவதாகும். விவசாயிகள் தாங்களே முன் வந்து இந்தச் சேமிப்பில் சேர்ந்திருக்கிறார்கள். இந்த வகையில் சுமார் பதினோரு இலட்சம் ரூபாய் நிலையான சேமிப்பாக (fixed deposits) இதுவரை சேர்ந்திருக்கிறது. ''விவசாயிகளுடைய சேமிப்பு அனைத்தும் இங்கே தான் இருக்கு. அவர்களுடைய இன்சூரன்ஸ் தொகையைக் கூட நாங்களே அவர்கள் சார்பில்கட்டி விடுகிறோம்'' என்கிறார் நிறுவனச் செயலாளர் திரு. அய்யனார் அவர்கள்!

பண விஷயத்தில் தான் இப்படி மனநிறைவான முறையில் பணி நடக்கிறது என்பதில்லை. விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்குகிறார்கள். தரமான விதைகளை தேசீய விதைகள் நிறுவனத்தினிடமிருந்து (National Seeds Corporation) வாங்குகிறார்கள். அவை விவசாயிகளுக்குத் தரப்படுகின்றன. அம்மோனியம் சல்பேட், யூரியா, கால்சியம், அம்மோனியம், நைட்ரேட் என். பி. கே. கலவை உரங்கள் வழங்குகிறார்கள். 1969-70-ல் மட்டும் இந்நிறுவனம் 2,19,500 ரூபாய் பெறுமானமுள்ள உரங்களை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

இது தவிர, இந்நிறுவனமே பல்வேறு பயிர்களுக்கு வேண்டிய கலப்பு உரங்கள் தயார் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது. இக்கலவை உரத்திற்கு ''அசோகா மார்க்'' கலவை உரங்கள் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்நிறுவனத்தின் செயல் எல்லைக்குள் உள்ள விவசாயிகளுக்கும் கோவை மாவட்டத்தில் மற்றப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கும் இக்கலவை உரத்தினை விற்பனை செய்கிறார்கள். இப்பணி, ஏஜெண்டுகளாக உள்ள 80 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடைபெறுகிறது. 1969-70-ல் மட்டும் இக்கலவை உரம் 2501 டன்கள் தயார் செய்யப்பட்டு, உறுப்பினர்களுக்கும் ஏஜெண்டுகளாக உள்ள சங்கங்களுக்கும் 15,63,930 ரூபாய் மதிப்புள்ள கலவை உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

உரத்திற்கு அடுத்த படியாக வருவது பூச்சிக் கொல்லி மருந்து (Pesticides). இதை விவசாயிக்கு விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களில் துடியலூர் கூட்டுறவு நிறுவனம் முன்னணியில் நிற்பதுடன், முதல் முதலில் இவ்வேலையை ஏற்றுச் செய்த சங்கங்களில் இதுவும் ஒன்றாகும். இம்மருந்துகளைத் தயார் செய்யும் நிலையங்களிடமிருந்து அவற்றை வாங்கி, மலிவு விலையில் விவசாயிகளுக்குக் கொடுக்கிறது இந்நிறுவனம்! 1969-70-ல் ரூ. 2,33,180 மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகளை இந் நிறுவனம் விவசாயிக்கு விற்பனை செய்துள்ளது. இம் மருந்துகளை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதையும் விவசாயிகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

இந்நிறுவனத்திற்குச் சொந்தமாகவே 150 தெளிப்பான்கள் (Sprayers) உள்ளன. விவசாயிகளுக்கு, லாப நட்டமில்லாதமுறையில் இவை வாடகைக்கு விடப்படுகின்றன. உழவர்களுக்கு நவீன விவசாய முறைகளையும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் எடுத்துக்கூறுவதில் இந்நிறுவனம் தனி அக்கறை செலுத்துகிறது. சொந்தமாகத் தெளிப்பான்கள் வைத்திருக்கும் விவசாயிகளுக்குத் தேவைப்படும் துணைக்கருவிகள் கொடுத்துதவவும், தெளிப்பான்கள் பழுதாகிப் போனால் பழுது பார்த்துத்தரவும் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்று இங்குள்ளது. தவிர, ஊராட்சி ஒன்றியங்கள், மற்ற விவசாயப் பண்ணைகளைச் சார்ந்த தெளிப்பான்களும் பழுது பார்த்துத் தரப்படுகின்றன. இதற்காகச் சுமார் 25,000 ரூபாய் மதிப்புள்ள துணைக் கருவிகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கருவிகள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தித் தெளிப்பான்களைப்பழுது பார்ப்பவர்கள் மிகவும் திறமை மிக்க ஊழியர்கள். அவர்களின் தொண்டினால், சமுதாயத்துக்கு மிகுந்த நன்மை கிடைத்து வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.



விசைத் தெளிப்பான்கள் பழுது பார்க்கப்படுகின்றன.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கார்ப்பரேஷனின் உதவியுடன், இந் நிறுவனத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் நிலையம் ஒன்று புதிய திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதற்காக 2.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். 'இன்னும் ஒரு மாதத்தில் இதை ஆரம்பித்து விடுவோம்' என்கிறார்கள் நிறுவன நிர்வாகிகள்.



தலைவர் பழனிச்சாமி கவுண்டர்.

'' பூச்சிக் கொல்லி மருந்துகள் சில சமயங்களில் கிடைப்பதில்லை. மிக அதிக விலையில் கறுப்பு மார்க்கெட்டில் தான் கிடைக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்காக, எப்பொழுது தேவையோ அப்பொழுது கிடைக்கின்ற முறையில்—அதாவது ஆண்டு பூராவும் கிடைக்கிற மாதிரி ஏற்பாடுகள் செய்துள்ளோம். நமது மாநிலத்திலேயே கூட்டுறவுத் துறையில் எங்கள் நிறுவனம் ஒன்றுதான் இதைச் செய்கிறது; மற்றதெல்லாம் தனியார் துறைகள். இந்த மருந்துகள் எல்லாம் பவுடர் போன்ற தயாரிப்புகள். இதைத் திரவ அமைப்பிலும் செய்ய இருக்கிறோம். அதாவது, எண்டிரின், பாலிடால் மாதிரி. இதற்கான திட்டமும் இருக்கு'' என்கிறார் செயலாளர்.

'' நல்ல தரமான கால்நடைத் தீவனம் நாங்களே தயார் செய்கிறோம். இதற்காக ஒரு தீவனம் தயாரிக்கும் நிலையமே உள்ளது. இந்தத் தீவனத்தைத் தயார் செய்து, விஞ்ஞான முறைப்படிச் சேமித்து வைத்து, விவசாயிகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும், மற்றக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குகிறோம். 1969-70-ல் 135 டன்கள் மாட்டுத் தீவனம் தயார் செய்யப்பட்டு, மாடு வளர்ப்போருக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது. இதே மாதிரி, கோழித் தீவனமும் தயார் செய்யப்படுகிறது. 1969-70-ல் 66 டன்கள் கோழித் தீவனம் இந்நிறுவனத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது.''

'' இன்னும் ஒன்று சொல்ல வேண்டும். நீண்ட இழை உகண்டா பருத்தி எம். சி. யூ. 5 இரகம் பருத்தி இருக்கிறதே—அந்த இரகத்தைக் கோவை மாவட்டத்தில்தான் பயிரிடுகிறார்கள். தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் பயிரிடவில்லை என்று உறுதியாகக்கூறமுடியும். மேலும், கோவை மாவட்டம் தான் பருத்திக்குக் கேந்திரமான இடமாயிற்றே! அரசினரிடமிருந்து சுத்தமான, தரமான, அந்தப்பருத்தி விதைகளை வாங்கி விவசாயிகளுக்கு நாங்கள் கொடுக்கிறோம். இதற்கென்று 2,500 ஏக்கர் நிலம் என்று இலக்கு நிர்ணயித்துள்ளோம். அதை எங்களுடைய மேற்பார்வையில் வைத்துள்ளோம். இப்பருத்தி பயிரிட மூல விதைகள், மருந்துகள், உரங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு வழங்குகிறோம். விளைச்சலான பிறகு அந்தப் பருத்தியை நாங்களே அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்வோம். இதற்காகப் பயிரிடுவோருக்கு நல்லவிலை கொடுக்கிறோம். அவற்றை விலை கொடுத்து வாங்குவதில் எங்களுடன் யாரும் போட்டி போட முடியாது. அவ்வளவு நல்ல விலை தருகிறோம். அப்படி வாங்குகிற பருத்தியை இங்கே எங்களுடைய பஞ்சு பிரிக்கிற தொழிற்சாலைக்குப் பயன்படுத்துகிறோம். இந்த நீண்ட இழைப் பருத்தியை எல்லா மில்காரர்களும் வாங்கிக் கொண்டு போகிறார்கள். இதில் இடைத் தரகர்களே கிடையாது! எல்லாம் வாங்குபவர்கள், விற்பவர்கள் என்று நேரடி முறையில் தான் நடக்கிறது.

''டிராக்டர்களையும் இங்கே பழுது பார்த்துத் தருகிறோம். டிராக்டர்களை இந்தப் பக்கத்தில் ரொம்பவும் பயன்படுத்துகிறார்கள். டிசம்பர் 1969-ல் இந்த டிராக்டர் பழுது பார்க்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆகஸ்ட் திங்கள் முடிய ஒன்றரை இலட்சம் ரூபாய், டிராக்டர் வாடகையின் மூலம் வாங்கியிருக்கிறோம். மழைபெய்து இருந்தால் இன்னும் அதிகமாகி இருக்கும்.

கால்நடைத் தீவனம் கலக்கப்படுகிறது.



'' எங்கள் நிறுவனம் நல்ல முறையில் விவசாயிகளுக்கு உதவி வருவதைக் கண்ணுற்ற 'கேர்' (CARE) நிறுவனத்தார் சுமார் எட்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள விவசாயக் கருவிகளை இந்நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். டிராக்டர்கள், இயந்திரக் கலப்பைகள், டிரெய்லர்கள், மருந்தடிக்கும் கருவிகள், கரும்பு நடவு இயந்திரம், கல் உடைக்கும் இயந்திரம் போன்ற விவசாயக் கருவிகளை வழங்கியுள்ளனர்.

'' அக்கருவிகளைப் பராமரிக்கவும், விவசாயிகள் இவற்றை உபயோகிப்பது சம்பந்தமாகப் பயிற்சி அளிக்கவும் ஒரு

தொழிற்சாலையும், பயிற்சிக்கூடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

'' நடைமுறையில் உள்ளது போக, செயல் படுத்தப்பட வேண்டிய புதிய திட்டங்கள் பல உள்ளன. பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் நிலையம் இரண்டேகால் இலட்சம் ரூபாயில் ஆரம்பிக்கப் போகிறோம் என்று முன்பே சொன்னேன். மண் ஆய்வுக் கூடம் (Soil Testing Laboratory) ஒன்று ஆரம்பிக்கத் திட்டமுள்ளது. மண்ணைப் பரிசோதனை செய்து என்னென்ன உரம் அந்தந்த மண்ணுக்குப் போடலாம் என்று விவசாயிகளுக்குக் கூறுவதற்காகவே இந்த நிலையம் ஏற்படுத்தப்படுகிறது. பாறை துளைக்கும் பிரிவு (Rock Blasting Unit) ஒன்று ஏற்படுத்துவதுபற்றிப் பரிசீலித்துக்கொண்டு வருகிறோம். இதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். துளை போடும் கருவிகள் வாங்க வேண்டும். இவற்றைப் பயன்படுத்தி 300 அடி ஆழம் வரையில் கூடக் கிணறுகள் தோண்டலாம். இன்னொரு புதிய திட்டத்தைச் சொல்ல வேண்டும். கூட்டுறவுப் பால் வழங்கு நிறுவனம் இல்லாத இடங்களில், எங்களுடைய உறுப்பினர்களுக்கு உயர்ந்த இரகக் கறவை மாடுகள் வாங்கிக் கொடுத்து, அதன் மூலம் அவர்களுக்கு உபரி வருமானம் கிடைக்கச் செய்யும் படியான ஒரு திட்டமும் பரிசீலனையில் உள்ளது. அத்துடன், விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு விவசாயக் கருவிகளையும் இங்கேயே தயார் செய்து விநியோகம் செய்ய ஒரு திட்டம் தீட்டியுள்ளோம்.

'' இறுதியாக இதைத்தான் என்னால் சொல்ல முடியும். எங்களுடைய நிறுவனத்தின் இயக்குநர்கள், கூட்டத்திற்கு வருவதற்காக அளிக்கப்படுகிற படிப்பணத்தைக்கூட வாங்கிக் கொள்வதில்லை. ஒரு குடும்பமாகத் தொண்டு உணர்வுடன், சுயநலமின்றிப் பணியாற்றுகிறார்கள். இந்த நிறுவனத்தின் தலைவர் திருவாளர் என். வி. பழனிச்சாமி கவுண்டர் அவர்கள் தான் இந் நிறுவனத்தின் வெற்றிக்கே முழுக்கமுழுக்கக் காரணம் ஆவார்.

'' தொடக்கத்திலிருந்து எங்களுடைய நிறுவனம் இலாபத்திலேயே பணியாற்றி வந்துள்ளது. 1969-70-ல் மட்டும் ஒரு லட்சத்து ஏழாயிரம் ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது. இதற்கெல்லாம் என்ன காரணம் ? சேவை உணர்வுதான் !''

நிறுவனச் செயலாளர் தன் நீண்ட பேச்சைமுடித்துக்கொண்டு "ரொம்ப நேரம் உங்களைக் காக்க வைத்துட்டேனுங்க... காபி சாப்பிடுங்க !'' என்றார். அவர் அன்புடன் அளித்த காப்பியைச் சாப்பிட்டுவிட்டு வண்டியில் ஏறும் பொழுது இந்த நிறுவனம் போல் தமிழகத்தில் எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களும் தொண்டுள்ளத்துடன் சுயநலமின்றிப் பாடுபட்டால்... 'வாடித் தொழிலின்றி வறுமையிற் சாவதெல்லாம் கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்--தோழர்களே' என்ற புரட்சிக் கவிஞரின் இதயக்குமுறல் இன்பத் தென்றலாக நிச்சயம் மாறிவிடாதா? என்ற எண்ணம் எழாமலில்லை.






துவளும் நடை, தவள நகை, பவள இதழ்த் தையலான குறவஞ்சி தன் நாட்டு வளத்தைக் குறிப்பிடும் பகுதியில் குற்றாலமலை நம் கண்முன்னே எழுகின்றது. குற்றாலக் குறவஞ்சியில் கவிச்சுவை தேனருவியாய்ப் பாய்கிறது. நாட்டு மக்களே யன்றி, மரம் செடி கொடிகளும் விருந்துபச்சாரம் செய்யும் விந்தையைக் காணவிழைவோர் கீழ்வரும் குற்றாலக் குறவஞ்சிப் பாடலை நோக்கின் விளங்கும்.

"சூழமேதி இறங்கும் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினில் பாய
கொழும்ப லாக்கனி வாழையில் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவிருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடும்"

வளமிக்க பகுதி குற்றாலம் ஆகும். இருவிழி பருகும் விருந்தாய், இயற்கை சிங்காரம், எவர்க்கும் அயர்வைப் போக்கும் மருந்தாய் இருக்கும் இம்மலையின் அழகினைப் பாடாத தமிழ்க்கவிஞர்களே இல்லை எனலாம், இயற்கை அன்னை தாலாட்டுப் பாடுவதுபோல் அமைந்துள்ள குற்றால நீர்வீழ்ச்சிப் பக்கத்திலே உள்ள மேட்டுப்பாங்கான இடத்தில். 1960-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் நாள் 25 ஏக்கர் நிலப்பரப்பில் குற்றாலம் மாதிரி பழப் பண்ணை அமைக்கப்பட்டது. அதுநாள் வரை வனத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்த இப்பகுதி வேளாண்மைத்துறைக்கு மாற்றப்பட்டது. இயற்கையில் வளர்ந்து செழித்திருந்த மரஞ்செடி கொடிகளை அகற்றி மண்வளப் பாதுகாப்புத் திட்ட வேலைகள் செய்து பல புதிய உயர் இனக் கன்றுகள் நடப்பட்டன. கருமேகம் சூழ்ந்து கவினுறும் இம்மலைப் பிரதேசத்தில் பல வகையான பழச்சாகுபடிகள் நடைபெற்று வந்தபோதிலும், இங்குள்ள வெப்ப நிலைக்கு ஏற்பத் திருந்தியமுறையில் அவ்வாறு பயிர் செய்யலாம் என்பதை எடுத்து வலியுறுத்திக் காட்டவே இப் பண்ணை நல்லதொரு முறையில் நிறுவப்பட்டது.

நம்மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இதர மாதிரிப் பண்ணைகளின் தொடர்ச்சியாக இப்பண்ணை அமைந்து இப் பகுதிமக்களுக்குப் பயன்படக் கூடிய உயர்ரகப் பழக் கன்றுகளை உற்பத்தி செய்து, வினியோகம் செய்து வருகிறது. இந்தப் பண்ணை திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்ட வேளாண்குடி மக்கள், பழக்கன்றுகளும், மலைப் பிரதேசச் செடிகளும் வேண்டிய அளவிற்கு வாங்கிப் பயனடையும் வகையில் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இப் பண்ணை மேற்குத் தொடர்ச்சி மலையின் 'மழை மறைவுப்' பகுதியில் அமைந்திருக்கிறது, தென்மேற்கு, வடகிழக்குப் பருவக் காற்றின் மூலம் சராசரி 40 அங்குல மழை பெய்வதால், இப்பகுதி பழச்சாகுபடிக்கு ஏற்ற இடமாக அமைந்துள்ளது. பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்கள் மழையே இல்லாவிடினும், ஏனைய காலங்களில் வேண்டிய மழை பொழிகிறது.

இப்பண்ணை கடல் மட்டத்திலிருந்து 1,200 அடி முதல் 1,850 அடி உயரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. 20 முதல் 25 சதவிகித சரிவுப் பகுதியாக உள்ளது. பழச்சாகுபடிக்கு ஏற்ப 5 முதல் 6 அடி வரையிலும் தாவர மக்கு நிறைந்த செம்மண் நிலமாகவும் இருக்கிறது.

தேனருவியைத் தாண்டி ஐந்தருவி அமைந்துள்ளது. இவ்வைந்தருவியிலிருந்து 2 பர்லாங் தூரத்தில் நல்ல சாலை வசதியோடு அமைந்துள்ளது தான் இந்தப் பழப் பண்ணை.

"கோடையிலே இளைப்பாறிக்
கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே"

என்று வள்ளலார்பாடியதற்கு இணங்க கோடையின் வெப்பத்தைத் தணித்துக் கொள்ள வரும் மக்களுக்கு, இப்பழப் பண்ணை அமைந்துள்ள இடம் உல்லாசப் பயணத்திற்குச் சிறந்த இடமாகவும் அமைந்து இன்பம் பயக்கிறது. இங்கு இப்பகுதியின் உச்சியில் 'படப்பிடிப்பு' நடைபெறுவதுண்டு. இதன் மூலமும் இதற்கு வருவாய் கிட்டுகிறது, $2\frac{1}{2}$ ஏக்கர் பரப்பில் தரமான பலவகைப் பழச் செடிகளும், அலங்காரச் செடிகளும் அடங்கிய பெரிய நாற்றங்கால் ஒன்று இருக்கிறது. இந் நாற்றங்காலில் இருந்து கிடைக்கும் செடிகள் மக்களுக்கு முறைப்படி விற்கப்பட்டு, பழமரங்கள் உற்பத்தியாவதற்கு வழிவகை செய்யப்படுகின்றன, இந் நாற்றங்காலுக்கும் பழமரங்களுக்கும் ஐந்தருவி ஆற்றிலிருந்து தண்ணீர் இறைக்கப்படுகிறது. 1,800 அடி உயரத்தில் உள்ள இம்மலைப் பகுதியில்

ஒரு கிணறு வெட்டப்பட்டு அக்கிணற்றிலிருந்து தண்ணீர் வழங்கப்படுகிறது,

தரமான உயர்ரகப் பழக் கன்றுகளை இவ்வட்டார மக்களுக்குப் பயனளிக்கும் அளவிற்கு உற்பத்தி செய்து வினியோகம் செய்வதோடு, நாற்றங்கால் ஒன்று நிறுவிப் பலவித அலங்காரச் செடிகளும் ஏனையவும் உற்பத்தி செய்து வழங்கப்படுகின்றன.

இது தவிர, பாக்குக் கன்றுகள் கொண்ட நாற்றங்கால் ஒன்றும், ஏலக்காய் நாற்றங்கால் ஒன்றும் இணைந்து இத்துடன் நடைபெற்று வருகிறது. குறைந்த விலையில் தரமான உயர் ரகக் கன்றுகள் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மா, பலா, வாழை, எலுமிச்சை, கொடி எலுமிச்சை, மாதுளை, மங்குஸ்தான், கமலா ஆரஞ்சு, கொய்யா, சப்போட்டா, ஆகிய பழமரங்கள் பயிரிடப்படுகின்றன.

வாசனைப்பொருள்களான ஜாதிக்காய், கிராம்பு. இலவங்கப்பட்டைச் செடி ஆகியவை பேணி வளர்க்கப்படுகின்றன. வானுற ஓங்கி வளர்ந்துள்ள கமுகு மரங்கள் சாரிசாரியாய் அமைந்து அழகுறக் காட்சி அளிக்கின்றன.

கன்றுச் செடிகளின் கையிருப்பு மதிப்பு ரூ. 8,074-50 ஆகிறது. இவ்வகைகளில் 4,921 கன்றுகள் வெளியாருக்கு 1969-70-ல் விற்பனை மூலம் வினியோகம் செய்யப்பட்டுள்ளன.

**மங்குஸ்தான் மாட்சி :—**

இம் மாதிரிப் பழப் பண்ணைப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான பகுதியில்தான் மங்குஸ்தான் பழ மரங்கள் 5 இருக்கின்றன. பொதுவாகப் பழங்கள் எல்லாம் மனிதனுக்குத் தேவையான உயிர்ச் சத்துக்களை அளிக்கின்றன என்றாலும், மங்குஸ்தான் பழங்களின் பயன் குறிப்பிடத்தக்கதாய் உள்ளது.

இரப்பர் போன்ற தடித்த தோலை நீக்கினால் இளஞ்சிவப்பு நிறமுள்ள பழச்சுளைகளைக் காணலாம். மிகக் குளிர்ச்சியான பகுதியில் வளர்வதனாலோ என்னவோ, இப்பழம் மிகுந்த குளிர்ச்சியுடையதாய் இருக்கின்றது, உடல்நிலை வெப்பம் அதிகம் இருப்பவர் உண்டால், வெப்பத்தைத் தணிக்கிறது. 'மூலம்' உள்ளவர்கள் சாப்பிட்டால் அவர்களுக்கு வேறு மருந்தோ, அறுவைச் சிகிச்சையோ தேவையில்லை. மூல வியாதிக்கு இது அருமருந்தாய்ப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வளவு சிறந்த மருந்தாய்ப் பயன்படுவதால், இதனை எங்கும் பயிரிடலாம் என்றால், மலைப்பிரதேசத்தில் மட்டுமே வளரும் தன்மை பெற்றிருக்கின்றது. ஒரு பழம் அரை ரூபாய் முதல் 1 ரூபாய் வரை விலை போகிறது. குற்றாலம் செல்வோர் பெரும்பாலும் இதனைச் சுவைக்காமல் வருவதில்லை எனலாம்.

இவ்வாறு மாதிரிப் பழப்பண்ணை பல வகைப் பழ மரங்களை மக்களுக்கு வழங்கி இனவிருத்தி செய்ய உதவுவதோடு, பயனுள்ள பழவகைகளையும் மக்களுக்கு வழங்கி வருகிறது. இதுபோன்ற பழப் பண்ணைகளை மேலும் தொடங்கும் முயற்சியில் நம் அரசு நல்ல கவனம் செலுத்தி வருகிறது.

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் !

**தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்**


Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லாவெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே ! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்
டாக்டர் S காளிமுத்து, R.M.P.(IND), V.V.C., A.M.I.H.
**பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.**
**போன் : 316 தந்தி : சித்தர்**
சென்னை கிளை ஆபீஸ் :
**41, நைனியப்பன் தெரு, G.T. சென்னை-1**
**போன் : 21448**

தொலைபேசி எண்: 440. தந்தி: ERUMBULTD

**திண்டுக்கல் அயர்ன் அண்டு**
**ஹார்டுவேர்ஸ் (பி) லிமிடெட்**
**(பதிவு எண் 4267)**

**பதிவுபெற்ற அலுவலகம்—T.S. No. 583**
**ரயில்வே ஸ்டேசன் ரோடு**
**திண்டுக்கல்-1 (தமிழ்நாடு)**

எங்களிடம் இரும்பு (அண்டு) எஃகு சரக்குகள் விலை சகாயமாகவும் 'ராம்கோ' சிமிண்ட் மூடைகள் அரசு நிர்ணய விலையிலும் கிடைக்கும்

TNGST. No 435885
CST No. 583 DT—1-5-1961

# ஐ. ஆர். 5

ஐ. ஆர். 5 நெல், பிலிப்பைன்ஸ் நாட்டில் 'லாஸ் பேனஸ்' என்ற இடத்திலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தால் உருவாக்கப்பட்ட இரண்டாவது உயர் விளைச்சல் ரகமாகும். 'பெட்டா' என்னும் இந்தோனேசியா நாட்டின் உயர் ரகத்துடன், 'டாங்காய் ரோடான்' என்னும் மலேசியா நாட்டு ரகத்தைக் கரு இணைப்பு முறை மூலம் உருவாக்கப்பட்டதே ஐ. ஆர். 5. இந்நெல்லிற்கு ஆரம்ப காலத்தில் குறிக்கப்பட்டிருந்த எண் ஐ. ஆர். 5-47-2 என்பதாகும். பின்பு, இந்நெல்லிற்கு அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனம் அதிகார பூர்வமாக ஐ. ஆர். 5 என்று பெயரிட்டது.

ஐ. ஆர். 5 நெல் நடுத்தர உயரமுள்ளது. ஐ. ஆர். 8-ஐ விடச் சற்று உயரமாக வளரக் கூடியது. இதன் உயரம் 130 முதல் 140 செண்டிமீட்டர் இருக்கும். இதன் வயது 150 நாட்கள். ஐ. ஆர். 5-ன் நாற்று வீரிய சக்தி மிகுந்தது; அதிகமாகத் தூர் கிளைக்கும் தன்மையுடையது; ஐ. ஆர். 8-ஐ விட ஓரளவுக்கு 'பிளாட்' நோயைத் தாங்கிக் கொள்ளும் தன்மையுள்ளது; இது, கோ. 25 நெல்லை விடச் சராசரியாக 30 முதல் 40 சத வீதம் அதிக மகசூல் கொடுக்கும். இதன் அரிசி நடுத்தரப் பருமனுள்ளது. அரிசி வெள்ளையாய் இருக்கும்.

ஐ. ஆர். 5 நெல் ரகம் கோயம்புத்தூர், அம்பாசமுத்திரம், ஆடுதுறை ஆகிய ஆராய்ச்சி நிலையங்களில் முதலில் சோதனையாகப் பயிரிட்டுப் பார்க்கப்பட்டது. அச்சோதனைகளில் ஐ. ஆர். 5 ரகம் ஏக்கருக்கு 2,500 கிலோ முதல் 2,800 கிலோ வரை மகசூல் கொடுத்துள்ளது. பல்வேறு சோதனைகளுக்குப் பிறகே, தமிழ்நாட்டில் இந்த ரகத்தைச் சம்பா, தாளடி அல்லது பிசானம் பருவங்களில் பயிரிடுமாறு தமிழ் நாடு அரசின் வேளாண்மைத் துறை பரிந்துரைத்தது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான உழவர் பெருமக்கள் தாளடியில் ஒரு டன்னுக்கும் குறைவாகவே மகசூல் பெற்று வருகின்றனர். இதற்குக் காரணம் பல இருப்பினும், தாளடிப் பருவத்திற்கேற்ற உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடாததே தலையாய காரணமாகும். தாளடிப் பருவத்திற்கேற்ற ரகங்களில், உயர் விளைச்சல் தரும் ஐ. ஆர். 5 நெல்லே தலைசிறந்ததாகும். ஐ. ஆர். 5 பயிரிட்டால் தாளடி மகசூல் மேலும் பெருகுவது திண்ணம்.

தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு 13,818 ஏக்கரில் ஐ. ஆர். 5 நெல் பயிரிட்டு, பல உழவர் பெருமக்கள் 2 டன், 2½ டன் என்று மகசூல் பெற்றுள்ளனர். இந்த ஆண்டில் 2,22,000 ஏக்கரில் ஐ. ஆர். 5 நெல் பயிரிடத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை திட்டமிட்டுள்ளது.

எனவே, தாளடிப் பருவத்தில் ஐ. ஆர். 5 நெல் பயிரிடுமாறும், கீழே குறிப்பிட்டுள்ள சாகுபடி முறைகளை மேற்கொண்டு மகசூலைப் பெருக்கி, பெரு லாபம் பெறுமாறும் உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.



## நிறைந்த மகசூலுக்குச் சிறந்த விதைகள்

சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள விதைகளையே உபயோகிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளிலும், தேசிய விதைக் கார்ப்பரேஷனால் அங்கீகரிக்கப்பட்ட விதை உற்பத்திப் பண்ணைகளிலும் இருந்து விதைகளை வாங்குவதே நல்லது.

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ விதை தேவைப்படும். விதையை ஊற வைப்பதற்கு முன்னர் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து கலக்க வேண்டும். விதையுடன் தொற்றியுள்ள நோய்களை இம் மருந்து அகற்றும்.

## உறுதியான நாற்றுகள்

சிறந்த முறையில் நாற்றங்கால் தயாரிக்கப்படவேண்டும். சிறந்த முறையில் தயாரிக்கப் பட்ட நாற்றங்காலில்தான் நல்ல திடமான நாற்றுகள் வளர முடியும். நல்ல மகசூல் பெறச் சிறந்தமுறையில் நாற்றங்கால் தயாரிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

ஒரு ஏக்கர் நடவு செய்ய வேண்டுமானால், 12 சென்ட் பரப்பில் நாற்று விடவேண்டும். 12 சென்ட் பரப்புள்ள நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு, அல்லது கம்போஸ்ட் எரு இட வேண்டும். எரு இட்ட பின் நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் உழுது நன்கு சேறுக்கவும்.

நாற்றங்காலை நன்கு சேறுக்கிய பின், ஒரு சென்ட் அளவுள்ள (54 அடி × 8 அடி) 12 மேடைப் பாத்திகளாக அமைக்கவும். ஒரு மேடைப் பாத்திக்கு ஒன்றரைக் கிலோ வீதம், 18 கிலோ முளைவிட்ட விதைகளை 12 பாத்திகளிலும் விதைக்க வேண்டும். நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்களுக்கு முன், சென்ட்க்கு அரைக் கிலோ வீதம் அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இட வேண்டும்.

## நாற்றுகளைப் பாதுகாக்க . . .

நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் 0·05 சத 'பாரத்தியான்' மருந்து (100

மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

நாற்றின் வயது 28 முதல் 30 நாட்கள் ஆகும்பொழுது பறித்து நடவு செய்ய வேண்டும். நாற்றுப் பறிக்கும்பொழுது நாற்றுகளைத் தரையிலோ, அல்லது குச்சியிலோ அடிக்கக் கூடாது. நாற்று முடிகளைக் கட்டுவதற்கு நாற்றுகளை வளைத்துக் கட்டக் கூடாது ; வாழை நார் அல்லது வைக்கோலினால் கட்டவேண்டும்.

### நடவு வயலைத் தயாரிக்க....

நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்கவும்.

ஏக்கருக்கு 5 வண்டி (2,300 கிலோ) தழையுரம் அல்லது 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இட வேண்டும்.

கடைசி உழவிற்கு முன்பு 21 கிலோ மணிச் சத்து அளிக்க 130 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தையும், 21 கிலோ சாம்பல் சத்து அளிக்க 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் இட்டுச் சேற்றுடன் நன்கு கலக்குமாறு உழ வேண்டும். நடுவதற்கு முன்பு 27 கிலோ தழைச் சத்து அளிக்க 135 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 60 ' கிலோ யூரியா உரமிட வேண்டும். அல்லது 46 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட்டையும், 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் கடைசி உழவில் இட்டுவிட்டு, நடுவதற்கு முன்பு 43 கிலோ யூரியாவை இட வேண்டும். இம்முறையினால் உரமிடும் செலவு குறையும்.

### வரிசையில் நடவு செய்தால் வாளிப்பான கதிர் !

வரிசைக்கு வரிசை 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், பயிருக்குப் பயிர் 1 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு, இரண்டு இரண்டு நாற்றுகளாக நடவு செய்யவும்.

### இடையுழவு

நடவு செய்த 15-வது நாள் முதல் களையும், 35-வது நாள் இரண்டாம் களையும் எடுக்க வேண்டும். தேவையானால் 2-ம் களையெடுத்த 15 நாட்களுக்குப் பின் மூன்றும் களை எடுக்கலாம். ஜப்பானிய இடையுழவுக் கருவி களை உபயோகித்து வரிசைகளுக்கு இடையில் இடையுழவு செய்தால், பயிர்கள் புதிய வேர் விடவும், தூர் கிளைக்கவும் வழி பிறக்கும்.

### மேலுரமிடுவதால்...?

நடவு செய்த 21-வது நாள் 9 கிலோ தழைச் சத்து அளிக்க 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவை முதல் முறையாக மேலுரமாக இட வேண்டும். இரண்டாம் முறையாக மேலுரமிடப் பயிர் சூல் கட்டும் பருவத்தில் அதாவது தொண்டைக் கதிர் சமயத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு 9 கிலோ தழைச் சத்துக் கொடுக்கும் 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியா போட வேண்டும்.

### போதிய அளவு நீர்

நடவு வயலுக்கு 4 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சலாம். ஒவ்வொரு முறையும் வயலில் 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) உயரம் தண்ணீர் இருக்கும்படி நீர் பாய்ச்ச வேண்டும்.

### அரிசன மக்களுக்குப் புதிய சலுகை

தமிழ்நாடு பொதுப் பணிகள் குழு (சர்வீஸ் கமிஷன்) நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ள அரிசன மக்கள் (S.C. & S.T.) கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கத் தமிழ் நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தீர்மானம் உடனடியாக அமுலுக்கு வருகிறது.

இதுவரை ஒரு குறிப்பிட்ட அளவு அவர்கள் கட்டணம் செலுத்தி வந்தார்கள். இந்தப் புதிய ஆணைப்படி இனி அவர்கள் இத்தேர்வுகளுக்குக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

### உரிய காலத்தில் மருந்து தெளிப்பது

வந்த பின் காப்பதை விட வருமுன் காப்பதே பூச்சி, நோய்களினால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கும். சேதம் குறைந்தால் உற்பத்தி பெருகுவது இயற்கையே. எனவே, நடவு செய்த 15-வது நாள் 0.05 சத பாரத்தியான் (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது 0.04 சத என்ட்ரின் (200 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் நீரில் கலந்து) மருந்தை 'குமான்' போன்ற பூசணக் கொல்லி மருந்துடன் கலந்து தெளிக்க வேண்டும். இம் மருந்துகளை 20 நாட்களுக்கு ஒரு முறை வீதம் கதிர் வரும் வரை தெளிக்க வேண்டும். கதிரில் உள்ள மணிகளில் பால் பிடிக்கும்போது ஏக்கருக்கு 9 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சத தூளைத் தூவ வேண்டும்.

மேலே கூறப்பட்ட பயிர்ப் பாதுகாப்பு முறைகள் தடுப்பு முறைகளாகக் கூறப்பட்டவைகளேயாகும். அவ்வப்பொழுது பயிரில் தோன்றும் பூச்சி, நோய்களைக் கட்டுப்படுத்த உங்கள் ஊர்ப்பணியாளரையோ அல்லது வேளாண்மை வளர்ச்சி அலுவலரையோ அணுகி, அறிந்து, தேவையான மருந்துகளை வாங்கி வந்து, முறையாகக் கலக்கித், தேவையான அளவு தெளிக்க வேண்டும்.

### காலத்தில் அறுவடை

கதிர்கள் நன்றாக முற்றிய உடன் அறுவடை செய்துவிட வேண்டும். இதனால் நெல் மணிகள் வயலில் உதிர்ந்து சேதமாவதைத் தடுக்கலாம்.

மேலே கூறப்பட்டுள்ள ஐ. ஆர். 5 நெல்லின் சாகுபடி முறைகளை மேற்கொண்டு தாளடி மகசூலைப் பெருக்கி, நாடு நலம் பெறவும், நமது வாழ்வு வளம் பெறவும் முயன்றிடுவோமாக !

# எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்



## செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வருங் காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இன்பச் சூழ்நிலை எப்படி வந்தது? பிறக்கும் போதே அதிர்ஷடத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர்? இல்லை.

வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்ரோர், திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவில்லை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர்; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழநதைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில பதது லடசம் பேர் குடும்ப நலத் திட்டத்தால பயனடைந துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்ரு இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்ரேரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர் காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம்; பாதுகாத்திடுங்கள்! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள்; நண்பர்களிடம் கேளுங்கள்!

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள் பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர்; கருத்துரை தருவர்; கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக!

*திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்*

**வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9**

MOULIS

# World Poetry Society

INTERCONTINENTAL

Africa - Anglo America - Asia - Europe - Latin America - Oceania

*Whose Voice for Peace is 'POET'*

PROCLAIMS THAT THE ELECT

## Mr. M. Karunanidhi

Chief Minister, Government of Tamil Nadu, Madras, India

Having Graciously Served World Poetry with Special Merit

As invincible Contemporary Leader of Tamil Culture

*Was Granted The*

## Distinguished Service Citation

"Poetic Magic breathing Tamil linguistic Splendour & Glory"

Conferred in the Manner of an

ANCIENT ARTHURIAN COURT OF HONOUR

*Convened By Our*

CONTEMPORARY WORLD ROUND TABLE OF PARNASSIAN KNIGHTS

Where Knights of East & West mass Orphic Arms of Peace in Poetry

Sealed and Effective this 14th day of April , 19 69

for the Council of Award Judges and Board of Regents

Orville Crowder Miller

Chancellor
Urbana, Illinois, U.S.A

Krishna Srinivas

Founder - President
Madras, INDIA



# உலகில் சிறந்த கவிஞர்

உலகக் கவிதைத் துறையில் சிறந்த பணி புரிந்தமைக்காக 1969-ம் ஆண்டின் சிறந்த உலகக் கவிஞராகத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிஅவர்களை, உலகக் கவிதைக் கழகம் தேர்ந்தெடுத்துள்ளது.

உலகக் கவிதைக் கழகத்தின் தலைவர் டாக்டர் ஆர்வில் சி. மில்லர் அமெரிக்காவிலிருந்து இதற்காகச் சென்னைக்கு நேரில்வந்து தமிழக முதல்வரைச் சந்தித்துவிருதையும் பாராட்டு மடலையும் வழங்கினர்.

பாராட்டு மடலில் '' தமிழ் நாட்டின் உண்மையான அரசவைக் கவிஞரைப்போன்று நீங்கள் உங்கள் அற்புதக் கவிதைகளில் தமிழ் மொழியின் எல்லாப் பெருமைகளையும் மாண்பையும் இழையோட விட்டிருக்கிறீர்கள். தமிழ் மொழியில் நிறைந்து இருக்கின்ற பெருமைகளையும் பேரொளி அலங்காரங்களையும் உங்கள் மயக்கும் கவிதைகளில் கொட்டி வர்ணித்திருக்கிறீர்கள்.

ஆறாயிரம் ஆண்டுகளாகப் பெருமை பெற்ற தமிழ்ப் பண்பாட்டின் தன்னிகரில்லாத—வெல்ல முடியாத தலைவராகவே உங்களை ஆறு கண்டங்களிலுமுள்ள ஆறுகோடித் தமிழர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் '' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

உலகக் கவிதைக் கழகம் 100 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டது. இவ்விருதினை வழங்கியதற்கு டாக்டர் மில்லருக்கு நன்றி தெரிவித்துத் தனது புத்தகங்களின் ஆங்கில மொழி பெயர்ப்புகளான '' நெருப்பு '', என்ற சிறுகதைத் தொகுப்பு, '' முத்துக்கள் '' என்னும் கவிதைத் தொகுப்பு '' நாம்முன்னேற முன்னேற என்ற அரசியல்—சமூகப் பேச்சுக்கள், '' தி.மு.க. வரலாறு '' என்ற நான்கு நூல்களையும் முதல்வர் அன்பளிப்பாக வழங்கினர்.

உலகக் கவிதைக் கழகத்தின் நிறுவனர்—தலைவர் ஆகிய டாக்டர் கிருஷ்ண சீனிவாசும் உடனிருந்தார்.

## உழவர் பெருமககள் அஞ்ச வேண்டாம்

உழவர் பெருமக்கள் எவ்வளவு நெல்தர முன் வந்தாலும் அதை வாங்கிக் கொள்வதென்று தமிழ் நாடு அரசு முடிவு செய்துள்ளது. இம்முடிவினை மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 20-10-1970 அன்று ஓர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் அறிக்கை வருமாறு :—

தஞ்சை மாவட்டத்தில் குறுவை அமோக விளைச்சலின் காரணமாக நெல் விற்பனையில் சற்றுத் தேக்க நிலை ஏற்பட்டிருப்பதாலும், விலைச்சரிவு ஏற்படக் கூடும் என்ற அச்சம் பரவலாக ஏற்பட்டிருப்பதாலும் உருவாகியுள்ள சூழ்நிலையை அரசு ஆழ்ந்து கவனித்துக் கீழ்க்கண்ட முடிவினை மேற்கொண்டுள்ளது .

இந்திய உணவு வாரிய மூலமும், தமிழ் நாடு அரசின் மூலமும் நெல்லைக் குறிப்பிட்ட விலைக்கு வாங்கிட எடுத்துள்ள முயற்சியில் இந்திய உணவு வாரியம் வேகமாகச் செயல்படவில்லை என்பதுதமிழ்நாடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. ஆகவே, தமிழ் நாடு அரசின் கணக்கில் இந்திய உணவு வாரியம் அறிவித்துள்ள அதே விலைக்கு ஒரு லட்சம் டன் அரிசிக்கான நெல்லை வாங்குவதென்றும், மேற்கொண்டும் உழவர் பெருமக்கள் தருவதாயின் அதனையும் வாங்குவதென்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதற்காக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கட்கும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, உழவர் பெருமக்கள் தங்களிடம் உள்ள குறுவை நெல்லை குவிண்டால் (100 கிலோ) ரூபாய் 51·00 வீதம் (அதாவது 57 கிலோ கொண்ட மூட்டை ரூபாய் 29·07 வீதம்) தமிழ் நாடு அரசுக்கோ அல்லது இந்திய உணவு வாரியத்திற்கோ விற்றுவிடலாம். விலை குறைந்து விடுமோ என்று அஞ்சிடத் தேவையில்லை.

# கல்லுக்குள் இசை

தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி என்ற மூன்று வகை இசைக் கருவிகளைக் கொண்டு நமது பண்டைத் தமிழ்ச் சான்றோர் ஏழிசைகளையும் இசைத்துப் புகழ் படைத்தனர் என்பதை நாம் நன்கறிவோம்.

ஆனால் அற்புதமான ஒரு நரம்புக்கருவி-யாழ், வீணை, அல்லது சீறியாழ் (பிடில்) போன்ற —கருவியினின்று எழும்பும் இன்னிசை ஒத்ததோர் இசையினைக் கல்லினின்றும் எழுப்ப இயலும் என்ற பேருண்மையை நாம் அறியுந்தோறும் வியப்பே மேலிடுகின்றது.

அந்த இசையைக் கேட்கும்போது நமது உள்ளத்திலே உவகை அலை எழும்புகிறது. பண்டு தொட்டு இன்று வரை, கற்களைச் செதுக்கிச் சிற்பங்கள் பற்பல பொற்புடன் வடித்திடவல்ல கல் தச்சர்களைத் தமிழ் நாடுபோல் பிற நாடுகள் கண்டதேயில்லை என்பர். அதே சிற்பிகள் கல்லையும் இசை பாடச் செய்ய முடியும் என்ற உண்மையினைச் சிற்சிலகோவில்களில் மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர்.



குமரி மாவட்டத்தில், கன்னியாகுமரிக்கு மிக அண்மையிலுள்ள சுசீந்திரம் கோயிலுக்குள்ளே செல்வோர் அங்குச் சிற்பி சமைத்த பதுமைகளைத் தவிர, இசை எழுப்பும் இரு வேறு கல் தூண்களையும் காண இயலும். மெல்லிய சிறு சிறு தூண் பகுதிகளைத் தட்டினுல் ‘ சலதரங்கம் ’ வாசிப்பது போன்ற பிரமை ஏற்படுகின்றது.

இதில் தேர்ச்சியும், பயிற்சியும் பெற்ற சிலர் இந்தக் கல்லிலே இசை எழுப்பிக் காட்டும் பணியினை மிகச் சிறப்பாகச் செய்து காட்டுகின்றனர். சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலுக்குச் செல்வோர்க்குக் கண்ணுக்கு மட்டுமின்றிச் செவிக்கும் விருந்து கிடைக்கும் அரும் வாய்ப்பு உண்டு.

கல்லினை இசைத்துக் காட்டுகிறார் ஒரு ல்லவர்.




யுனைடெட் இந்தியா ரோலர் ‘ப்ளவர்’ மில்ஸ் பிரைவேட் லிமிடெட்

1/4 சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை—81.

உயர்ந்த தரமுள்ள
“ கோபுரம் ” மார்க் மைதா, சூஜி
மற்றும்
“ கப்பல் ” மார்க் ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670—52671—52672—52673

தந்தி : MONARCH




SARATH

நம் நாட்டு மக்கள் உணவு முறையில் சேர்த்துக் கொள்ளும் காய்கனிகளுக்கும் ஏனைய நாட்டினர் உணவுகளில் சேர்த்துக் கொள்ளும் காய்கனிகளுக்கும் இடையே பெரும் வேறுபாடு உண்டு. அண்மையில் அமெரிக்க நாட்டிலிருந்து வெளிவரும் ஏடு ஒன்று இந்த விவரத்தைப் புள்ளி விவரங்களுடன் விளக்கி உள்ளது.

நம் மக்கள் காய்கறிகளையோ கனிவகைகளையோ பெருமளவில் உட்கொள்ளாததற்கு நமது நாட்டுப் பொருளாதாரச் சூழ்நிலையும் ஒருகாரணம் என்றாலும், சில, பழைய பழக்க வழக்கங்களும் காரணமாகும். அதனால், நம் நாட்டில் காய்கறிகளை அதிகமாக உட்கொள்ளும் பழக்கம் கிடையாது என்று உறுதியாகச் சொல்லவும் முடியாது.

அறியாமையோடு கலந்த சில பழக்க வழக்கங்கள்தான் இதற்குக் காரணம்.

நம் நாட்டில், வழக்கத்தில் உள்ள சில காய்கறிச் சமையல் முறைகளைப் பாருங்கள்; எவ்வளவு காய்கறிகளைச் சேர்த்துக் கொள்கிறோம் என்பது விளங்கும்.

மகாராட்டிரம், குசராத் மாநிலங்களில் வழங்கும் சமையல் முறைகளில் ஒன்று 'ஊந்தியூ' என்பது.






## ஊந்தியூ தயாரிக்கும் முறை

### தேவையான பொருள்கள்.

சேப்பங் கிழங்கு—115 கிராம்.
உருளைக் கிழங்கு—240 கிராம்.
சர்க்கரை வள்ளிக்கிழங்கு—225 கிராம்.

சின்னக் கத்தரிக்காய்—225 கிராம்.

வாழைக்காய்—3

வெந்தயக் கீரை—1 கொத்து.

இரட்டை பீன்ஸ்—115 கிராம்.

பீன்ஸ்—115 கிராம்.

மாவு—115 கிராம்.

மிளகாய்ப் பொடி—2 தேக்கரண்டி.

மஞ்சள் பொடி $\frac{1}{2}$— தேக்கரண்டி.

சோடா-பை-கார்பனேட்—1 சிட்டிகை.

சர்க்கரை—2 தேக்கரண்டி.

எலுமிச்சம்பழம்—1

தேங்காய்—115 கிராம் ($\frac{1}{2}$ மூடி)

கொத்தமல்லித்தழை—1 கொத்து
பூண்டு—30 கிராம்,

பச்சை மிளகாய்—5 லிருந்து 10 கிராம்.

இஞ்சி—சிறிதளவு.

பெருங்காயம்— $\frac{1}{4}$ தேக்கரண்டி.

நல்லெண்ணெய்—120 மி.லி.

### செய் முறை.

(1) சேப்பங்கிழங்கு, உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு இவைகளைத் தோலைச் சீவவும்.

(2) சேப்பங் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு இவை இரண்டையும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

(3) கத்தரிக்காயின் காம்புகளை வெட்டவும்; வாழைக்காயைத் தோல் சீவாமல் இரண்டாக வெட்டிக் கொள்ளவும்.

(4) உருளைக் கிழங்கு, கத்தரிக்காய், வாழைக்காயைச் சீவிக் கொள்ளவும்.

(5) வெந்தயக் கீரையைக் கழுவி, உப்புத் தெளிக்கவும்.

(6) உப்பு, ஒரு சிட்டிகை மஞ்சள் பொடி, கொஞ்சம் எண்ணெய், வெந்தயக் கீரை, மாவை, ஒன்றாகச் சேர்க்கவும்.

(7) கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரைச் சேர்த்துக் குழம்பாக்கிக் கொள்ளவும்.

(8) துருவிய தேங்காய், கொத்தமல்லித் தழை, பூண்டு, இஞ்சி, பச்சைமிளகாய், சர்க்கரை சோடா-பை-கார்பனேட்டு, பெருங்காயம், இவைகளைப் போட்டு நன்றாகக் கலக்கவும்.

(9) மூன்று பாகமாகப் பிரிக்கவும், கத்தரிக்காய் உருளைக் கிழங்கு, வாழைக்காய் இவைகளை இரண்டு பாகமாகப் பிரித்துக் கொள்ளவும்.

(10) சேப்பங்கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு இவைகளை மீதியிருக்கும் பாகத்துடன் கலக்கவும்.

(11) எண்ணெய்யைச் சூடாக்கிக் கொள்ளவும்.

(12) சூடானவுடன், மசாலாவை வதக்கவும்.

(13) 30 மி. லி. தண்ணீரைக் கொதிக்கவிட்டு, இரட்டை பீன்ஸ், பீன்ஸ், ஒரு சிட்டிகை சோடா போட்டு வேக வைக்கவும்.

(14) கத்தரிக்காயை வேக வைக்கவும்.

(15) எல்லாக் காய்கறிகளையும் நன்ருகக் கலந்து வேக வைக்கவும்.

சுவையாக உள்ள இந்த ‘ஊந்தியூ’வை எட்டுப் பேர் சாப்பிடலாம்.

### காய்கறிக் கிச்சடி.

**தேவையான பொருள்கள்.**

அரிசி—225 கிராம்.
துவரம்பருப்பு—55 கிராம்.
கடலைப் பருப்பு—55 கிராம்.
பயத்தம் பருப்பு—55 கிராம்.
மசூர் பருப்பு—55 கிராம்.
கக்கரி விதை—55 கிராம்.
தக்காளி—115 கிராம்.
உருளைக் கிழங்கு—115கிராம்.
சர்க்கரை வள்ளிக் கிழங்கு—115 கிராம்.
வெண்டைக்காய்—115 கிராம்.
கேரட்—115 கிராம்.
வெங்காயம்—225 கிராம்.
உப்பு—சுவைக்கு ஏற்றபடி.
மஞ்சள் பொடி—1 தேக்கரண்டி.
கொத்தமல்லி, சீரகப்பொடி—1 தேக்கரண்டி.
சீரகம்—$\frac{1}{2}$ தேக்கரண்டி.
பச்சைமிளகாய்—5
கொத்தமல்லித் தழை—சிறிதளவு
இஞ்சி—1 துண்டு.
பூண்டு—சில.
லவங்கப்பட்டை—1 துண்டு.
கிராம்பு—10
மிளகு—10
தேங்காய்—பாதி மூடி.
நெய்—115 கிராம்.

**செய்முறை.**

(1) பருப்புக்களையெல்லாம் முதல் நாள் இரவு ஊற வைக்கவும். அரிசியைக் கழுவி, ஊற வைக்கவும்.

(2) சர்க்கரைவள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு, கேரட் முதலிய கக்கரிக் காய்களை நறுக்கவும்.

(3) தக்காளி வெண்டைக் காய்களை நறுக்கவும்.

(4) வெங்காயத்தை உரிக்கவும். கிராம்பு, மிளகு, லவங்கப்பட்டையை நசுக்கிக் கொள்ளவும்.

(5) இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய், கொத்தமல்லித் தழையை நறுக்கிக் கொள்ளவும்.

(6) தேங்காயைத் துருவி, கொஞ்சம் தனியாக வைத்து மீதியைப் பால் பிழிந்து கொள்ளவும்.

(7) நெய்யைச் சூடாக்கிக் காய் கறிகளை வதக்கவும். உப்புத் தண்ணீரைத் தெளிக்கவும்.

(8) துவரம் பருப்பையும், பயத்தம் பருப்பையும் வேக வைக்கவும். பிறகு பயத்தம் பருப்பு, மசூர் பருப்பைக் கலக்கவும்.

(9) வெங்காயத்தை வதக்கவும்; சீரகப் பொடி, மசாலா, துருவிய தேங்காய், இவைகளைப்போடவும் பொன் நிறமானவுடன் மஞ்சள் பொடி, கொத்தமல்லிப் பொடி உப்பைப் போடவும்.

(10) பருப்பு, அரிசி, தேங்காய்ப் பால் வதக்கிய வெங்காயம் இவைகளைப் போட்டுப் போதுமான தண்ணீரை விடவும்.

(11) பாதி வேகும்போது காய் கறிகளைப் போடவும்.

(12) அரிசியில் காய்கறிகள் வெந்ததும், கெட்டியானவுடன் சாப்பிடவும், மிகச் சுவையாக இருக்கும்!

—அஞ்சனா

## உங்களுக்குத் தெரியுமா?

### பத்து ரூபாய் நாணயம்

உணவு வேளாண்மைக் கழகத்தின் ( Food and Agriculture Organisation ) ஆண்டு விழாவை முன்னிட்டு, இந்திய அரசு அக்டோபர் மாதம் 16-ந் தேதியன்று, சிறப்பு நினைவுச் சின்னமாக புதிய பத்து ரூபாய் நாணயம் ஒன்றினை வெளியிட்டு உள்ளது.

இந்த நாணயத்தின் முன் பக்கத்தில் அசோக தூணின் உருவமும், பின் பக்கத்தின் நடுவில் நன்கு மலர்ந்த தாமரை, அதன் உச்சியில் உதய சூரியன், இரு பக்கங்களிலும் தானியக் கதிர்கள் ஆகிய உருவங்களும் பொறிக்கப்பட்டு இருக்கின்றன.

### புதிய கேழ்வரகு

புரதச் சத்து மிக்க புதிய கேழ்வரகு கோயம்புத்தூரில் உள்ள வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப் பட்டு, சென்ற ஆண்டில் வெளியிடப்பட்டது. இதன் பெயர் கோ-9 கேழ்வரகு (ராகி).

இப்புதிய கேழ்வரகின் தானியம் வெண்மை நிறமானது. இதில் 11·8 சதம் புரதச் சத்து உள்ளது. இப் புரதச் சத்து ஏறத்தாழ கோதுமையில் உள்ள சத்திற்குச் சமமாகும்.

தானியம் வெண்மையாய் இருப்பதால், இதிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள், பசியைத் தூண்டுவதாக உள்ளது.

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்றார் செவ்விய அறிவுச் செந்நாப் போதார். ஐம்பொறிகளுள் 'செவிக்கே' மிகுந்த சிறப்புண்டு. கண்ணால் காணப்படுவனவற்றைக் 'கண் செல்வம்' என்றோ, மூக்கால் முகரப்படுவனவற்றை 'மூக்குச்செல்வம்' என்றோ, வாயால் உண்ணப்படுவனவற்றை 'வாய்ச் செல்வம்' என்றோ, உடலால் தீண்டி உணரப் படுவனவற்றை 'உடற் செல்வம்' என்றோ எவரும் இயம்பியதில்லை; இயம்புவதும் ஏற்புடையதன்று. ஆயின் மன வளத்தையும், நலத்தையும் பெருக்கிப் பேணும் பெற்றி படைத்த செவியால் பெறும் கேள்வியோ செல்வமாகின்றது. 'செல்வம்' என்றவுடன் பெறுவதில் ஆர்வமும் பேணிக் கொள்வதில் விருப்பமும் எழும் என்பதனால், திருவள்ளுவர், கேள்வியைச் 'செவிச் செல்வம்' என்று பாராட்டி, மக்களை அதனைப் பெறுமாறு ஊக்கப்படுத்துகின்றார். புற வாழ்க்கைக்குரிய பிற செல்வங்களினும் அக வாழ்க்கைக் குரியதாகிப் புற வாழ்வையும் உயர்த்தும் செல்வம் சிறந்ததாகலான் அத்தகைய கேள்வியைச் செல்வங்களில் எல்லாம் சிறப்புடைய செல்வம் என்று திருவள்ளுவர் உயர்த்துகின்றார்.

"எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"

கேட்பதன் மூலம் பெறத்தக்க அறிவைத் தக்க முறையில் தேடிப் பெற்றால், பயனுள்ள நன்மையடைய முடியு மென்பது, பட்டறிவு தருகின்ற படிப்பு. நம் நாட்டில் பல முக்கியமான செய்திகள், செவி வழியாகவே பரவி வந்துள்ளன. வாழையடி வாழையாக வந்த இந்தப் பழக்கம், அறிவியல் ஊழியான இக் காலத்தில், சமுதாய வளர்ச்சிக்கான வகையில் மிகத் திறம்பட வளர்ந்துள்ளது. "காசிநகர்ப் புலவர் பேசுமுரை தான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" எனக் கவித் தேர்ச் சாரதி பாரதி எதிர்கால ஆக்கத்திற்கு உரிய கருத்தைத் தன் பாட்டுத்தொடரில் பதித்துச்







சென்றுள்ளார். இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பிறகு நினைத்தபோது எங்கும் நிறையும் வானொலியின் பெரும் பேராற்றலை, பொழுது போக்குக்காக மட்டுமல்லாமல், சமுதாய வளர்ச்சிக்கான அடிப்படைக் கல்வி வளர்ச்சியைக் கொடுக்கும் கருவியாகவும் பயன் படுத்துவதில் விரைவும், வேகமும் காட்டப் பட்டன.

கானடா, ஆத்திரேலியா போன்ற நாடுகளில், வானொலி கேட்கும் குழுக்கள், ஊர் மக்களுக்குப் பல அரிய காரியங்களைச் சாதிப்பதற்கு உறு துணையாக இருந்து வருகிறதென்பதை அறிந்து, ஆராய்ந்த ஐக்கியநாடுகளின் கல்வி சமூக, கலாச்சார நிறுவனம், இத்தகைய மன்றங்களை, உழவர்கள் நிறைந்த இதர நாடுகளுக்கும் பரப்பி, அதன் மூலம் பயனடையச் செய்ய வேண்டுமென நினைத்துச் செயல் படுத்த முனைந்தது.

அதன் படி, 1956-ஆம் ஆண்டு இந்தியாவில், 150 ஊர் வானொலி மன்றங்கள் முன்னோடியாகத் தொடங்கப்பட்டன. அந்த மன்றங்கள் செயற்பட்ட முறையும், அவற்றால் அடையும் பயனும், மக்களின் கருத்துக்களும், பிரச்சினைகளும் ஆய்வு செய்யப் பட்டன.

வேளாண்பெருமக்கள் தோற்றுவிக்கும் பசுமைப் புரட்சி, இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பெருகிவரும் மக்கள் தொகைக்குப் பகிர்ந்தளிக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும். இத்தகு நோக்கங்களை நிறைவேற்றப் புது உழவுக் கருவிகள் வேண்டும். ஆராய்ச்சிப் பண்ணைகளில் உருவாக்கப்படும் மிகு விளைச்சல் தரும் வீரிய வித்துக்கள் வேண்டும். இவற்றோடு தொழில் நுட்ப அறிவும் தேவை. இத்தகைய தொழில் வளர்ச்சிக்கான செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள வகைசெய்யும் அமைப்பு முறையே கிராம வானொலி மன்றங்களாகும்.

மன்றங்களுக்கென ஒலிபரப்பப் படும் நிகழ்ச்சிகளைக் கேட்கவும், அறிவு வளர்ச்சிக்கான கருத்துக்களையும், பயனுள்ள செய்திகளையும் அவ்வப்போது அறியவும் அறிந்தவற்றைத் தமக்குள் விவாதிக்கவும், எழும் ஐயப்பாடுகளைக் கேள்விகளாகக் கேட்டுப் பதில் அறிந்து, பயனுள்ளவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்து பலன் காணவும், வேளாண்பெருமக்களும், உழவுத் தொழிலுக்குப்பின் நிற்கும் பிறதொழில் செய்பவர்

களுமான, 20 உறுப்பினர்களைக் கொண்ட குழுவே ஊர் வானொலி மன்றமாகும்.

முன்னோடியாகத் தொடங்கப்பட்ட ஊர் வானொலி மன்றங்களைப் பற்றிய ஆய்வுகள் நற்பயனளிப்பவையாக இருக்கவே 1959-ஆம் ஆண்டு நாடெங்கும் ஊர் வானொலி மன்றங்களை அமைத்துச் செயல்படுத்தும் பொறுப்பு, மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. வளம் மிக்க வேளாண்மைக் கருத்துக்களை ''வானொலி மூலம் கேளாத செவியென்ன செவியோ'' என்று கருதும் அளவுக்கு வளர்ந்துள்ளசெவி வழி அறிவைப் பரப்ப, தமிழக அரசு, வானொலி மன்றங்களை அமைப்பதற்கெனவே எல்லா ஊராட்சிகளுக்கும், உட் கடை ஊர்களுக்கும் வானொலிப் பெட்டிகளை வழங்கியிருப்பதில், அனைத்திந்தியாவிலேயே முன்னணியில் நிற்கிறது. வட்டார அளவில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வானொலி மன்றங்களை அமைப்பதற்கான பொறுப்பாளர்களாவார்கள்.

அரசின் பல்வேறு துறைகளின் அலுவலர்களையும் அரசுச் சார்பற்றவர்களையும் கொண்ட குழுவின் கருத்துரைக் கேற்ப, ஊர் வானொலி மன்றங்களுக்கான நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டு, ஒலிபரப்பப்படுகின்றன.

1962-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில், ஊர் வானொலி மன்ற அமைப்பாளர்க்கெனப் பயிற்சி கொடுக்கப்பட்டது. 1964-ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் நடந்த ஊர் வானொலி மன்றக் கருத்தரங்கில், மன்ற அமைப்பாளர்கள், தலைவர்கள், மன்றங்களுடன் தொடர்பு கொண்ட அரசு அலுவலர்கள், வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் தீர்மானித்தபடி, மன்றங்களின் வளர்ச்சிக்கான பல பயனுள்ள கருத்துக்கள் மேற்கொள்ளப்பட்டன.

1964-ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய வானொலி நிலைய நிர்வாகிகள் மாநாட்டில் இயக்குநர் தலைவர் திரு பி. பி. பட், ஊராட்சிகளில் வானொலி மன்றங்களை அமைப்பதில், தமிழ் நாடு சிறப்பாகப் பணியாற்றி வருகிற தென்பதைக் குறிப்பிட்டார்.


**தமிழரசு**

**சந்தா**

ஓர் ஆண்டு.... ரூ. 8.00

அரை ஆண்டு... ரூ. 4.00

தனிப்பிரதி... 35 காசுகள்

விவரங்களுக்கு:

இயக்குநர்,

செய்தி, விளம்பரத்துறை,

தமிழ் நாடு அரசு — சென்னை-9


ஊர் வானொலி மன்றங்கள் பெறும் வெற்றியைத் தொடர்ந்து உடனுக்குடன் உழவுச் செய்திகளை வழங்குவதற்கெனவே, அனைத்திந்திய அடிப்படையில் வானொலி நிலையங்களில் தீவிர விவசாய ஒலி பரப்புத் திட்டம், 'பண்ணையும் இல்லமும்' என்ற பெயரில் 1966-ஆம் ஆண்டு முதல் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 500 ஊர் வானொலி மன்றங்களைத் தொடங்குவதெனக் குறி எல்லை உறுதி செய்யப்பட்டது.

1967-ஆம் ஆண்டு முதலாக, ஊர் வானொலிமன்றங்களிடையே புதியதொரு மலர்ச்சியை ஏற்படுத்துவதில் தீவிரக் கவனம் செலுத்தப்பட்டது. அவ்வாண்டு முதல் வானொலி மன்றங்களின் ஆண்டு விழாவும், அதனையொட்டிய கருத்தரங்கும் நடத்தப்பட்டு, மாவட்ட அளவில் நற்பணியாற்றும் முதன்மையான ஊர் வானொலி மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வானொலிப் பெட்டிகள் பரிசளிக்கும் திட்டம் தொடங்கப் பெற்றது.

1967-ஆம்ஆண்டில் திருச்சிராப்பள்ளியிலும், 1968-ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சூலூரிலும், 1969-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியிலும், கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட வானொலிமன்றங்களுக்குப் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. தொடர்ச்சியான முயற்சிகள் வானொலி மன்றங்களிடையே ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தோற்றுவித்துள்ளன.

தமிழகத்தில் பசுமைப் புரட்சிக்கு அடிகோலிய, எ.எஸ்.டி. 5 ஏ.டி.டி. 27, ஐ.ஆர். 8, கருணை போன்ற பொறுக்கு விதை நெல் ரகங்கள் எங்கும் பரவி, மிகு விளைச்சல் பெற்றுள்ளதற்கு, வானொலிமன்றங்களின் வாயிலாக ஒலிபரப்பப்பட்ட வேளாண்மைச் செய்திகளே அடிப்படையாகும். ஊர் வானொலி மன்றங்கள், உழவர் பெருமக்களுக்கான கல்வி நிலையங்களாக இயங்கி, உழவுத் தொழிலுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் ஊட்டுவதில்உற்ற துணையாகப் பயன்படுகின்றன. மன்றங்களின் வளர்ச்சி பெருகி வருவதே இதற்குத் தக்க சான்றாகும்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் குறிப்புகளின்படி, தமிழகத்தில், ஏறத் தாழ 15,000 ஊர் வானொலி மன்றங்கள் இயங்குவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில், மாலையில் 7-30 முதல் 8 மணி வரை ஒலிபரப்பப்படும் மன்ற நிகழ்ச்சிகளில், உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், மற்றவர்களும், ஆர்வத்துடன் கலந்து கொள்வதைக் காணமுடிகிறது. ஊர் வளர்ச்சிக்கெனச் செயல்படும், அரசின் பல் வேறு துறைகளின் வல்லுநர்களுக்கும், மக்களுக்கு மிடையே தொடர்ச்சியானதோர் உயிர் இணைப்பை வானொலி மன்றங்கள் ஏற்படுத்துகின்றன.

எனவே, ஊர் வானொலி மன்றங்களை, ஊர்கள் தோறும் தொடங்குவதும், நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கேட்கச் செய்வதும், நமது எதிர்காலத்தை வளப்படுத்துவதாகும்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பசுமைப் புரட்சி மேலும், வளமுடையதாக அமைய 'வானொலி' பயனுள்ள சாதனமாகும். வாழ்வு தரும் உழவு செழிக்கும் வகையில் வானொலி மன்றங்கள் வளர்வதாகுக !

'' வானொலியின் வாரா நன்மைகள் உளவோ ?''.

# பிச்சைகள் பலவிதம்



டக், டக், டக் என்று எனது அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. தேர்வுக்கு மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்த நேரம். 'யார்' என்றேன். வெண்கலச் சிரிப்பொலியே வெளியிலிருந்து கேட்டது ; மீண்டும் 'யார்' என்றேன். டக், டக், டக்! இதுதான் பதில். பொறுமை இழந்த நான் படாரெனக் கதவைத் திறந்தேன். இருபது இருபத்திரண்டு வயது இருக்கும் ; இள வயது மங்கை ; தலையிலே முக்காடு ; முகத்தில் முறுவல் ; ஒரு கணம் திகைத்தேன். என் உடல் பின் வாங்கியது ; அனுமதியின்றியே அவள் என் அறையினுள் நுழைந்து விட்டாள் ; கண்ணாடி வளைக்கரத்தை நீட்டிப் 'பைசா பைசா' என்றாள். பேசியதோ எனக்குப் புரியாத இந்தி மொழி ; மிரள மிரள விழித்தேன். பக்கத்தறைத் தோழர்கள், நாங்கள் இருவரும் நிற்கும் கோலம் கண்டால் என்ன நினைத்துவிடுவார்களோ, என்ற வெட்கம் ; அச்சம். 25 காசுகளைக் கரங்கள் நடுங்கக் கொடுத்தேன். அவள் நகர்வதாகக் காணோம். என் சட்டையைப் பிடிக்கும் அளவுக்கு நெருங்கி விட்டாள். மேலும் 25 காசு கொடுத்து எப்படியோ அவளை வெளியேற்றி விட்டேன் ; பிச்சை எடுக்கும் முறைகளிலே இதுவும் ஒன்று போலும் ; அதிகாரப் பிச்சை !

ஆண்டுகள் சில கடந்து சென்னைக்கு வந்தேன். புரசை உந்து வண்டி நிலையத்தில் 22-ஆம் எண்ணுள்ள வண்டிக்காகக் காத்திருந்தேன். நிறை மாதக் கர்ப்பிணி ஒருத்தி ; அவளோடு ஒரு மூதாட்டி ; 'ஐயா பிள்ளைப் பேறு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் ; புண்ணியம் உனக்குண்டு' என்ற பல்லவி. ஏதாவது தாருங்கள் என்ற அனுபல்லவி. அவளுடைய நிலை நோக்கப் பரிதாபமாக இருந்தது. நம் சகோதரிகளுக்கு இந்த மாதிரி நிலை ஏற்பட்டால்? என் சிந்தனை எப்படி எல்லாமோ குழம்பியது ; வண்டி வந்தது ; ஏறுங்கள் என்றேன். அவர்களுக்கும் சேர்த்து டிக்கட்டு எடுத்தேன். ஆனால் எழும்பூர் நிலையம் வந்ததும் முகத்தைச் சுளித்துக் கொண்டு அக்கர்ப்பிணி தன் சகாவோடு இறங்கி விட்டாள் ; என்ன காரணமென எனக்குத் தெரியவில்லை ; மறுநாளும் அவர்களை அதே நிலையில் கர்ப்பிணியின் வயிற்றைக் காட்டி, கையை நீட்டிப் பல்லைக்காட்டிக் காசு கேட்கும் காட்சியைக் கண்டேன். இதுவும் ஒரு வகைப் பிச்சை. ஏமாற்றுப் பிச்சை !

மாலை நேரம்; மவுண்டு ரோட்டிலே நடந்து கொண்டிருந்தேன். சுமார் நாற்பது வயதுடைய ஒரு ஆங்கிலோ இந்தியர் ; ஐரோப்பிய பாணியிலே உடை ; காலில் பூட்ஸ், தலையில் தொப்பி; ஆனால் அனைத்தும் அழுக்கடைந்தவை; கையிலே சுமார் மூன்று வயதுக் குழந்தை ஒன்று ; சிவந்த நிறம் ; செம்பட்டை மயிர் ; அக்குழந்தையைக் காட்டித், 'தாயில்லை' என்று சொல்லிப் பிச்சை கேட்டார். பார்க்கப் பரிதாபமாகத் தான் இருந்தது ; வாழ்ந்து கெட்டவர் போன்ற தோற்றம். 50 காசு கொடுத்தேன்; கனிந்து நன்றி செலுத்தினார். மறுநாளும் அவரை அங்கே காண நேர்ந்தது. பஸ் வர நேரமாயிற்று ; என்னிடத்தே தம் வாழ்க்கை நிலை பற்றிச் சொன்னார். ''ரயில்வே அச்சகத்தே மெஷின்மேன் வேலை பார்த்தேன் ; வேலை போயிற்று; வேலை கிடைத்தால் பிச்சை எடுப்பதை விட்டுவிடுவேன்'' என்றார்; எனக்கோ இரக்கம் தோன்றியது. என் நண்பர் ஒருவரின் அச்சக முகவரியைக் கொடுத்து அங்கே வருமாறு சொன்னேன் ; ஒரு ரூபாய் வேண்டும், வண்டிச் செலவுக்கென்றார் ; கொடுத்தேன் ; பின்னர் ஆறுமாதங்கள் வரை அவரைச் சந்திக்கவில்லை ; ஒரு நாள் அவரை மீண்டும் காண நேர்ந்தது; கையிலே குழந்தை இல்லை ; '' என்ன ? அச்சக வேலைக்கு ஏன் வரவில்லை'' என்றேன். 'எனக்கேன் அந்த வேலை' என இகழ்ச்சியாக ஆங்கிலத்திலே சொன்னார்; இந்தப் பிச்சைக் காரரைத் திருத்த முடியுமா? இது சோம்பற் பிச்சை!

புரட்டாசி மாதச் சனிக்கிழமைகளிலே, ஆடி மாத வெள்ளிக்கிழமைகளிலே, கிருத்திகை போன்ற தினங்களிலே, பித்தளைப் பாத்திரத்தைப் பொன் போலத் துலக்கி மஞ்சள் குங்குமம் பொட்டு வைத்து 'கோவிந்தா, கோவிந்தா' என்றும், மாரியம்மனுக்குக் காணிக்கை என்றும் ஒரு கூட்டம் புறப்பட்டு வரக் காண்கிறோம்.



குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள்: 26762 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

கடவுள் பெயரைச் சொல்லிக் கேட்கும் பிச்சை இது; தில்லை யம்பலவனையே பிச்சாண்டியாகத் தத்துவ ஞானிகள் கண்டதன் உண்மை தெரிந்தவர்களோ இவர்கள்! ஆலயங்களின் வாசலிலே குளக்கரைகளிலே, பள்ளிகளின் முன்னிலையிலே, மாதாகோவில் வீதிகளிலே இவ்வாறு பலவகைப் பிச்சைக்காரர்களைப் பார்க்கிறோம்.

'ஈயெனஇரத்தல் இழிந்தன்று' என்பது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழன் கண்ட தலையாய பண்பு; 'நாவிற்கு இரவின் இளிவந்ததில்' என்றார் வள்ளுவர். ஆனால் இன்றுவரை இரப்பவர் பெருகி வருவதையே காண்கிறோம். ஈவாரும் ஏற்பாரும் இல்லாச் சமுதாயத்தைக் கம்பன் காவியத்திலே தான் காண்கிறோம். 'ஏற்பது இகழ்ச்சி' எனப் பிள்ளைப் பருவத்திலேயே உள்ளத்தில் பதிய, ஔவைப் பிராட்டி கூறினாள். எனினும் சூழ்நிலை காரணமாகவோ, சோம்பல் காரணமாகவோ, பிச்சைக்காரர்கள் நாள்தோறும் பெருகியே வருகிறார்கள்.

பிச்சை எடுத்தல் ஒரு பெரிய தொழில்போல வளர்ந்து வருகிறது. பிச்சைக்காரர்களை நல்ல உடல் வளம் படைத்தவர்கள், நோயாளிகள், அதையே தொழிலாகக் கொண்டவர்கள் என மூவகையாகப் பிரிக்கலாம். நோயாளிகளில் பலரும் தொழுநோயாளர்கள். முடவர், குருடர் போன்ற அங்க ஈனர்களும் இக் கூட்டத்திலே உண்டு.

வருந்திப் பொருள் தேடுவதை விட இதில் வசதியாகப் பொருள் தேடுபவர் பலர்; பம்பாய் நகரத்திலே நாளொன்றுக்கு ரூபாய் இருபதுவரை பிச்சைக்காரர்கள் சம்பாதிக்கிறார்கள் என ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. உத்திரப்பிரதேசத்திலே, இறந்த ஒரு பிச்சைக்காரனிடம் ரூபாய் 2,000 வரை இருந்ததாகப் பத்திரிகைச் செய்தி படித்திருக்கிறேன். பாங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் பிச்சைக்காரர்களும் இருக்கிறார்களாம்.

சென்னை நகரைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய பத்தாயிரம் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்களைக் குறைக்க அல்லது ஒழிக்க அரசாங்கம் பல வழிகளில் பாடுபட்டு வருகிறது. இவர்களுக்கென ஆவடியிலே மேல்பாக்க விடுதி ஒன்று இருக்கிறது. மாநகராட்சி மன்றம் பிச்சைக்காரர்களுக்காக இராயப்பேட்டையில் ஒரு விடுதியை நடத்தி வருகிறது. இவை தவிர மார்வாரிகள் சங்கத்தின் ஆதரவில் ஓட்டேரியில் 'தயா சதன்' என்ற விடுதியும் நடைபெற்று வருகிறது. ஆவடி விடுதியில் ஏறக்குறைய 900 பிச்சைக்காரர்களும், இராயப்பேட்டை விடுதியில் 600 பேரும், தயா சதனில் சுமார் 500 பேரும் தங்கி வருகின்றனர். இந்த விடுதிகளில் அவர் தம் வாழ்வு மலர்ச்சி அடைய, மானத்துடன் சமூகத்தில் வாழப் பல தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் வேலை, பாய் முடைதல், தச்சு வேலை போன்ற கைத்தொழில்கள் இவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. இரத்தலின் இழிவும், மானத்தோடு வாழ்தலின் சிறப்பும் இவர்கட்கு நல்ல முறையில் எடுத்துக் கூறப்படுகின்றன.

அரசினரும், இந்தச் சமுதாயத்திலே அனுதாபம் உள்ளவரும் பிச்சைக்கார இனத்தையே மாற்றி அமைக்கப்பல துறைகளில் பாடுபடுகின்றனர். பிச்சைக்காரர்களை வண்டிகளிலே ஏற்றி அவ்வப்போது இந்த நிலையங்களில் காவல் துறையினர் கொண்டு வந்து சேர்ப்பதைக் காண்கிறோம். ஆயினும் ஊரைச் சுற்றிச் சோம்பேறி வாழ்வை நடத்தி வந்த பிச்சைக்காரர்கள் பலரும் இவ் விடுதிகளில் தங்க மனமின்றி ஓடிச் சென்று விடுகின்றனர். இது மிகவும் வருந்தத்தக்கதல்லவா?

நமது இரக்க உள்ளம் பிச்சைக்காரர்கள் பெருக ஓரளவு தூண்டுகோலாய் இருப்பது உண்மை! காணும் பிச்சைக்காரர்கட்கெல்லாம் காசு வழங்குவது தவறு; பிச்சைக்காரர்கள் புனர் வாழ்வு விடுதிகளுக்கு நாம் பொருளை வழங்கலாம். அவர்கட்கு உடை, உணவு வகைகளை அனுப்பலாம்; வாரத்தில் ஒருநாளோ மாதத்தில் ஒரு நாளோ அவரவர் வசதிப்படி உணவு முதலியன வழங்கலாம்.

இந்த விடுதிகள் அவற்றை ஏற்றுச் செம்மையான முறையில் அவர்கட்கு உதவி வருகின்றன. தனிப்பட்ட பிச்சைக்காரர்கள் பாதையோரங்களிலும், கோவில் குளக்கரைகளிலும் வளர்ந்து சூழ்நிலையைப் பாழாக்குவதற்கு நம் தரும சிந்தனையைச் செலுத்தாமல்அவர்கட்குப் புதுவாழ்வளிக்க முயலும் இந்த நிலையங்கட்குப் பொன்னாலும் ஏனைய பொருள்களாலும் உதவுவதே நாம் உண்மையாகச் செய்யும் அறன்; அறவுளத்தைக் கால நிலைக்கு ஏற்றபடி மாற்றிப் பயன்படுத்தலே அறிவுடைமையாகும். நமது அரசு நல்ல முறையில் விடுதி அமைத்துப் பிச்சைக்காரர்களுக்கு நல்வாழ்வு காட்ட முயலும் போது நாம் தனிப்பட்ட முறையில் பிச்சைக்காரர்கள் வளரத் தருமம் செய்து, சமூகத்திலே நோயும், சோம்பலும், ஒழுக்க வீனங்களும் வளர வழி வகுப்பது சமூகத்திற்குச் செய்யும் தீமையே தவிர அது ஒருநாளும் தருமமாகாது.

**கண் காட்சி!**

பொருட் காட்சிகளைக் கண்காட்சி என்று குறிப்பிட்டாலும், உண்மையான கண் காட்சி உள்ள இடம் எழும்பூர் கண் மருத்துவமனை தான்! சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் துவக்கப்பட்ட இந்தக் கண் காட்சி (கண் மியூசியம்) மிகச் சிறந்த கண்காட்சிகளில் ஒன்றாகும்.

பல்வேறு நோய்களினால், பாதிக்கப்பட்ட கண்கள், கண் ஓவியங்கள் முதலியன தகுந்த குறிப்புகளுடன் அங்கு வைக்கப்பட்டுள்ளன.

மார்போடு மார்பாக ஒட்டிக்கொண்டு பிறந்த இரட்டைக் குழந்தை ஒன்றுக்கு நெற்றியில் கூட்டல் அடையாளம் (+) போன்ற நெற்றிக்கண் உள்ளது. அதுவும் அங்கு பாதுகாக்கப்பட்டுள்ளது.

கண் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு இந்தக் கண் காட்சி மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது.




# எல்லோரும் விரும்புவது, மேன்மையானது, முதன்மையானது

அசோக் லேலண்ட் காமெட்...பயணிகள் போக்குவரத்திற்கு. இந்தியா முழுவதும் அரசினர் போக்குவரத்து நிர்வாகங்கள், மற்ற போக்குவரத்து நிர்வாக உரிமையாளர்கள் விரும்பித் தேர்ந்தெடுப்பது.

**சிறப்பான காரணங்கள்**

அடிக்கடி நிறுத்திச் செல்வதாயிருந்தாலும் நெடுந்தூரம் செல்வதாயிருந்தாலும், ஏற்படும் பளுவைச் சுலபமாக சமாளிக்கிறது.
அதன் பூரண ஏர்ப்ரேக்குகள் பத்திரமாகவும் உடனடியாகவும் நிறுத்த வகை செய்யும். பராமரிப்புச் செலவு மிக குறைவு...மாற்று உறுப்புகளின் தேவை சொற்பம்...பழுதுகள் ஏற்படுவதில்லை. எண்ணைச் செலவில் மிகச் சிக்கனம்.
இப்போது அறிவீர்கள்...அது சக்தி மிக்க, பத்திரமான வண்டி என்பதையும் அதிக பளு ஏற்றிச்செல்ல சளைக்காதது என்பதையும்.

**இதையே வாங்குங்கள். ஓர் அணியையே உருவாக்குங்கள். இதற்காக வருந்தமாட்டீர்கள்**

**வன்மை...நம்பகம்...சிக்கனம்**

**உள்ள**

# அசோக் லேலாண்ட் காமெட்

ASHOK
TRUCKS BUSES
LEYLAND

AL-5003 Rev

**தயாரிப்போர்: அசோக் லேலண்ட் லிமிடட், எண்ணூர், சென்னை 57**

# வெண்பாப் போட்டி

'தமிழரசு' துவக்கியுள்ள வெண்பாப் போட்டியில் இரண்டாயிரத்து முப்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் 'தமிழரசு' இதழின் சார்பில் நன்றி கூறிக்கொள்கிறோம்.

'நல்லரசைப் பெற்றோமே நாம்' என்ற ஈற்றடியை வைத்து எழுதப்பட்ட வெண்பாவில், திரு இறைவன் எழுதிய வெண்பா பரிசு பெறுகிறது. பரிசு பெற்ற வெண்பாவும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த நூற்றுக் கணக்கான வெண்பாக்களில் இடநெருக்கடி காரணமாகச் சில வெண்பாக்களும் இங்கே வெளியிடப்படுகின்றன.

[ ஆ-ர். ]

## 1. நல்லரசைப் பெற்றோமே நாம்

● நாதிமுறை யற்றவர்க்கு நல்லநிலந் தான்தந்து
வீதிமுறை வாழ்ந்தவர்க்கு வீடுதந்து—சாதிமுறை
இல்லாமல் செய்து தமிழ் ஏற்றமுற வைத்தஓர்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—இறைவன், **பனையபுரம்.**

வெட்டக் கனியெடுக்கும்; வேண்டுந் தொழில்வளர்க்கும்
சட்டம் ஒழுங்கமைதி தங்குவிக்கும்—முட்டின்றி
வல்லதமிழ் காக்கும்நம் வாட்டமெலாம் போக்குமொரு
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—புலவர் தா. வாசுதேவன், பி. ஏ. நயினார்பாளையம்.

பேரறிஞர் அண்ணாதான் பெற்றளித்த பேரரசைப்
பார்புகழ ஆள்கின்றார் பண்புடனே—சீர்கொண்ட
செல்வம் கொழித்திடவே சேலம் கனிகண்ட
நல்லரசைப் பெற்றோமே நாம்.

— எஸ். டி. சிவசங்கரன், கொக்கிரகுளம்.

முப்பால் வழிசென்று மூதறிஞர் நம்அண்ணன்
தப்பாது கண்டார் தமிழரசை ; —இப்பதியில்
இல்லாமை இல்லாமை ஆக்கக் கலைஞரின்கீழ்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

— ந. செனார்த்தனன், அரக்கோணம்.

அஞ்சுகத்தாய் பெற்ற அழகுதமிழ்ச் சொல்வல்லோன்
பஞ்சமதைப் போக்கவே பாடுபட்டுக்—கஞ்சமலைக்
கல்லெடுத்தான் கல்லக் குடிகொண்டான் தன்செயலால்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

— நாராயணன், கோவை-1.

தன்னாட்சி பெற்றால் தமிழ்வாழும்; நாடுயரும்
பொன்னார் தமிழர் புகழ்மேவும்—என்றாய்ந்து
தில்லி அரசோடு தீரமுடன் போராடும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

— இரா. வைத்தியநாதன், பொற்களாக்குடி.

முன்னம் தமிழாட்சி மும்மன்னர் தாமீந்தார்
பின்னும் தமிழாட்சிப் பேறுண்டோ—நன்மணஞ்சேர்
முல்லை முகிழ்த்ததுபோல் மூன்றாண்டு முன்புதான்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—சி. மு. இராசு, சீரணம்பாளையம்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் என்றுரைத்த
வள்ளுவர் சொன்ன வழிநின்றே—தொல்லுலகீர்
எல்லாரும் எந்நாடும் எம்மதமும் போற்றுகின்ற
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ப. முருகேஸ்வரி பழனிச்சாமி, திருநெல்வேலி-1.

மக்கள் குறைநீக்கி மாண்புமிக அன்பினொடு
சிக்கலின்றி நற்பணிகள் செய்வதனால்—தக்கதெனப்
பல்லரசும் பாராட்டும் பண்பார் தமிழகத்தில்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—இ. மணிவாசகம், சைதாப்பேட்டை. (வ.ஆ.)

கஞ்சமலை என்கின்ற காரிகையே ! நின்மடியில்
துஞ்சும் இரும்பைத் துயிலெழுப்பி—நெஞ்சுவக்க
வல்லமையைக் காட்ட வகைசெய்தே பாடுபடும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

— ஆரணி பாத்திமா தங்கம், ஆரணி.

தொழிலோங்கப் பஞ்சம் தொலைந்தோட நாட்டில்
எழிலோங்க எங்கும் தமிழாய்—மொழிவோங்க
வெல்லத் தமிழரினம் ; வேரறுக்க ஏழ்மையினை
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ஆ.ச. அரங்கநாதன், எம்.ஏ., பொன்மலை.

---

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்.
**(இறைவன், தேர்வீதி, பனையபுரம், முண்டியம்பாக்கம் வழி, விழுப்புரம் வட்டம்).**

நன்மை பயத்தலால்; நல்லோர் புகழ்தலால்;
வன்மை யரசாய் வளர்தலால்;—மென்பூவாம்
அல்லி மலர்போல் அழகார் தளிர்மாதே!
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—இரா. இராதாகிருட்டிணன், கீழ்விசாரம்.

படியரிசித் திட்டம் பசுமைப் புரட்சி
படிப்போ டிலவசமாம் ''பட்டா''—படிப்படியாய்
எல்லாத் துறைகளிலும் ஏற்றமொடு மாற்றஞ்செய்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—இரா. இளங்கோ, ராமாபுரம்.

பேரறிஞர் ஏற்றிவைத்த பேரொளியாம் நம்மரசு
தீராத துன்பமதைத் தீர்த்துவைக்கும்—பாரதத்தின்
வல்லமையை ஏற்றவழி கூறும் தமிழரசாம்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—அ. காந்தி, பி.எஸ்.ஸி., பி.டி., தேவத்தூர்

நெஞ்சத்தில் தைத்த நெடுவேல் பறித்தெடுத்(து)
அஞ்சப் பகைவென்ற ஆண்மையென—அஞ்சவந்து
கொல்லும் வரட்சியையும் குன்று வளமாக்கும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—புலவர் ஆ. பழனி, காரைக்குடி.

உழைப்போர் திருக்கரமாய் ஊரையே மாற்றிப்
பிழைப்போர் பகையாய்ப் பெருமை—தழைக்கின்ற
வல்ல தமிழுக்கு வான்மழையாய்த் தான்விளங்கும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—சி. முத்துச்சாமி, கா. பழையூர்.

கொற்றம் குடிதழுவக் கோலோ சமன்தூக்கச்
சுற்றமாய் மக்களெலாம் சூழ்ந்திருக்கப்—பற்றோடு
கல்வித் தரமுயரக் கன்னித் தமிழ்முழங்க
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—அ. ம. ஜார்ஜ், கோவை.

தொழில்பெருக்கி வேளாண் துறைபெருக்கிக் கல்வி
எழில்பெருக்கி எல்லா வளத்தின்—வழிபெருக்கும்
வல்லரசைப் பெற்றோமே; வாழ்வாங்கு வாழ்விக்கும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—தமிழாலயன், எழும்பூர், மதுரை மாவட்டம்

நாடும் மொழியும் நற்றமிழர் தம்வாழ்வும்
பீடுறவே முன்னைப் பெருமையெலாம்—கூடிவர
அல்லல் களைகின்ற ஆதவனைப் போலிங்கு
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—அழ. சிதம்பரம், சிந்தாதிரிப்பேட்டை.

கூவம் மணக்கும்; குடிநீர்க் குறைதீர்க்கும்
ஆவலுடன் திட்டமிட்டே ஆற்றுகின்ற—யாவினையும்
வல்லரசு நாடெல்லாம் வாழ்த்தி வரவேற்க
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—எஸ். எம். சுகுமாரன், சென்னை-53

தொல்வழியில் வென்றாண்ட தூய தமிழ்மன்னர்
நல்வழியில் நின்றாண்ட நம்மண்ணை—செல்வழியில்
செல்லரசை வெல்லரசைச் சீரார் தமிழரசை
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—தமிழேந்தி, காங்கேயம்.

ஏருழவன் வாழ்வுயர ஏனைத் தொழில்சிறக்கச்
சீர்மிகுந்த பொங்குதமிழ்ச் செம்மையுறப்—பார்புகழும்
வல்லரசாய்க் காந்தி வழிநடக்கும் கொள்கையுடன்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—இளம்பரிதி, பழனி.

சாதிமுதல் பேதமெல்லாம் சாய்க்கும் தமிழரசை
நீதிமுறை பேணும் நிலையரசை,-மேதினியில்
எல்லார்க்கும் எல்லாம் இனிதளிக்கப் பாடுபடும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—தமிழ்வடிவு, தாராபுரம்.

அரும்பாலை நீர்சுரக்க ஆழ்கிணறு தோண்டி
இரும்பாலை யொன்றினையும் ஈந்து—கரும்பான
வல்லகரம் நீட்டி வறியோர் தமையணைக்கும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—மார்க்கண்டேயன், பசுமலை.

நாட்டில் வளம்பெருக்கி நற்றமிழ்த்தாய்ச் சீர்பெருக்கி
பாட்டாளி மக்கள் பலன்பெருக்கி—ஏற்றமுடன்
பல்லரசும் நம்பெருமை பார்த்துப் பரவுதற்கு
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—மா. மு. தபசு, நான்குனேரி.

மத்தியில் கூட்டரசும் மாநிலத் தன்னரசும்
மெத்தபுகழ் மேதினியில் மேவிடும்—முத்தமிழின்
சொல்லரசர் அண்ணாவின் சொல்லைச் செயலாக்கும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—புலவர் ஏ. பார்த்தசாரதி, கரூர்.

எத்தனையோ ஆண்டுகளாய் ஏங்கித் தவித்திருந்த
முத்தமிழின் சீரை முரசொலித்து—சத்தியத்தில்
வல்லரசாய் மக்களை வாழ்விக்க வந்திட்ட
நல்லரசைப் பெற்றோமே நாம்.
—வாதிராஜ், பழனி.

மக்கள் நலம்பேணி மங்காத் தமிழ்முழங்கி
சிக்கல் களைவதிலே செம்மையுற்று—மிக்கநலம்
பல்துறையும் நாட்டிப் பகையிடத்தும் பண்பாற்றும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ந. ஜபார், சித்தையன் கோட்டை.

தாய்மொழி போற்றுவதால் தாழ்வை யகற்றுவதால்
ஓய்வின்றி நாட்டுக் குழைப்பதனால்—நோய்நீக்கிப்
பொல்லா வறுமையினைப் போக்குவதால் பூங்கொடியே
நல்லரசைப் பெற்றாமே நாம்.

—நா. மரகதம், வெள்ளகோவில்.

கலப்பு மணமக்கள் கண்கலங்கி நின்று
கலக்க முறாவண்ணம் காக்க—மலர்க்குழலீ
வெல்லத் தமிழ்வாழ வெல்லும் குறள்வாழ
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—கழுக்குன்ற வாணன், ஆயர்பாடி.

எல்லாமும் எல்லாரும் எய்திடவே ; இந்நாட்டில்
இல்லாமை இல்லாமல் செய்திடவே—நல்விதமாய்
எல்லாரும் வாழ்ந்திடவே ; என்றென்றும் பாடுபடும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—அ. சே. அ. பண்பழகன், இராயப்பேட்டை.

கன்னித் தமிழும் கலைபலவுங் கைத்தொழிலும்
பொன்னி வளனும் புதுமையுற—மன்னுமுயர்
வல்லரசுங் கண்டு வரிசை புகழ்பாட
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—புலவர் சி. இரத்தினவேலனார், சென்னை-19.

தண்ணாவான் செந்நாவான் தங்கும் புகழ்நாவான்
அண்ணாவால் வந்த அருளரசைக்—கண்ணாக
நல்லுயிர்கள் காத்து நலம்யாவும் சேர்த்தளிக்கும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—அறிஞரடியான், அரிக்காரன்வலசு.

கண்ணான அண்ணா கருத்தை நனவாக்க
எண்ணியே தொண்டுசெய்வோர் எத்துணைபேர்
—மண்ணுலகில்
கல்லக் குடிகொண்டான் காக்கும் தமிழ்நாட்டில்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—வி. இராமகிருட்டிணன், தேதியூர்.

தெள்ளுதமிழ்த் தேன்பரப்பும்; தீரமுடன் தொண்
டாற்றும்
நல்லுணர்வே நாடெங்கும் நாட்டிவரும்—பல்லரசும்
இல்லையிணை என்றேத்தும் ; இன்றமிழர் நாட்டினிலே
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—முத்துவடிவன், கீரனூர்.

கல்லக் குடிகண்டோம் கன்னித் தமிழ்மகளின்
நல்ல நடம்கண்டோம் நாடெங்கும்—உள்ளபடி
வல்லரசுக்(கு) ஈடாக வாழ்கின்றோம் இன்றிங்கே
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ஆர். செங்கமலை, வேப்பந்தட்டை.

கொற்றம் செழிக்கக் குடிமக்கள் தொல்லையெல்லாம்
முற்றும் தொலைக்க முதலமைச்சாய்—நற்றமிழ்ச்
சொல்லரசைப் பெற்றதொடு தூய தமிழ்வளர
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—சி. மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

நாடும் மொழியும் நலஞ்செய் துறைபலவும்
பீடுபெறல் நோக்கிப் பிறநாட்டார்—ஏடுகளும்
வல்லாட்சி வாழ்த்த வளமார் தமிழரசாம்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்,

நற்றமிழை வாழ்த்திடவும் நல்லுழவர் சீரனைத்தும்
பெற்றிடவும், கல்வி பெருகிடவும்—மற்றிங்கே
சொல்லரிய திட்டங்கள் தோன்றிவளம் செய்திடவும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—கோடைப்பொருநன், கோடைக்கானல்.

இன்பத் தமிழுயர ஏற்ற நெறிதழைக்கத்
துன்ப நிலையகலத் தொண்டாற்றி—எண்டிசையும்
நல்லறிஞர் பாராட்ட நம்கலைஞர் ஆளுகின்ற
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—கோபி, புது சித்தாப்புத்தூர்.

தேனார் தமிழ்மணத்தைத் திக்கெட்டும் கொண்டேகிக்
கோனார்ந்த செந்தமிழைக் கோலேந்தி—ஆனார்ந்த
நெல்வயலைத் தெண்ணீரை நேர்பெருக்கி ஏர்காக்கும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—பெ. இராசசுந்தரம், திருவேற்காடு.

சீரார் உருக்காலை சேலத்தில் கண்டதனால்
ஏரார் தொழிலுமெழி லெந்தமிழும் - பாரோர்தாம்
பல்வகையில் பாராட்டப் பண்புடனே ஏற்றமுற
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ஆர். வெங்கசடாசலபதி, வழுதாவூர்.

ஈரா யிரமாண்டெம் இன்றமிழ்த்தாய் நோன்புசெய்து
பேரறிஞர் அண்ணாவைப் பெற்றதனால்—பாராண்டாள்
வல்லரசும் போற்ற வளர்தமிழ் நாட்டினிலே
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—பேகன், மதுரை-1.

தித்திக்கும் செந்தமிழால் திக்கெட்டும் சென்றோதி
எத்திசையும் எத்திடவே இந்நாட்டில்—முத்தமிழைப்
பல்லாண்டாய்க் காத்தளித்த பார்புகழ் அண்ணாவின்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—பாக்கியமணாளன், மட்டப்பாறை

முத்தமிழைப் பேச்சாக மூச்சாகக் கொண்டேநல்
உத்தமர்கள் உள்ளம் உவந்திடவே—எத்திசையும்
நல்ல புகழ்நாட்டி நாளும் நலம்நாடும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—சி. கந்தசாமி, நாச்சியார் கோவில்.

பாரெங்கும் கண்டார் பசுமைப் புரட்சியினை ;
ஊரெங்கும் கல்வி ஒளிவிளக்காம்—பேர்பாடப்
பல்கும் தொழிலோடு பைந்தமிழ்த்தாய் கோலாச்சும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—கே. சின்னசாமி, காட்டுஎடையார்.

பாட்டாளி பாடுபடப் பக்கத் துணையிருந்து
கூட்டாளி போலக் குறைதீர்த்து—நாட்டினிலே
செல்வர் வறியோர் அனைவரையும் சீர்படுத்தும்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ச. வீரப்பன், போதுபட்டி.

தித்திக்குஞ் செந்தமிழில் தேவர் திருக்குறளை
எத்திக்குங் கற்க எடுத்தெழுதி—இத்தரையில்
பொல்லாத நீக்கிப் புகழோங்கச் செய்கின்ற
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—புலவர். வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

வாழையடி வாழையாய் வாட்டும் வறுமையினால்
கூழையே யுண்ணுங் குடிகளாம்—ஏழைகளின்
அல்ல லகற்றி அழகான வாழ்வுபெற
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

வாழ்வாங்கு வாழும் வழிவகைகள் ஆய்ந்தெடுத்துத்
தாழ்வில் வளமை தழைக்கவும்—ஏழ்மையாம்
இல்லாமை கல்லாமை இல்லாதே ஆக்குகின்ற
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ஏ. எம். சிதம்பரநாதன், பூதப்பாண்டி

உண்ணாமல் நன்கு உடுத்தாமல் நாட்டுநலம்
எண்ணாமல் வாழ்ந்த இழிநிலைபோய்—அண்ணாவின்
சொல்லுறுதி கேட்டுத் துணையாக முன்வந்த
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ஏ. எம். அனிபா, பேரையூர்.

கண்ணா யிரமுடைய காவலர்போல் நம்அமைச்சர்
அண்ணா வழிநின்றே ஆளுகின்றார்—எண்ணாத
பொல்லாப்பு வந்தாலும் போக்கும் திறமுடைய
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—சே. சேசுராசா, எம். ஏ., மதுரை.

இல்லை யுணவென்றே ஏங்கிய மாந்தருள்ளம்
இல்லையத் தொல்லையென இன்புற்றே—சொல்லுமுயர்
வல்லரசை , வெல்லரசை , வள்ளுவனார் காட்டிடுமோர்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ஆ. குறள்பித்தன். காரைக்குடி.

கண்ணிற் கருமணியாய்க் கன்னித் தமிழ்காத்து
மண்ணிற் றமிழினத்தின் மாண்புயர்த்தித்—திண்ண
முடன்
சொல்லடங்கா நற்செயல்கள் சோர்வின்றி யாற்றுகின்ற
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—முல்லை நடவரசு, தும்மலப்பட்டி.

மூவரசே ஆள்வதுபோல் முத்தமிழும் சீர்சிறக்க
ஆவின் முறைகேட்டே ஆண்டதுபோல்—காவிரிக்கும்
பல்வளம்போல் நற்செயல்கள் பாரெல்லாம் போற்று
கின்ற
நல்லரசைப் பெற்றோமே நாம் ;

—ப. சின்னச்சாமி, ஏரிப்பாளையம்.

சீரணியை முன்னடத்தித் தேசநலத் தேரேறிச்
சேரலரை நட்பாக்கிச் சேவைஎனும்—தாரணிந்து
சொல்லரசன் அண்ணாவின் தூயவழி ஆட்சிபுரி
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—ஐ. க. பெருமாள்சாமி, பவானி.

எங்கும் தமிழ்மணக்க; எத்திசையும் வாழ்த்தொலிக்க
தங்க இரும்பாலை தந்திட்ட—சிங்கநிகர்
கல்லக் குடிகொண்ட காவலனால் நம்நாட்டில்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—புலவர் ஆ. பே. காந்திதாசன், பல்லவ
ராயன்பட்டி.

சொல்லரசை, வெற்றிச் சுவையரசைப், பாரெல்லாம்
வெல்லரசை, ஆளும் வினையரசைக்—அல்லலுற்றோர்
பொல்லா நிலையகலப் பூத்த தமிழரசாம்
நல்லரசைப் பெற்றோமே நாம்.

—உலகன், ஈரோடை.



# பூவேதான் பூவை

"வேணாமணாளன்"



மண்ணிற்குள் இருக்கின்ற எந்தச் சத்தும்
வளர்கின்ற செடியாக மலராய்ப் பூத்துக்
கண்ணிற்கும் மூக்கிற்கும் விருந்தை நல்கிக்
கையாலே தொட்டாலே மென்மை பாய்ச்சி
அண்ணத்தில் பட்டாலே இனிக்கும் நல்ல
அருந்தேனை ஊட்டுகிற மலர்கள் தாங்கும்
வண்ணம்போல் முன்பிறவி தனிலே பூவாய்
மலர்ந்தே நீ தொடர்ந்தாயோ சொல்லேன், பெண்ணே!

நீராக நெருப்பாக உயிராய் மற்ற
நீளுலகில் எல்லாமாய் நிறையும் ஒன்றே
யாராலும் அளத்தலரும் காற்றும் அன்றோ !
இணையில்லாக் காற்றேபோல் தாயாய்ப் பெண்ணாய்
வாராது வந்தணையும் துணைவி யாகி
வானம்போல் பரந்தகன்ற உறவாய் எல்லாம்
பாராளும் பெண்மானே ! பிறப்பில் முன்னர்
பரவு நலக் காற்றேயோ ! பகர்வாய் பாவாய் !

தான்தழைத்துக் குலைதள்ளிக் கன்றும் ஈன்று
தமிழ்ப்பெண்போல் தலைவணங்கும் வாழை போன்றும்,
ஊன்தனிலே உஞற்றிமிக ஈன்று மாய்ந்தும்
உவந்துமுகம் முறுவலிக்கும் முத்துப் போன்றும்,
மேன்மேலும் அகழ்ந்தாலும் மேனி தாங்கும்
விரிந்தகன்ற அகிலத்து நிலமே போன்றும்,
வான்மருவும் நலமெல்லாம் வாய்க்க எல்லா
வகைப்பிறப்பும் எடுத்தேயோ பெண்ணாய்ப் பூத்தாய் !



சொட்டு சொட்டுன்னு சொட்டுது பாரு இங்கே மழை கொட்டு கொட்டுன்னு கொட்டுது பாரு அங்கே..
மச்சான், கைக் குழந்தையை வச்சுக் கிட்டு இந்த ஓட்டைக் குடிசையில் எப்படித் தூங்குறது ?
மீனாட்சி! இன்றையப் பொழுதை எப்படியாவது தள்ளுவோம். காலையிலே வீட்டுக்காரரைப் பார்த்து புதுசா கூரை போடச் சொல்றேன்
சரி மச்சான்..
ஒழுகத்தான் செய்யும்! நீ தர்ற 15 ரூபா குடக் கூலிக்கு மாடி வீடு கட்டித் தரு வாங்களோ! போ...போ..



என்ன மச்சான் ஆச்சு?
நம்ம செலவிலே கூரை போடச் சொல்றரு; பணத்துக்கு எங்கே போக?
கவலையை விடு மச்சான்! ஏதோ குடிசை மாற்று வாரியமாம். தமிழக அரசு ஏற்படுத்தியிருக்காம். அதிலிருந்து ஒரு அய்யா வந்தாரு, நமக்கு குடிசைக்குப் பதிலா புது வீடு தர்றுங்களாம் சொன்னரு.
!!
குடிசையெல்லாம் வீடாகும் போதினிலே நாங்க தெருவோரம் குடியேறத் தேவையில்லே!
குடிசைப் பகுதி மாற்று வாரியம் வெங்கடாபுரம்.
கோ...



### போரும் வெற்றியும் !

நமது 'தமிழரசு' அக்டோபர் முதல் இதழில் வெளியான ''சேலம் கனிந்தது'' ''இரும்பின் கதை'' என்ற கட்டுரைகள் மிக்க பயனுள்ள கட்டுரைகள்.

சேலம் என்ற பேச்சு தமிழ் மக்களின் இதய மூச்சாக இப்போது அமைந்துவிட்டது. இந்தப் பேச்சைத் தடுத்து நிறுத்தி, நமது மூச்சையும் நிறுத்திவிட யார் யாரோ முயன்றனர். அவர்கட்குத்தான் தோல்வி!

''பொருதுவதே போராகும், பொருத்தமுள்ளோர் பொருதுதலே அதற்குரிய சட்டமாகும்'' என்று புலவர் கரந்தை கணேசன் ''சேலம் இரும்பெடுத்துச் செய்திட்ட போர்வாள்'' கவிதையில் இந்த இதழில் குறிப்பிடுகிறார். ஆம்! ''பொருதுவதே போராகும், அதுவும் பொருத்தமுள்ளோர் பொருதுதலே போராகும்!'' நாம் தொடுத்த போர் அந்தப் போர்தான்! அதனால் தான் வெற்றி.

—ந. தருமலிங்கம், எம்.எல்.ஏ.,
முத்துப்பேட்டை.

### இனிது இனிது, படித்தல் இனிது !

'தமிழரசு' இதழில் வெளியாகும் ஒவ்வொரு கட்டுரையும் படிக்கப் படிக்க இனிமையாக இருக்கிறது. முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை ஒவ்வொரு எழுத்தும் விடாமல் படிக்க வேண்டியவையாக உள்ளன.

''இனிமை; படிக்கப் படிக்க இனிமை''

—அ. சுப்பிரமணியம்,
தும்பலப்பட்டி.

### ஜவஹருக்கும் மலர் தருவீர் !

செப்டம்பர் திங்களில் 'தமிழரசு' அண்ணனுக்கு மலர் எடுத்தது. அக்டோபர் திங்களில் 'தமிழரசு' அண்ணலுக்கு மலர் எடுத்துள்ளது. நவம்பர் திங்களில் ஜவஹருக்கும் மலர் எடுத்து, 'தமிழரசு' ஒரு புதிய பாதையை ஆரம்பித்து வைக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

—எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம்.

### பாராட்டப்படவேண்டிய ஏடு.

கொண்டாட வேண்டிய விழாவைக் கொண்டாட வேண்டிய நேரத்தில் கொண்டாடி, அதன் சிறப்பை வெளியிட வேண்டிய நேரத்தில் 'தமிழரசு' இதழில் வெளியிட்ட நீங்கள் பாராட்டப் படவேண்டியவர்கள்தான்.

—சோலைமலை, அழகர்கோவில்.

### சூடு தந்த குளிர்ச்சி !

'சூடான காபியைப் படித்தேன்; படிக்கும்போது உள்ளம் குளிர்ந்துவிட்டது. காபியின் வயது 2820 என்று அறிந்ததும் வியப்படைந்தேன். இதுபோன்று அரிய செய்திகளை எல்லாம் தந்துவரும் 'தமிழரசை' வாழ்த்தாமல் இருக்க முடியாது.

—மரகதவல்லி, மதுரை.

### கண் திறந்தது !

கண்போல் காப்போம், கண்ணை கண்ணல்லவோ இரண்டு கட்டுரைகளையும் படித்தேன். மூட நம்பிக்கையில் மூழ்கிப் போன எனது கண்களைத் திறந்து விட்டன அந்தக் கட்டுரைகள். கருடப் பார்வையுள்ள எனது ஒரே பெண் குழந்தையை இன்றே கண் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அதன் பின்னர்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். எனக்கு உதவி செய்த ஏடு 'தமிழரசு'.

—ஆர். பரமசிவம், புரசை.

### நெல்லும் பெயராகும் !

''என் மகன் பெயர் ஐயாரெட்டு''-படிக்கப் படிக்கச் சுவையாக இருந்தது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் மொழிக்கிணங்க உணவு தரும் நெல்லைச் சிறப்பிக்க, அதன் பெயரைத் தனது மகனுக்கே சூட்டியுள்ள விவசாயி வாழ்க, வளர்க! அவர் தம் மகன் நீடு வாழ்க!

—திரவியம், தென்கரை.

### ஞானோதயம் தந்த ஞானோதயம் !

'ஞானோதயம்' சிறு கதை என் இதயத்தைக் கவர்ந்தது. முதல்வரின் மதுரைப் பட்டமளிப்பு விழாக் கருத்தைக் கதையாக்கிய சோம. மகாதேவன் பாராட்டுக்குரியவர். இவ்வாறு நமது அமைச்சர்கள் தரும் திட்டங்களைத், தொடர்ந்து கதை வடிவாக்கித் தருமாறு தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

—அ. மோகன், செய்யாறு.

### உள்ளம் கவர் 'தமிழரசு.'

'தமிழரசைப்' பார்க்கும் பொழுது அடையும் மகிழ்ச்சியும், பூரிப்பும் விவரிக்க முடியாது.

'தமிழரசு' ஓர் இலக்கிய ஏடாக மட்டும் வளராமல், அரசு ஆக்கப் பணிகளையும் அழகாகத் தெரியப் படுத்துகிறது.

யாருக்கும் புரியக்கூடிய தமிழில் மலர்ந்து, சாமான்ய மக்களும் வாங்கக் கூடிய விலையில் அமைந்திருக்கும் 'தமிழரசு' ஏற்றமும், எழிலும் கொண்டு தரமான வாசகர்களின் உள்ளத்தையும் எண்ணத்தையும்கவர்ந்து விடுகிறது; 'தமிழரசு'க்கு எனது பாராட்டுக்கள்.

—அ. சேக்மைதீன்,
வத்தலக்குண்டு.



ஆசிரியர்,வெளியிடுபவர் : செய்தித் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

# தித்திக்கும் தீபாவளி

# 1000000

**10 லட்சம் ரூபாய்க்குச் சிறப்புப் பரிசுகள்**



ஒரு சீட்டின் விலை ரூ. 1 தான்

நீங்கள் தரும் ஒரே ஒரு ரூபாயில்

முதல் பரிசு 5 லட்சம் ரூபாய்

2-வது பரிசு 2 லட்சம் ரூபாய்

மூன்று 3-வது பரிசுகள் 3 லட்சம் ரூபாய்

இது தவிர வழக்கமான

பரிசுகள் அத்தனையும் உண்டு!

**10 வரிசைப் பரிசுச் சீட்டுகளுக்கு**

| | | |
|---|---|---|
| 10 | முதல் பரிசுகள் | 10 லட்சம் |
| 100 | 2-ம் பரிசுகள் | 10 லட்சம் |
| 1000 | 3-ம் பரிசுகள் | 10 லட்சம் |
| 5000 | 4-ம் பரிசுகள் | 5 லட்சம் |

ஆக மொத்தம் 45 லட்சம் ரூபாய்!

**பரிசுகள் எண்ணிக்கை 6115**

தமிழ் நாடு அரசு இதுவரை உருவாக்கிய

லட்சாதிபதிகள் 189 பேர்

**நீங்களும் ஒரு ரூபாயில் உங்கள் நல் வாய்ப்பைச்**

**சோதனை செய்யலாமே!**

குலுக்கல் தேதி **30-11-70**

நாட்டின் வளர்ச்சித்திட்டத்தில் உங்கள் பங்கு

இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

செலவு ஒரு ரூபாய்

வரவு பல லட்சம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத் துறை, சென்னை-9.

Registered No. M. 8657 தமிழரசு

